விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 வைகாசி 24 வெள்ளிக்கிழமை (07.06.2013) தொலைபேசி 222 3378, 222-7829 ஒலி 170

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

# 13ஆவது திருத்தத்தில் புதிய யோசனைகள்!

## அமைச்சர் ஹெகலிய அறிவிப்பு

(கொழும்பு), 13ஆம் திருத்தச் சட்டம் தொடர்பில் சில யோசனைத் திட்டங்களை அரசாங்கம் முன்வைத்துள்ளதாக ஊடக அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். மாகாண சபைகளை இணைக்கும் அதிகாரத்தை ரத்துச் செய்தல் உள்ளிட்ட சில யோசனைத் திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

# அழுத்தம் கொடுக்க நேரம் வந்துள்ளது

## சி.என்.என் ஊடகம் தெரிவிப்பு

(அட்லான்டா)

அமெரிக்கா இலங்கை மீது அழுத்தம் கொடுக்க வேண்டிய நேரம் வந்துள்ளது என்று பிரபலச்சர்வதேச ஆங்கில ஊடகமான சிஎன்என் செய்தி சேவை தெரிவித்துள்ளது.

சிஎன்என் இணையத்தளம் வெளியிட்டுள்ள கட்டுரை ஒன்றில் இந்த விடயம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இலங்கையின் மனித உரிமை மீறல் மற்றும் மனிதாபிமானத்துக்கு எதிரான வன்முறைகள் ஐக்கிய நாடுகளின் மனிதவுரிமைகள் பேரவை வரையில் விவாதிக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்த விடயங்களில் இலங்கை இன்னும் பொறுப்புடைமையை காண்பிக்கவில்லை இந்த நிலையில் சர்வதேச விசாரணை ஒன்று அவசியம் என்றும் பல்வேறு தரப்பில் இருந்தும் கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன.

எனவே மனித உரிமைகள மற்றும் மனிதாபிமான விடயங்கள் தொடர்பில் இலங்கை மீது இந்த் தருணத்திலேயே அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டும் என்றும் சிஎன்என் செய்தி சேவை தெரிவித்துள்ளது. (எ-11)

## 11 ஆண்டுகளின் பின் சந்தேக நபர் விடுதலையானார்

(யாழ்ப்பாணம்)

நண்பனைக் கொலை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் ஒருவர் 11 வருடங்களின் பின்னர் நேற்று வியாழக்கிழமை யாழ்.மேல் நீதிமன்றத்தினால் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் திருநெல்வேலி, மாரியம்மன் வீதியைச் சேர்ந்த பத்மநாதன் ஜெனிசீலன் (வயது 28) என்ற நபரை கடந்த 2002 ஆம் ஆண்டு செப்டெம்பர் 9-ம் திகதி கொலைசெய்த குற்றச்சாட்டில் சந்தேகத்தின் பேரில மூவர் கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு இருந்தனர். (20ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை-சீன விவகாரத்தில் இந்தியா ஒதுங்க வேண்டும்!

## - அமைச்சர் சம்பிக்க



இலங்கை மற்றும் சீனா நாடுகளுக்கு இடையிலான உறவு விவகாரத்தில் இந்தியா ஒதுங்கி நிற்க வேண்டும் என அமைச்சர் சம்பிக்க ரணவக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

காஷ்மீர் விவகாரத்தில் இந்தியாவுடன் இலங்கை எவ்வாறு தலையிடாமல் இருக்கிறதோ, அதேபோன்று சீனாவுடனான எமது உறவுகள் விவகாரத்திலும் இந்தியா தலையிடக் கூடாது.

உண்மையில் சீனாவுடன் இந்தியா மிகப் பெரிய வர்த்தகப் பங்காளியாக உள்ளது: இரு நாடுகளும் தமக்கிடையான பிரச்சினைகளை சுதந்திரமாக தீர்த்துக் கொள்ள வேண்டும்.

ஏனைய நாடுகள் தமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கான போர் வலயமாக இலங்கையினைப் பயன்படுத்திக் கொள்ள எம்மால் அனுமதிக்க முடியாது என (20ஆம் பக்கம் பார்க்க)

# மாகாண சபைகளில் ஆளுநருக்கு அதிகாரம்

## சுமந்திரன் குற்றச்சாட்டு

மாகாண சபைகளில் ஆளுநருக்கு நிறைவேற்று அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

மாகாண ஆளுநருக்கு உள்ள நிறைவேற்று அதிகாரங்கள் மாகாண அமைச்சரவைக்கு பகிரப்பட வேண்டும்.

எனினும் இலங்கையின் அரசியலமைப்பின்படி, நிறைவேற்று அதிகாரங்கள் ஆளுநரிடம் குவிந்து காணப்படுகின்றன. மக்களின் எதிர்பார்ப்புக்களைப் புரிந்து கொண்டு அதற்கு ஏற்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

மாகாண அமைச்சரவையானது, போதுமானளவு நிறைவேற்று அதிகாரங்களை கொண்டிருக்க வேண்டும். கூடுதலான அதிகாரங்கள் இருந்தால் மாகாணத்தின் அபிவிருத்திப் பணிகளை மேம்படுத்த முடியும்.

இலங்கை மற்றும் தமிழக மீனவர்களின் ஆழ்கடல் மீன்பிடிப் பிரச்சினைகள் தொடர்பில் இலங்கை அரசாங்கமும் இந்திய அரசாங்கமும் மாற்றுத் தீர்வுகளை காண முன்வரவேண்டும்.

இலங்கையின் மீனவர்களை ஆழ்கடல் மீன்பிடிக்கு அனுமதிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு, இந்திய (20ஆம் பக்கம் பார்க்க)

# கூட்டமைப்பு வெல்லட்டும்!

## அமைச்சர் விமல் பெருந்தன்மை

வட மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வெற்றி பெற்றாலும் பரவாயில்லை என்று அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மாகாண சபைகளுக்கான காணி மற்றும் பொலிஸ அதிகாரங்கள் என்பன நீக்கப்படுகின்றன. இந்த நிலையில் தமிழ் மக்கள் அனைவரும் தமிழத் தேசிய கூட்டமைப்புக்கே வாக்களித்தாலும் பரவாயில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக தமிழ் தேசிய கூட்டமைப்பு வட மாகாண சபைத் தேர்தலில் வெற்றிப் பெறும் என்ற நிலையில், அந்த தேர்தல்களுக்கு விமல வீரவன்ச எதிர்ப்பை வெளியிட்டு வந்திருந்தார்.

எனினும், கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆளும் தரப்பு கட்சித் தலைவர்களின் சந்திப்பின்போது, மாகாண சபைகளில் இருந்து காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை முற்றாக நீக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, தமது தீர்மானத்தை மாற்றிக் கொண்டிருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி வட மாகாண சபை தேர்தல்நடத்தப்படுவதால், தற்போது நாட்டுக்கு ஆபத்து இல்லை என்றும் விமல வீரவன்ச தெரிவித்துள்ளார்.

இதேவேளை நீண்டகாலமாக இழுபட்டுக் கொண்டிருக்கின்ற (20ஆம் பக்கம் பார்க்க)

## கஞ்சா விற்ற இருவர் கைது

யாழ்ப்பாணத்தின் முக்கிய சில வீதி ஒழுங்கைகளில் கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட இருவர் நேற்று வியாழக்கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ்.பொலிஸார் தெரிவித்துள்ளார்.

யாழ்.பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து 800 கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் யாழ்.பொம்மைவெளிப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் (20ஆம் பக்கம் பார்க்க)

## சட்டம் ஒழுங்கை பேண அமெரிக்கா உதவும்!

இலங்கையில் சட்டம் ஒழுங்கை மேம்படுத்த உதவியளிக்கப்படும் என அமெரிக்கா அறிவித்துள்ளது. பத்தரமுல்லையில அமைந்துள்ள நீதியமைச்சின் ஆய்வுகூடத்திற்கு இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மிச்சல் சிசன் விஜயம் செய்துள்ளார்.

அமெரிக்காவின் உதவியுடன் இந்த நவீன ஆய்வு கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் சட்டம் ஒழுங்கை மேம்படுத்த அமெரிக்கா முனைப்புடன் செயற்பட்டு வருகின்றமை இந்த உதவியின் மூலம் நிரூபணமாகியுள்ளதாக அமெரிக்கத் தூதுவர் சிசன் தெரிவித்துள்ளார்.

இரசாயன பகுப்பாய்வு உள்ளிட்ட பல்வேறு நீதிமன்றத் துறையின் மேம்பாட்டுக்கு தேவையான வசதிகளை இந்த ஆய்வு கூடம் கொண்டமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ-11)

## முஸ்லிம் அமைப்பு குறித்து தேசிய கொள்கை தேவை

### பொது பல சேனா அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் இயங்கும் முஸ்லிம் அமைப்புக்கள் தொடர்பில்தேசிய கொள்கை ஒன்றை உருவாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொது பல சேனா அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

அதன் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்தார். இன்று வெவ்வேறு வழிகளில இரண்டு முஸ்லிம் அரச சார்பற்ற நிறுவனங்கள் மீண்டும் ஹலால் பிரிவினையை ஏற்படுத்த முயற்சித்து வருகின்றன.

முன்னர் பள்ளிகளில் மாத்திரம் காணப்பட்ட மத்ரசா பாடசாலைகள் தற்போது நாட்டில் எல்லாப் பகுதிகளிலும் காணப்படுகின்றன. அவற்றின் மூலம் முஸ்லிம் மக்கள் கடுமைப்போக்கு வாதம் பரப்பப்படுகின்றது.

இந்த விடயங்கள் தொடர்பில் அரசாங்கம் அவதானத்துடன் இருக்க வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 27 நாட்களேயான குழந்தை மரணம்

(யாழ்ப்பாணம்)

பிறந்து 27 நாட்களேயான ஆண் குழந்தையொன்று மலம் வெளியேறாது அவதிப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளது.

கர்ப்பிணியாக இருந்த போது கணவனின் காலால் உதைக்கப்பட்ட நிலையில் பிரசவித்த கர்ப்பிணிப் பெண்ணொருவரின் ஆண் குழந்தையே 27 நாட்களின் பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலையில் மரணமாகியுள்ளது.

கடந்த 05 ஆம் திகதி இடம்பெற்ற இச்சம்பவத்தில் சுழிபுரத்தைச் சேர்ந்த 23 வயதுடைய முருகையா குமுதினி என்ற பெண்ணின் ஆண் குழந்தையே உயிரிழந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது .

சுழிபுரத்தைச் சேர்ந்த இவர் ஒருவரை காதலித்து அவருடன் வாழ்தற்கு சென்றுள்ளார். இதன்போதே தான் ஏமாற்றப்பட்டதை அறிந்ததோடு அவர் ஏற்கெனவே இரண்டு திருமணங்களை புரிந்துள்ளதையும் அதில் முதல் மனைவிக்கு மூன்று ஆண் பிள்ளைகளும் இரண்டாவது மனைவிக்கு ஒரு ஆண் பிள்ளையும் உள்ளதை அறிந்துள்ளார்.

இதன் பின்னர் தொடர்ச்சியாக கணவரால் தான் துன்புறுத்தப்பட்டதாக இவர் விசாரணைகளில் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் கடந்த மே மாதம் 06-ஆம் திகதி அன்று நிறை மாதக் கர்ப்பிணியாக இருந்த இவரை இவரது கணவன் முதுக்குப் பகுதியில் காலால் உதைத்து தாக்கியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனைத் தொடர்ந்து சங்கானை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர் 07 ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

மனைவியைத் தாக்கிய சம்பவம் தொடர்பில் இவரது கணவரான சிங்கராஜா அலிஸ்ரன் வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார்.

மே மாதம் 10 திகதி ஆண் குழந்தையை பிரசவித்த இவர் தொடர்ந்து 23 நாட்கள் வைத்தியாசாலையில் தங்கியிருந்ததோடு இவரது குழந்தை வைத்திசாலையில் சிகிச்சை பெற்று வந்துள்ளது.

கடந்த 4-ம் திகதி வைத்தியசாலையிலிருந்து வீட்டிற்கு தனது குழந்தையுடன் சென்ற இவர் மீண்டும் அடுத்த நாள் காலையில் குழந்தைக்கு மலம் வெளியேறவில்லை என்று தெரிவித்து வைத்தியசாலைக்கு கொண்டு வந்துள்ளார். ஆனால் குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட திடீர் மரணவிசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் சடலத்தை பிரேதப் பரிசோதனைகளின் பின்னர் தாயிடம் ஒப்படைக்க உத்தரவிட்டார். (எ-6,11)

## தேவாலயம் மீது தாக்குதல்

(கொழும்பு)

கொழும்பின் புறநகர் மொரட்டுவ அங்குலான பகுதியில் நேற்று இரவு கிறிஸ்தவ ஆலயம் ஒன்றின் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இனந்தெரியாத குழுவினர் குறித்த ஆலயம் மீது தாக்குதல் நடத்தியதுடன் தீயிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் போது, இரண்டு சிலைகளுக்கும் தேவாலய சொத்துக்களுக்கும் சேதம் ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எனினும் இந்த சம்பவத்தின் போது எவருக்கும் பாதிப்புக்கள் ஏற்பட்டதாக தகவல்கள் எவையும் கிடைக்கவில்லை.

அமெரிக்க ராஜாங்க திணைக்களம், இலங்கையில் மதத்தலங்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்படுவதாக குற்றம் சுமத்தி, அறிக்கை ஒன்றை வெளியிட்ட சில தினங்களிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. (எ-11)

# மின்சாரம் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடம் நகர்த்த வேண்டியிருப்பதாலும், புதிய உயர் அழுத்த மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காகவும் இன்று வெள்ளிக்கிழமை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் நவிண்டில் தாமோதரம் வித்தியாலயத்திலிருந்து இரும்பு மதவடி வரையான பிரதேசம், இயக்கச்சி சங்கத்தார் வயல் பிரதேசம் ஆகிய இடங்களிலும்

நாளை சனிக்கிழமை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் பிறவுண் வீதி, கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டி, தட்டார் தெரு தொடக்கம் முட்டாஸ் கடைச் சந்தி வரையான பிரதேசம், மனோகரா பிரதேசம், கல்வியன்காடு, நல்லூர், அரியாலை, செம்மணி, நாவற்குழி, அச்சுவேலி இடைக்காடு, பத்தமேனி, வளலாய், தொண்டைமானாறு வீதிப் பிரதேசம், இயக்கச்சி சங்கத்தார் வயல் பிரதேசம் ஆகிய இடங்களிலும்

மறுநாள் 9-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரையும் பரமேஸ்வராச் சந்தி, பலாலி வீதி, விஞ்ஞானப் பீட பிரதேசம், அரசடி வீதி, கொழும்புத்துறை வீதி, ஈச்சமோட்டை, பாசையூர், குருநகர், கந்தர்மடம், ஆரியகுளம், ஸ்ரான்லி வீதி, வேம்படிப் பிரதேசம், கொன்வென்ட் பிரதேசம், பிரதான வீதி, வல்லை முதல் மந்திகை வரையான வடமராட்சிப் பிரதேசம், இயக்கச்சி சங்கத்தார் வயல் பிரதேசம் ஆகிய இடங்களிலும்

10-ம் திகதி திங்கட்கிழமை 8.30 மணியிலிருந்து மதியம் 12.30 மணிவரையும் தொண்டைமானாறு வீதிப் பிரதேசம், குஞ்சர் கடைப் பிரதேசத்தின் ஒரு பகுதி, உடுப்பிட்டி, தொண்டைமானாறு, வல்வெட்டித்துறை, வல்வெட்டி, நவிண்டில், இயக்கச்சி, சங்கத்தார் வயல் பிரதேசம் ஆகிய இடங்களிலும்,

11-ம் திகதி செவ்வாய்க்கிழமை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் மானிப்பாய் ஈஞ்சை வைரவர் கோவில் பிரதேசம், மாலுசந்தி, அல்வாய், வியாபாரி மூலைப் பிரதேசங்கள், நவிண்டில் தாமோதரம் வித்தியாலயத்திலிருந்து இரும்பு மதவடி வரையான பிரதேசம், இயக்கச்சி சங்கத்தார் வயல் பிரதேசம் ஆகிய இடங்களிலும்,

12-ம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரையும் அச்சுவேலி, இடைக்காடு, பத்தமேனி, வளலாய், தொண்டைமானாறு வீதிப் பிரதேசம், இயக்கச்சி சங்கத்தார் வயல் பிரதேசம் ஆகிய இடங்களிலும்,

13-ம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரையும் நெல்லியடிப் பிரதேசத்தின் ஒருபகுதி, வதிரி, அல்வாய் பிரதேசத்தின் ஒருபகுதி, திக்கம், மானிப்பாய் ஈஞ்சை வைரவர் கோவில் பிரதேசம், இயக்கச்சி சங்கத்தார் வயல் பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (எ-11)

## மகளின் காதலுக்கு எதிர்ப்பு தாய் தீக்குளித்துப் பலி

(கரவெட்டி)

தனது மகள் காதலனுடன் ஓடிச் சென்று பதிவுத் திருமணம் செய்ததை அறிந்த தாய் உடலில் எண்ணெய் ஊற்றி தீ வைத்துத் தற்கொலை செய்து கொண்டுள்ள சம்பவமொன்று வடமராட்சியில் இடம்பெற்றுள்ளது. இச் சம்பவமானது யாழ். வடமராட்சிப் பிரதேசத்தின் வல்வெட்டித்துறைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

21 வயதுடைய தனது ஒரே மகள் வயதுடைய காதலனுடன் ஓடிச் சென்றதைத் தாங்க முடியாது தாய் தன்னைத் தானே தீ மூட்டித் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தீ மூட்டி உயிரிழந்த தாயின் சடலம் மந்திகை வைத்தியசாலையில் சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக வல்வெட்டித்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (எ-24,43)

## கலந்துரையாடல்

வலிகாமம் வடக்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் வாடகை முச்சக்கரவண்டி சேவையினை ஒழுங்கமைத்தல், சங்கம் அமைத்தல் ஆகியவை தொடர்பான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தலை மையலுவலகத்தில் நடைபெறவுள்ளதால், வாடகை முச்சக்கர வண்டி சேவையினை நடத்தும் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (எ-11)


பிள்ளையார் இன்

25% கழிவு

இன்றுமுதல் அதி விசேட 25% விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் காலை. மாலையில் வழங்கப்படும்.

இன்றைய விசேட உணவு :-

தோசை உருளைக்கிழங்கு கறியுடன் ரூ 120/-

மசாலா தோசை உருளைக்கிழங்கு கறியுடன் ரூ 120/-

(c-3499) தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829


## கண்ணீர் அஞ்சலி!

அமரர் புதுநாயகம் தேவராசா அவர்கள்

தோற்றம் : 1939.10.26 மறைவு : 2013.06.06



எமது கல்லூரியின் அதிபர்
திரு.செ.சேதுராஜா
அவர்களது அன்பு மாமியார்
திருமதி.புதுநாயகம்
தேவராசா
அவர்கள்
காலமான செய்திகேட்டு
மிகுதுயரடைகின்றோம்.
அவரது
குடும்பத்தவரின் துயரில்
நாமும் பங்கேற்று
அன்னாரது ஆத்மா
சாந்தியடையப்
பிரார்த்திப்பதோடு
எமது அஞ்சலிகளையும்
காணிக்கையாக்குகின்றோம்.

கல்லூரிச் சமூகம்
யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்
தேசியப் பாடசாலை
கரவெட்டி.
(சி-3528)


விற்பனைக்கு

ஜேர்மன் செப்பட் 65 நாட்களான 4 நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு.

மாலு சந்தி

தொடர்பு:-077 1986316

(சி-3534)

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்




(சி-3533)

செல்லா சினிமா யாழ்ப்பாணம்




வலிகாமம் தெற்கு பிரதேச சபை

VALIKAMAM SOUTH PRADESHIYA SABHA
CHUNNAKAM

கடைகளை வாடகைக்கு வழங்குதல்-2013

எமது சபையின் 23.05.2013-ம் திகதிய பத்திரிகை விளம்பரத்தில் பின்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

05. விண்ணப்ப படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 07.06.2013 12 மணி

பெற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்ப படிவங்கள் திறக்கப்படும் திகதி 07.06.2013 பி.ப 2.00

தி.பிரகாஷ், தவிசாளர்

வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.

(C-3532)

குறைந்த கட்டணத்தில் பொதிகள் சேவை மற்றும் விமான பயண சீட்டுக்கள்

லண்டன், கனடா, ஜேர்மனி, சுவிஸ், பாரிஸ், இந்தியா, சிங்கப்பூர், மலேசியா மற்றும் ஏனைய நாடுகளுக்கு

கட்டணங்கள் (1 Kg) இற்கு
லண்டன் 1500 /-
கனடா 2600 /-



விசேட கட்டணங்கள் (5 Kg) இற்கு
சுவிஸ் 7800 /-
அவுஸ்திரேலியா 5500 /-
ஜேர்மனி 5500 /-

குறிப்பு : கருவாடு, மருந்து வகை, எண்ணெய் வகைகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

visa பெறுவதற்கான ஒழுங்குகள்: இந்தியா, மலேசியா, இந்தோனேசியா, பாங்கொக், டுபாய், சீனா (China) ஆகிய நாடுகளுக்கு குறுகிய காலத்தில் visa பெற்றுக் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு : Rainbow Travels
30/2, 3ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
T.P. : 021 221 9596, 077 87 10 732

(3531)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## வாதத்துக்கு மருந்து

ஒரு ஊரிலே பெரியவர் இருந்தார். அவர் பார்வையிழுந்தவர். வாதாடுவதிலே சாலச் சிறந்தவர். தர்க்கத்திலே மேதை.

அவரிடம் சிலர் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது அவர் சொன்னார்;

"சூரியன் வெளிச்சத்தைக் கொடுக்கிறது. சந்திரன் ஒளியைக் கொடுக்கிறது. விண்மீன்கள் மின்னி மின்னி பிரகாசிக்கிறது. வெளிச்சம் இருப்பதால்தான் நமக்கு ஏவ்வளவோ உபயோக மாக இருக்கிறது" என்றார்.

உடனே பார்வை இழந்த அந்தப் பெரியவர்; வெளிச்சம் என்ற ஒன்று உண்மையிலேயே இருக்கிறதா?" என்றார்.

"உண்மையிலேயே ஒளி இருக்கிறது!" என்றார்.

"நான் அதை நம்பமாட்டேன்" என்று கூறினார்.

"சூரியன்... சந்திரன்... நட்சத்திரம்... இவையெல்லாம் இருக்கிறதாகச் சொன்னார்கள்"

அதையெல்லாம் ஒப்புக் கொள்கிறேன். ஆனால்... அதையெல்லாம் என்னை சற்றுத் தொட்டுப் பார்க்க விடுங்கள்" என்றார்.

"அவற்றினை தொட்டு அறிய முடியாது" என்றார்.

"அப்படியென்றால்... முகர்ந்து அறிகிறேன். முகர்ந்து பார்க்க விடுங்கள்... ஏதாவது வாசனை வருகிறதா... என்று பார்க்கி றேன்" என்று சொன்னார்.

"அதுவும் முடியாது" என்றார்.

"சரி... அதுவும் முடியவில்லையென்றால், அந்த வெளிச்சத்திலே சிறிதளவு எடுத்து என் கையிலே கொடுங்கள். வாயிலே போட்டு விழுங்கி ருசித்துக் கொள்கிறேன்" என்றார்.

அவரை எந்த வகையிலேயும் ஒப்புக்கொள்ள வைக்க முடிய வில்லை.

அவரைச் சுற்றியிருந்தவர்கள் எல்லோரும் குழப்பமடைந்தார்கள்.

"என்ன... நாங்கள் சொல்வதை நீங்கள் நம்பவில்லையா?" என்றார்.

என்னுடைய நான்கு புலன்களுக்கும் புலப்படாத ஒன்றை நான் "மாயை" என்கிறேன். நீங்கள் என்னை அவமானப் படுத்துவதற்காக இப்படிச் சொல்கிறீர்கள் என்று நினைக் கிறேன்.

ஏதோ உங்களுக்கெல்லாம் "பார்வை" இருப்பதாகவும்... அது எனக்கு இல்லைஎன்று சொல்லி நீங்கள் அவமதிக்கிறீர்கள்" அப்படியென்றார் தர்க்க சாஸ்திரத்திலே மேதையான அந்தப் பெரியவர்.

சுற்றியிருந்தவர்கள் பார்த்தார்கள்... "வெளிச்சம் இருக் கிறதை இவர் நம்ப வேண்டும்... இவரை நம்ப வைக்க வேண்டு மென்றால்... அது புத்தராலேதான் முடியும்" என்று கூறி னார்கள்.

"சரி அவரிடம் போவோம்" என்று எல்லோரும் முடிவெடுத்து போய்ச் சேர்ந்தார்கள்.

புத்தரிடம் விபரத்தை எடுத்துரைத்தார்கள்.

புத்தர் சிரித்தார். உண்மை எப்படிப்பட்டது என்று நான் நினைக் கிறேனோ அப்படித்தான் அவரும் நினைக்கிறார். எதையும் அனுபவபூர்வமாக உணர்ந்தால்தான் நம்பமுடியும்.

"ஒளியை அனுபவித்து அறியாத வரையில் அது இருக்கிறதா இல்லையா என்ற கேள்விக்கே இடமில்லை. அதனாலே இவர் அதை நம்பாததும் சரிதான்" என்று கூறினார்.

அதன்பின் சொன்னார்; "உங்களைக் குணப்படுத்தி விட லாம்... உங்களுக்குத் தேவை ஞானி அல்ல... மருத்துவர்தான்" என்றார்.

ஒரு வைத்தியரிடம் அழைத்துக்கொண்டு சென்றார்கள். பார்வை கிடைக்கப் பெற்றது... வெளிச்சத்தைக் கண்டதும் அவர் மகிழ்ச்சி அடைந்தார். புத்தரை வணங்கினார்.

"நான் வாதம் செய்தேன்... நீங்கள் எதிர்வாதம் செய்ய வில்லை. என்னுடைய பிரச்சினை மருத்துவரால்தான் தீரும் என்று சொல்லி எனக்குப் பார்வை கிடைக்கச் செய்தீர்கள்" என்றார்.

மனித குலத்தின் மிகப் பெரும்பாலானவர்கள் நிலைமை இதுதான் அப்படியென்கிறார் ஓஷோ!

இந்தக் காலத்திலே சில பேர் கண்களைத் திறந்து கொண்டு சில காரியங்கள் செய்வார்கள். அது பிழையென்பது அவர்க ளுக்குப் பின்புதான் புரியும்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# புற்றுநோயால் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு அரசாங்க நிறுவனங்கள் உதவி

(சுழிபுரம்)

சர்வதேச புற்றுநோய் தினத்தை முன்னிட்டு இரத்தப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த வலி.மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட விழிசுட்டி சங்கானையைச் சேர்ந்த ச.டிலக்ஷிகாவின் சிகிச்சைக்காகவும் வாழ்வாதார உதவிக்காகவும் 75 ஆயிரத்து 70 ரூபா பணம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வலி.மேற்கு பிரதேச சபையில் வழங்கப்பட்டுள்ளது.

வலி.மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட 15 வயது சிறுவர்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டபோதே டிலக்ஷிகாவுக்கு இரத்தப்புற்றுநோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து இது விடய த்தை சபையின் தவிசாளர் ,மாவட்ட மட்டத்திலுள்ள உள்ளூராட்சி சபைகள், பிரதேச செயலகங்களின் கவனத்திற்கு கொண்டுவந்து உதவியில் உதவி எனும் தலைப்பின் கீழ் உதவி செய்யுமாறு கோரிக்கை விடுத்தார்.

இதன் பயனாக நல்லூர் பிரதேச செயலகம் 26 ஆயிரம் ரூபா, சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் 21 ஆயிரத்து 60 ரூபா, வேலனை பிரதேச செயலகம் 10 ஆயிரம் ரூபா, யாழ்.மாநகரசபை 9 ஆயிரத்து 360 ரூபா, சாவகச்சேரி நகரசபை 2 ஆயிரத்து 650 ரூபா, வலிகாமம் மேற்கு பிரதேச சபை 8 ஆயிரத்து 600 என்ற அடிப்படையில் மொத்த தொகையாக 77 ஆயிரத்து 670 ரூபா நிதி சேர்க்கப்பட்டது.

இந்நிதியில் 2 ஆயிரத்து 600 ரூபா பணம் கடந்த 4 ஆம் திகதி ச.டிலக்ஷிகாவிடம் வழங்கப்பட்டது. மிகுதி 75 ஆயி ரத்து 70 ரூபாவை சங்கானை மக்கள் வங்கி கணக்கு 108-200-170023 811 என்ற இலக்கத்திற்கு வைப்பிலிடப்பட்டு அவரின் தாயா ரான திருமதி ச.இராசமலரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ச.டிலக்ஷிகா என்ற மாணவி சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயத்தில் தரம் 7 இல் கல்வி கற்று வருகின்றார். இவருக்கு உதவ முன்வருபவர்கள் நேரடியாகவோ அல்லது வலி.மேற்கு பிரதேச சபையினூடாகவோ உதவிகளை செய்யுமாறு தவிசாளர் திருமதி நா. ஐங்கரன் கேட்டுள்ளார். (அ)

# கலாசார விழாவும் மாணவர் கௌரவிப்பும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் கலாசார நிகழ்வும் மாணவர் கௌரவிப்பு நிகழ்வும் எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு யாழ் .வேம்படி பெண்கள் உயர்தரப்பாடசாலையில் நடைபெறவுள்ளன. இந்நிகழ்வில் 2012 ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் 9 ஏ மற்றும் 8 ஏ பெறுபேறுகளைப் பெற்று சித்தியெய்திய மாணவர்களும் 2012 ஆம் ஆண்டு க.பொ. த. உயர்தரப் பரீட்சையில் 3ஏ பெறுபேறுகளைப் பெற்று சித்தியடைந்த மாணவர்களும் தரம்-5 புலமைப்பரிசில் பரீட் சையில் வலய மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப்பெற்ற மாணவர்களும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறியினால் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

கௌரவ விருந்தினராக ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் வடமாகாணக் கல்விப்பணிப்பாளர் வி. செல்வராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 30 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 75 | 70-120 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 120 | 80 | 120 | 100 |
| தக்காளி | 120 | 80 | 120 | 120 |
| மரவள்ளிக் கிழங்கு | 60 | 40 | 60 | 60 |
| கோவா- | 140 | 100 | 100 | 120 |
| கரட் | 100 | 80 | 120 | 160 |
| பூசணி | 50 | 40 | 40 | 40 |
| புடோல் | 40 | 60 | 60 | 60 |
| வாழைக்காய் | 40 | 30 | 60 | 40 |
| சின்ன வெங்காயம் | 180 | 200-240 | 140-200 | 130-200 |
| பெரிய வெங்காயம் | 70 | 70 | 80 | 80 |
| பாகற்காய் | 100 | 100 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 100 | 70 | -- | 100 |
| பயற்றங்காய் | 60 | 60 | 40 | 40 |
| லீக்ஸ் | 140 | 160 | 140 | 160 |
| பீற்றூட் | 100 | 70 | 160 | 120 |
| கறிமிளகாய் | 140 | 140 | 120 | 160 |
| முருங்கைக்காய் | 300 | 300 | 400 | 320 |
| போஞ்சி | 160 | 80 | 120 | 160 |
| கத்தரிதம்புள்ள | 30 | 30 | 30 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 30 | 30 |
| தேசிக்காய் | 200 | 90 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40 | 40 | 30-40 |
| இராசவள்ளி | 100 | 100 | 120 | 120 |

# இராசி பலன்

*07.06.2013*
*(வைகாசி 24, வெள்ளிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு*
*சதுர்த்தசி முன்னிரவு 7.47 மணிவரை*
*கார்த்திகை மாலை 6.06 மணிவரை*
*இராகுகாலம் 10.22-11.52 மணிவரை*
*சுபநேரம் 5.52-7.22 மணிவரை*

**மேடம்** விடியும் பொழுதே சுப தகவல்கள் வந்து சேரலாம், பணத்தேவைகள் பூர்த்தியாகும், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கலாம், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்.

**இடபம்** விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், தொலைபேசி வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம், கனிவாகப் பேசி காரியம் சாதித்துக்கொள்ள வேண்டிய நாள், போசன நன்மையுண்டு.

**மிதுனம்** ஆனைமுகனை வழிபட்டு ஆனந்தம் காண வேண்டிய நாள், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம் பெறலாம், எடுத்த செயலை முடிக்க ஒரு முறைக்கு பலமுறை அலைய வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

**கடகம்** பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், மற்றவர்கள் கடுமையாக நினைக்கும் வேலையொன்றை நீங்கள் எளிதாக செய்து முடிப்பீர்கள், அதிர்ஷ்டகரமான நாள், உற்சாகத்துடன் செயற்படுவீர்கள்.

**சிங்கம்** சந்தோசமான சம்பவங்கள் நடைபெறும் நாள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், வீட்டை அழகுபடுத்தும் முயற்சியில் ஈடுபாடு காட்டுவீர்கள், ஆரோக்கியமான நாள்.

**கன்னி** தடைப்பட்ட காரியங்கள் தானாகவே நடைபெறும், பிரிந்து சென்றவர்கள் பிரியமுடன் வந்திணைவர், நிலபுலன்களால் ஆதாயமுண்டு, அதிகம் செலவாகும் என நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடியலாம்.

**துலாம்** ஆனைமுகனை வழிபட்டு ஆனந்தம் காண வேண்டிய நாள், எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங் கள் ஏற்படலாம், மனச்சஞ்சல ங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம்.

**விருச்சிகம்** திடீர் பயணங்கள் மகிழ்ச்சிதரும் விதத்தில் அமையும், தெய்வீக சிந்தனை மேலோங்கும், உடன் பிறப்புக்கள் உதவி செய்ய முன் வருவர், வருங்கால நலன் கருதி புது முயற்சிகள் எடுப்பீர்கள்.

**தனுசு** கடன்சுமை குறைந்து கவலைகள் தீரும் நாள், இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் வெற்றிதரும், புகழ்மிக்கவர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், போட்டிகளில் வெற்றி கிடைக்கும்.

**மகரம்** செல்வாக்கு மேலோங்கும் நாள், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கும்பம்** வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், தாய்வழி உறவினர்களால் நன்மையுண்டு, நீங்கள் தேடிச் செல்ல நினைத்த நபர் உங்கள் இல்லம்தேடி வரலாம், சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**மீனம்** பெரிய மனிதர்களின் தொடர்பால் உள்ளம் மகிழ்வீர்கள், செய்தொழிலில் எதிர்பார்த்த சில திருப்பங்கள் ஏற்படலாம், வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முற்றாக இடிந்து வீழ்ந்தது அல்வாய் நாவலடிப் பாலம்

(கரவெட்டி)

அல்வாய் நாவலடிப் பாலம் முற்றாக இடிந்து விழுந்தமையால் அவ்வீதியால் போக்குவரத்து செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி மக்களும் பயணிகளும் விசனம் தெரிவித்துள்ளனர்.


அல்வாய் நாவலடிப் பாலத்தின் ஒரு பகுதி கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இடிந்து விழுந்தது. இதனால் அவ் வீதியால் வாகனங்கள் பயணிக்க முடியாத நிலை இருந்து வந்துள்ளது.

பின்னர் சில தினங்களுக்கு முன்னர் பாலத்தின் மற்றுமொரு பகுதி முற்றாக இடிந்து விழுந்துள்ளது.

இதன் காரணமாக தற்பொழுது அவ்வீதியால் முற்றாக பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இப்பாலம் இடிந்து விழுந்தமை தொடர்பாக பல தடவைகள் வீதி அபிவிருத்தி அதிகார சபை, பருத்தித்துறை பிரதேச சபை மற்றும் பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டும் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் இப்பாலத்தைக் கண்டும் காணாதது போல் இருப்பதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இப்பாலத்தை மிக விரைவாக புனரமைத்து தர வேண்டும் எனவும் புனரமைக்க தவறும் பட்சத்தில் அப்பாலத்தினால் பாரிய உயிர்ச் சேதம் ஏற்படும் எனவும் அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (அ-3-24)



நன்றி: ஐலண்ட்

# வாக்காளர் பெயர்ப்பட்டியலை இராணுவம் கோருகின்றதா?

## கேட்டார் அமைச்சர் டக்ளஸ்; தெரியாதென்றார் யாழ்.அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

வாக்காளர் பெயர் பட்டியலை இராணுவத்தினர் கோரும் விடயம் எனக்குத் தெரியாது என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்திலுள்ள கிராம சேவையார்கள் ஊடாக இராணுவத்தினர் வாக்காளர் பெயர் பட்டியலைப் பெற முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றனர் என வடக்கு மாகாண பிரதித் தேர்தல் ஆணையாளரும் யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளருமான பி.அச்சுதனிடம் கிராம சேவையாளர்கள் முறையிட்டும் உள்ளனர்.

அத்தோடு உதவித் தேர்தல் ஆணையாளரினால் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவுக்கு இது தொடர்பில் அறிவிக்கப்பட்டும் உள்ளது.

இந்நிலையில் யாழ்.ரில்ஹோ விருந்தினர் விடுதியில் நேற்று முன்தினம் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பின்போது மேற்படி விடயம் குறித்து ஊடகவியலாளர்களினால் கேள்வி எழுப்பப்பட்டது.

இதனையடுத்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பத்திரிகையாளருக்கு முன்பாக அரச அதிபருக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி இராணுவம் வாக்காளர் பெயர்ப் பட்டியலைக் கேட்பதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. அவ்வாறு யாழ்.மாவட்டத்தில் இடம்பெறுகிறதா எனக் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளிக்கும்போதே அரசாங்க அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (அ-6)

# யாழ்.நகரில் சுற்றிச் சுழன்ற பாரதீய ஜனதா கட்சி குழுவினர்

(யாழ்ப்பாணம்)

இந்தியாவின் பாரதீய ஜனதா கட்சியின் முன்னாள் மத்திய அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவிசங்கர் பிரசாத் உள்ளிட்டவர்கள் நேற்று நல்லூர் கந்தசுவாமி கோவிலில் விசேட வழிபாடுகளில் ஈடுபட்டதோடு, யாழ்.பொது நூலகத்தையும் பார்வையிட்டனர். இலங்கைக்கு விஜயம் செய்துள்ள பாரதீய ஜனதா கட்சியின் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட ஆறு பேர் கொண்ட குழுவினர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்தனர்.



யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த அவர்கள், யாழ்.ரில்ஹோ சிற்றி ஹோட்டலில் யாழ்.சிவில் சமூகப் பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

இதனையடுத்து அரியாலை நாவலடிப் பகுதியில் இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட வீடுகளையும் பார்வையிட்டனர்.

அத்தோடு அப்பகுதி மக்களுடன் கலந்துரையாடி அவர்களின் தேவைகள் குறித்தும் கேட்டறிந்து கொண்டனர்.

பின்பு வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி மற்றும் வடக்கு மாகாணத்திலுள்ள அமைச்சுக்களின் செயலாளர்களையும் திணைக்களத் தலைவர்களையும் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

இதன்போது யுத்தத்திற்கு பின்னரான காலப் பகுதியில் வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்திப் பணிகள் குறித்தும் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்திப் பணிகள் மற்றும் தேவைகள் குறித்தும் ஆளுநர் உள்ளிட்டவர்களால் எடுத்துக் கூறப்பட்டது.

இதன்பின்பு நேற்றையதினம் நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு காலை 8.30 மணியளவில் வருகை தந்த பாரதீய ஜனதா கட்சியினர் விசேட வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

அதையடுத்து யாழ்.நூலகத்திற்கு வருகை தந்த அவர்களை யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா வரவேற்பதோடு நூலகத்தின் பல்வேறு பகுதிகளையும் பார்வையிட்டனர்.

பின்பு முற்பகல் 9.45 மணியளவில் பயணிப்பதற்காக அக் குழுவினர் பலாலி விமான நிலையம் சென்றனர். (அ-6)




# ஜப்பான் நாட்டின் தூதுவர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம்



(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான ஜப்பான் நாட்டின் தூதரகத்தின் முதன்மைச் செயலாளர் கொகுரோஹய நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திற்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டு வருகை தந்திருந்தார்.

இந்த விஜயத்தின்போது யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளுக்கு சென்று நிலவரங்களைப் பார்வையிட்டார். இதன் தொடர்ச்சியாக யாழ்.முஸ்லிம்கள் வாழும் பகுதிகளையும் பார்வையிட்டதோடு மக்கள் பணிமனையில் யாழ்.மாநகர சபையின் முஸ்லிம் உறுப்பினர் மௌலி எம்.சுபியானையும் சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

இதன்போது யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்களை மீள் குடியேற்ற இன்னமும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாது இருப்பது போன்ற பல விடயங்கள் எடுத்துக் கூறப்பட்டன. (அ-6)

# சிறுமி மீது போத்தல் குத்து

(கரவெட்டி)

நெல்லியடி நகரப் பகுதியில் புடைவைக் கடை ஒன்றில் சிறுமி மீது வர்த்தகர் ஒருவர் போத்தலால் குத்தியதில் குறித்த சிறுமி படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் முற்பகல் 11 மணியளவில் நெல்லியடி நகரப் பகுதியில் பொதுமக்கள் பலர் கூடியிருந்தபோது இடம் பெற்றுள்ளது.

இதில் இமையாணன் உடுப்பிட்டியைச் சேர்ந்த இந்திரதாஸ் தர்சங்கா (வயது 17) என்ற சிறுமியே படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (அ-11-24)

# இறுதி ஆட்டத்திற்கு தெரிவானது மாலுசந்தி மைக்கல் அணி

(கரவெட்டி)

புத்தூர் எவரட்ஸ் விளையாட்டுக் கழகத்தின் 20:20 கிரிக்கெட் இறுதி ஆட்டத்திற்கு புத்தூர் குருபரன் அணியை 16 ஓட்டங்களால் தோற்கடித்து மாலுசந்தி மைக்கல் அணி இறுதி ஆட்டத்திற்கு தெரிவாகியது.

புத்தூர் எவரட்ஸ் விளையாட்டு கழகம் மாவட்ட ரீதியாக நடத்தி வந்த கிரிக்கெட் போட்டியில் 36 அணிகள் பங்குபற்றின.

இதன் முதலாவது அரையிறுதி ஆட்டம் கடந்த சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு புத்தூர் எவரட்ஸ் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய மைக்கல் அணி 14:2 பந்துகளில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 103 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் திருபரன் 27, வேணுகானன் 19, ரகுவரன் 17 ஓட்டங்களை பெற்றனர்.

குருபரன் அணியின் பந்து வீச்சின் சார்பில் தினேஸ், சதீஸ்குமார் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய குருபரன் அணி 15 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 88 ஓட்டங்களை பெற்றது. இதில் தினேஸ் 19 ஓட்டங்களை பெற்றார்.

மைக்கல் அணியின் பந்து வீச்சின் சார்பில் தினோஜன், திருபரன் தலா 2, கபிலன், ரவீந்தன், பிரணவன், அச்சுதன் தலா ஒரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இறுதியில் மைக்கல் அணி 16 ஓட்டங்களால் புத்தூர் குருபரன் அணியை வெற்றி கொண்டு இறுதிப் போட்டிக்கு தெரிவாகியது. (அ-3-24)

# சிறுகதை தொகுதி வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

சூரன் ஏ.ரவிவர்மாவின் வடக்கே போகும் மெயில் எனும் சிறுகதைத் தொகுதியின் வெளியீட்டு விழாவும் ராஜஸ்ரீகாந்தன் நினைவு நிகழ்வும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யா/தேவரையாளி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

வதிரி பூவற்கரை பிள்ளையார் ஆலய தலைவர் சி.க.லோகநாதன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் சிறப்புரையை யா/தேவரையாளி இந்துக் கல்லூரி அதிபர் மா.நவநீதமணியும் மதிப்பீட்டு உரையை யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணனும் வழங்கவுள்ளனர்.

தொடர்ந்து யாழ்.பல்கலைக் கழக சட்டத்துறைத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி த.கலாமணி நூலை அறிமுகம் செய்து வைக்க நூலாசிரியர் அறிமுகத்தை மக்கள் வங்கியின் பருத்தித்துறை கிளை முகாமையாளர் கொற்றை பி.கிருஸ்ணானந்தன் வழங்கவுள்ளார். நூலாசிரியர் ஏற்புரையை வழங்குவார்.

ராஜஸ்ரீகாந்தன் நினைவு நிகழ்வில் நினைவுரையை எழுத்தாளர் தெணியான் ஆற்றவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவு கடற்பரப்பில் 25 தமிழக மீனவர்கள் கைது

யாழ்ப்பாணம் நெடுந்தீவு கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 25 இந்திய மீனவர்கள் நெடுந்தீவு கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இக் கைது நடவடிக்கையின் போது, தம்முடைய படகுகளில் ஒன்று கடலிற்குள் மூழ்கிவிட்டதாக இந்திய மீனவர்கள் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் இந்தியாவின் இராமேஸ்வரத்தைச் சேர்ந்த குறித்த 25 தமிழ் மீனவர்கள் இராமேஸ்வரத்தின் வடபகுதி கடற்பரப்பினூடாக நெடுந்தீவு கடற்பரப்பில் நுழைந்துள்ளனர். இந்த 25 மீனவர்களும் ஒரு படகில் 5 பேராக 5 றோலர் படகுகளில் யாழ்ப்பாணம் நெடுந்தீவு கடற்பரப்பில் நுழைந்துள்ளனர்.

இவ்வாறு இரவு வேளையில் இவர்கள் நெடுந்தீவு கடல் எல்லைக்குள் நுழைவதை அவதானித்த நெடுந்தீவு கடற்படையினர் உடனடியாக அங்கு விரைந்து மீனவர்களை கைது செய்தும், அவர்களின் றோலர் படகுகளை கைப்பற்றியும் கரைக்கு கொண்டு வரும் முயற்சியில் ஈடுபட்டனர். இவ்வாறு இந்திய மீனவர்களின் 5 படகுகளும் கரைக்குக் கொண்டு வரப்படும் போது, அவற்றில் ஒரு படகு சேதமடைந்து கடலில் மூழ்க ஆரம்பித்துள்ளது.

கடற்படையினர் சென்ற படகு சிறியது என்பதனாலும், இரவுவேளையில் மீட்புப்பணியை உடனடியாக மேற்கொள்ள முடியாத காரணத்தினாலும் நீரில் மூழ்கிக் கொண்டிருந்த படகைக் கைவிட்டு அதில் இருந்த மீனவர்கள் ஐவரையும் ஏனைய படகுகளில் ஏற்றி பின்னர் எஞ்சிய 4 படகுகளையும் கரைக்குக் கொண்டு வந்து சேர்த்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் அனைவரும் நேற்றுக் காலை வரை நெடுந்தீவு கடற்படையினரால் தடுத்து வைக்கப்பட்டு பின்னர் அன்றைய தினம் காலை 11 மணியளவில் யாழ்ப்பாணம் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

யாழ்.நீரியல்வளத் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள இவ் 25 மீனவர்களையும் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் யாழ்.இந்திய துணைத்தூதரக அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிட்டதோடு, யாழ்.நீரியல்வளத் திணைக்களப் பணிப்பாளர் எஸ். கணேசமூர்த்தியுடன் இணைந்து மேலதிக நடவடிக்கை எடுப்பது தொடர்பிலும் ஆராய்ந்தனர்.

அதிக காற்றினால் தமது படகுகளில் ஒன்று பழுதடைந்ததன் காரணமாகவே தாம் கரை நோக்கி வரவேண்டியதாயிற்று எனவும், தாம் வந்திறங்கிய இடம் யாழ்ப்பாணம் என்பது இங்கு வந்த பின்னரே தெரிந்ததெனவும் அம் மீனவர்கள் யாழ். நீரியல்வளத் திணைக்களத்தினரிடம் தெரிவித்தனர்.

மேலும் தற்போது காற்றுக் காலம் ஆரம்பித்துள்ளதால் இந்திய மீனவர்கள் தமது கடற்பரப்பை நோக்கி படையெடுப்பார்கள் என யாழ்ப்பாண மீனவர்கள் சிலர் தெரிவித்தனர்.

இதேவேளை, அண்மையில் மன்னார், நெடுந்தீவு கடற்பரப்பில் 30 இற்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் அத்துமீறினர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டனர்.

நெடுந்தீவில் கைதாகிய மீனவர்கள் ஊர்காவற்றுறை நீதிமன்றில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-4)


உ

ஸ்ரீ ஸ்ரீ அம்மா பகவான் சரணம்

'ஓம் சச்சிதானந்த பரப்ரம்மா புருஷோத்தம பரமாத்மா ஸ்ரீ பகவதி சமேத ஸ்ரீ பகவதே நமஹ



## ஸ்ரீ ஸ்ரீ அம்மா பகவானின் 37 ஆவது திருக்கல்யாண தினம் லோக கல்யாண மஹோற்சவமும் Webcast தரிசனமும்

அன்பர்களே! சம்பூர்ண அவதார புருஷர்களாகிய ஸ்ரீ அம்மா பகவான் உலக மக்களுக்கு ஜீவன்முக்தி அளித்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில் திருக்கல்யாண தினத்தை 'லோக கல்யாண' மஹோற்சவமாகக் கொண்டாட திருவருள்பாலித்துள்ளது.

இடம்: இளங்கலைஞர் மண்டப கலாமண்டபம், சட்டநாதர் கோயில் வீதி, நல்லூர்.

காலம்: 09.06.2013 ஞாயிற்றுக்கிழமை பி.ப.2.30, Webcast தரிசனம் பி.ப.5.30

சர்வ மங்களகரமான 'லோக கல்யாண நன்நாளில் அனைவரும் கலந்து அம்மா பகவானின் அருளாசி பெறும் பாக்கியத்தை உலக மக்களுக்கு அருளியுள்ளார்.

'யூன் மாதம் முழுவதுமே கல்யாண தினமாகும்' ஒவ்வொருவரும் தமது இல்லத்தில் அம்மா பகவான் திருக்கல்யாணத்தைப் பவித்திரமாக நடத்தி அனுகூலங்களைப் பெறலாம். இது பகவானின் சங்கல்பம் இல்லங்களில் திருக்கல்யாணத்தை செய்ய விரும்புவோர் சத்சங்கங்களில் தொடர்புகொண்டு ஒழுங்கு செய்துகொள்ளலாம்.

இனமத பேதமின்றி இவ் வைபவத்தில் கலந்து அனுக்கிரகத்தைப் பெறும் வண்ணம் அழைக்கின்றோம்.


'அன்புடை நெஞ்சம் தாம் கலந்தினவே' லோகா சமஸ்தா சுகினோ பவந்து'

**வித்யா மாலை**

அறிவுத்திறனை விருத்தி செய்வதற்கான வழிமுறைகளை தேடி அலையும் இளைஞர்களுக்கு தடைகளை நீக்கி வெற்றிப் பாதையைக் காட்டும் ஸ்ரீ அம்மா பகவானின் வித்யாமாலை அணியும் நிகழ்வு பாடசாலைகளிலும் சத்சங்கங்களிலும் யூன் மாதம் 12 ஆம் திகதியிலிருந்து நடைபெறும். விரும்புவோர் தொடர்புகொண்டு வித்யாமாலை அணிந்து விரதத்தை அனுஷ்டித்து பயன்பெறவும்.

(2945) ஸ்ரீ அம்மா பகவான் சத்சங்கங்களின் ஒன்றியம், யாழ்.மாவட்டம்.


## வரலாற்றுப் புகழ்மிக்க வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்பாளுக்கு உலங்குவானூர்தியிலிருந்து பூச்சொரிய தேசமானிய இராமச்சந்திரன் ஏற்பாடு....







வரலாற்றுப் புகழ்மிக்க வரணி சிட்டிவேரம் கண்ணகையம்மன் ஆலயத்தின் வருடாந்த தேர்த் திருவிழா 08.06.2013, சனிக்கிழமை காலை 9.00 மணியிலிருந்து ஆரம்பாமாகி நடைபெறவுள்ளது. அம்மன் தேரில் வீதியுலா வரும்போது கடந்த வருடம் போல் இவ் வருடமும் உலங்குவானூர்தியிலிருந்து மலர் சொரி வதற்கான ஏற்பாடுகளை தேசமானிய M.T.S. இராமச்சந்திரன் அவர்கள் மேற்கொண்டு வருகிறார். அவரின் வேண்டுகோளுக்கிணங்க மாண்புமிகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் விமானப்படைக்குச் சொந்தமான உலங்குவானூர்தி ஒன்றிற்கானஅனுமதியை வழங்கியதுடன், இவ் வருடமும் வரணி சிட்டிவேரம் அம்மனுக்கு வெகுவிமரிசையாக தேர் திருவிழா நடைபெற தன்னுடைய வாழ்த்துக்களையும் தெரிவித்து இதற்கான வேண்டுகோளை விடுத்த திரு.M.T.S.இராமச்சந்திரன் அவர்கட்கும் சிட்டிவேரம் கண்ணகையம்மன் ஆலய பரிபாலனசபைக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார்.



இதனைத் தொடர்ந்து தேர்த்திருவிழாவில் உலங்குவானூர்தியிலிருந்து பூச்சொரிவதற்கான நடவடிக்கைகளை தேசமானிய இராமச்சந்திரன் மேற்கொண்டு வருகிறார். வரணி சிட்டிவேரம் கண்ணகையம்பாளின் தேர்த் திரு விழா உற்சவத்திற்கு பல்லாயிரக்கணக்கான அடியார்களை எதிர்பார்த்து ஆலய நிர்வாகசபையினரும் இதற்கான ஏற்பாட்டினை மேற்கொண்டு வருகின்றனர். (அ-3521)


## கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1978 இந்து (KO)<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>உயரம்: 6'<br>கி.பா: 25<br>தகைமை/தொழில்: BSc நில அளவையியலாளர்<br>தொ.இ:B1923 | பிறப்பு: 1987 இந்து(V)<br>நட்சத்திரம்: மூலம் 4<br>கி.பா :15<br>உயரம்: 5'6" 1இல் செவ்.<br>தகைமை/தொழில்:Dental Doctor<br>தொ.இ:G1951 |
| பிறப்பு: 1983 இந்து (KO)<br>நட்சத்திரம்: அச்சுவினி 3<br>உயரம்: 6'<br>கி.பா: 36 1இல் செவ்.<br>தகைமை/தொழில்:A/L, பொது சுகாதார பரிசோதகர்<br>தொ.இ:B1925 | பிறப்பு: 1979 இந்து (Pa)<br>நட்சத்திரம்: பூசம் 2<br>உயரம்: 5'2"<br>கி.பா :66 1இல் சூ,செவ்.<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ:G1953 |
| பிறப்பு: 1985 இந்து (V)<br>நட்சத்திரம்: புனர்பூசம் 1<br>உயரம்: 5' 5" 2இல் செவ்.<br>தகைமை/தொழில்: O/L மேற்பார்வையாளர் Dubai<br>தொ.இ:B1927 | பிறப்பு: 1978 இந்து (KO)<br>நட்சத்திரம்: திருகோணம் 4<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: O/L Pharmacy<br>விவாகரத்தும் விரும்பத்தக்கது.<br>தொ.இ:G1955 |
| பிறப்பு: 1981 இந்து(V)<br>நட்சத்திரம்: சதயம் 2<br>உயரம்: 5' 10"<br>கி.பா : 32.25<br>தகைமை/தொழில்:A/L ஆசிரியர்<br>தொ.இ:B1928 | பிறப்பு: 1988 இந்து (V)<br>நட்சத்திரம்: அனுசம் 3<br>உயரம்: 5' 1"<br>கி.பா: 8 4 இல் செவ்.<br>தகைமை/தொழில்: MBA விரிவுரையாளர்கனடா PR<br>தொ.இ:G1958 |

சகல தொடர்புகளுக்கும்:-

# கல்யாண மாலை

(சர்வதேச இலவச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆயிரம் பாடசாலைத் திட்டத்தின் கீழ் அக்கராயன் மகா வித்தியாலயத்திலிருந்து அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம் பிரிந்து இயங்க ஆரம்பித்துள்ளது. தரம் ஐந்து வரையான வகுப்புக்களைக் கொண்டு இயக்கம் பெற ஆரம்பித்துள்ள இவ் ஆரம்ப பாடசாலைக்கான வகுப்பறை கட்டடத்தை அமைக்க சேவாலங்கா நிறுவனம் நிதியுதவி வழங்கியுள்ளது. இவ் ஆரம்பப் பாடசாலையின் ஆரம்ப நிகழ்வுகளின் போது...

# வவுனியா தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் பட்டினத்தார் விழா

(பூந்தோட்டம்)

வவுனியாத் தமிழ்ச் சங்கம் நடத்தும் பட்டினத்தார் விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை வவுனியா ஆதி விநாயகர் ஆலய பாலாம்பிகை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ்ச்சங்கதலைவர் த.சிவகுமாரன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் தொடக்கவுரையை யாழ்ப்பாணக் கம்பன் கழகத்தின் தலைவர் லோ.துஷிகரன் நிகழ்த்துவார்.

தொடர்ந்து பட்டினத்தார் வாழ்வில் என்ற பொருளில் ஓய்வு பெற்ற அதிபர் சி.வையாபுரிநாதனை நடுவராக கொண்டு இடம்பெறவுள்ள மாணவர் அரங்கத்தில் மருதவாணன் என வவுனியா விபுலானந்தாக் கல்லூரி மாணவன் க.கனகேந்திரனும் தாயார் என வவுனியா இலங்கைத்திருச்சபை தமிழ் மகா வித்தியாலய மாணவி டயாளினியும் பத்திரகிரியார் என வவுனியா இந்துக் கல்லூரி மாணவன் மிதுர்சனும் திருவொற்றியூர் என் வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி மாணவி புவிதாவும் உரையாற்றுவார்கள். தொடர்ந்து பட்டினத்தார் பாடல்களை மட்டுமே கொண்டமைந்த இசையரங்கத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இசைத்துறை விரிவுரையாளர் இசைக்குரிசில் ந.பரந்தாமன் பாடவுள்ளார்.

விசேட நிகழ்வாக இடம்பெறும் கருத்தரங்கில் பட்டினத்தாரும் வள்ளுவரும் என்ற பொருளில் தமிழ்மணி கே.கே. அரு நந்தவராஜாவும் பட்டினத்தா ரும் தேவார முதலிகளும் என புதுக்குடியிருப்பு பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் வீ.பிரதீபனும் பட்டினத்தாரும் பாரதியாரும் என்ற பொருளில் ஓய்வு பெற்ற அதிபர் ச.க.தியாகலிங்கமும் பட்டினத்தாரும் கண்ண தாசனும் என வவுனியா புதுக்குள தமிழ் மகா வித்தியாலய ஆசிரியர் ல.சதீஷ்குமாரும் கருத்துரை வழங்கவுள்ளார்கள். இவ்விழா நிலையாமை பேசி நிலைத்து நின்ற சாமியாகிய பட்டினத்துச் சித்தருக்கு இலங்கையில் நடைபெறும் முதல் விழாவாகுமென தமிழ்ச்சங்க தலைவர் தமிழருவி த.சிவகுமாரன் குறிப்பிட்டார்.

(அ-266)

# சகபாடி ஆதரவுக்குழு கலந்துரையாடல்

(பூந்தோட்டம்)

வவுனியா தெற்கு வலய பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனை சேவையில் ஈடுபடும் ஆசிரியருக்கான மாதாந்த ஒன்று கூடலும் சகபாடி ஆதரவுக் குழு கலந்துரையாடலும் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு வலயக்கல்வி அலுவலக முறை சாரா கல்வி பிரிவு மண்டபத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ். அன்ரன் சோமராஜா தலைமையில் நடைபெறவுள்ளது. கலந்துரையாடலுக்கான வழிகாட்டுநர்களாக சமூக சேவைகள் மற்றும் நலன்புரி அமைச்சின் ஆலோசனை வழிகாட்டல் பிரிவின் இணைப்பாளர் என்.எஸ்.எம் அஸாரும் ,வவுனியா தெற்கு வலய ஆலோசனை வழிகாட்டல் ஆசிரிய ஆலோசகர் ஆ.சுபாஸ்கரனும் , தொழில் வழிகாட்டல் அதிகாரி திருமதி நந்தினி கிறேனியரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (அ-266)

# செக்கடிபுலவு மக்களுக்கு வீட்டுத்திட்டம் கிடைக்கவில்லை

(பூந்தோட்டம்)

வவுனியா செக்கடிபுலவு மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு 4 வருடங்கள் பூர்த்தியாகும் நிலையிலும் இதுவரை வீட்டுத் திட்டமோ வாழ்வாதார நடவடிக்கைகளோ வழங்கப்படாமையால் அவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக தெரிவிக்கின்றனர்.

வவுனியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இக் கிராமத்தில் கடந்த 2009 (2009/10/25) ஆம்ஆண்டுவன்னியில் இருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்த 14 குடும்பங்களும் ஏனைய 58 குடும்பங்களும் வவுனியாவில் ஏனைய பிரதேசங்களில் உறவினர், நண்பர்களின் வீடுகளில் தங்கியிருந்த நிலையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டனர்.

எனினும் மீள்குடியேறி 4 வருடங்கள் பூர்த்தியாகும் நிலையிலும் தமக்கு வாழ்வாதார உதவிகளோ வீட்டுத் திட்டமோ வழங்கப்படவில்லை என அம்மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மீள்குடியேற்றத்தின் போது வழங்கப்பட்ட தகரங்களால், தரப்பாள்களால் கொட்டகை இட்டு தாம் வாழ்வதாகவும் மழை காலங்களில் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடுவதுடன் மாணவர்களும் தமது கல்வியைத் தொடர்வதில் சிரமப்படுவதாகவும் தெரிவித்தனர்.

இதேவேளை, மீள்குடியேற்றத்தின்போது கொட்டகை அமைப்பதற்காக 25 ஆயிரம் ரூபா வழங்கப்பட்ட போதிலும் வீட்டுத்திட்டம் அமைப்பதற்கான செயற்பாடுகள் தமது அயல் கிராமங்களில் நடைபெறும் நிலையில் தமது கிராமம் மாத்திரம் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

இந்திய வீட்டுத்திட்டத்தில் தமக்கும் வீடுகளை வழங்கும் படி தாம் அதிகாரிகளிடம் பல தடவைகள் கோரியபோதும் எவரும் அதற்கு செவிசாய்க்கவில்லை எனத் தெரிவித்த அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களும் பாராமுகமாக இருப்பதால் இது தொடர்பில் தாம் செய்வதறியாது நிற்பதாகவும் தெரிவித்தனர்.

(அ-266-250)

# பயிற்சி வகுப்புகள்

(கிளிநொச்சி)

இலங்கை கல்வி நிர்வாக சேவை பரீட்சைக்கு தோற்றும் அதிபர், ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்புகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அதிபர் சங்க செயலாளர் வரதன் அறிவித்துள்ளார்.(அ)




# கிராம அபி. சங்க நிர்வாகத் தெரிவு

(சிவநகர்)

உருத்திரபுரம் வடக்கு எள்ளுக்காடு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புதிய நிர்வாக சபைத் தெரிவு கடந்த 4 ஆம் திகதி காலை 10 மணியளவில் நடைபெற்றது.

இதில் தலைவராக ஐ.உருத்திரசிங்கம், செயலாளராக இ.இராசதீபன், பொருளாளராக சீ.நாகேந்திரன், உப தலைவராக ஆ. மகேந்திரன், உப செயலாளராக பொ. வைகுந்தவாசன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன் 8 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக புதிய தெரிவுகள் எவையும் நடைபெறாதிருந்த நிலையில் தற்போது புதிய நிர்வாக சபை தெரிவு நடைபெற்றுள்ளது.

இதில் அப்பகுதி கிராம அலுவலர் கரைச்சி பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், சேவாலங்கா நிறுவனத்தினர், மாதர் சங்கத்தினர், சிவில் பாதுகாப்பு அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(அ-3-254)

## சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்

(சிவநகர்)

கிளி/ இந்துக் கல்லூரி, கிளி/ மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியராக கடமைபுரியும் கந்தையா சச்சிதானந்த சிவம் அகில இலங்கை சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் அண்மையில் கிளிநொச்சி மாவட்ட நீதவான் வஹாப்தீன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். (அ-3-254)


# பெரும்படை அம்மன் கும்பாபிஷேகம்

பூநகரி தெங்குறுபிட்டி அருள்மிகு பெரும்படை அம்மன் ஆலயத்தின் கும்பாபிஷேகம் எதிர்வரும் 12 ஆம் திகதி புதன் கிழமை காலை 9.21 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

கும்பாபிஷேகத்தின் முதல் நாள் நிகழ்வுகள் எதிர்வரும் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் எண்ணெய்க்காப்பு சாத்துதலுடன் ஆரம்பமாகவுள்ளன.

அதனைத் தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் மண்டலாபிஷேகம் இடம் பெற்று, இறுதி நாள் சங்காபிஷேகமும் நடைபெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

# கண்ணீருடன்...



திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபக உறுப்பினர்களுள் ஒருவரும் ஈழத்தின் புகழ்பூத்த சிற்பக் கலைஞனும் சமூக சேவகனுமாகிய **'கலைஞான பூரணன்'**

## ஏ.வி.ஆனந்தன்

அவர்கள் *03.06.2013* இல் அமரத்துவம் அடைந்ததையிட்டு ஆறாத்துயரடைந்துள்ளோம். அவருக்கு எமது இதயம் கனக்கும் கண்ணீரை காணிக்கையாக்குவதுடன் அவரது இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**இயக்குநர், அங்கத்தவர்கள்,**
**திருமறைக் கலாமன்றம்.**
238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

**குறிப்பு :** நாளை சனிக்கிழமை பி.ப.2 மணிக்கு அமரர் ஏ.வி.ஆனந்தன் அவர்களின் பூதவுடல் எமது மன்றத்தின் கலைத்தூது மணி மண்ட பத்தில் வைக்கப்பட்டு அஞ்சலி நிகழ்த்தப்படவுள்ளது. இந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு எமது மன்றத்தின் அங்கத்தவர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் அழைக்கின்றோம். நாளையும் நாளை மறுதினமும் மேடையேற்றப்படவிருந்த ஞானசௌந்தரி இசைநாடகம் பிற்போடப்பட்டுள்ளது என்பதை அனைவருக்கும் அறியத் தருகின்றோம். (சி-3526)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு-கிழக்கு இணையாதவாறு சட்டமூலம் தயாராக்கப்படுகிறது

## சுரேஸ் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

**இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அடுத்தடுத்து இருக் கும் மாகாணங்கள் தாம் விரும்பினாலும் ஒன்றிணைய முடியாது என்ற வகையில் அரசாங்கம் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் திருத்தத்தை கொண்டுவந்து, அதனை பாராளுமன றத்தில் சமர்ப்பிக்கவுள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் பாராளுமன்ற உறுப்பினரும் கூட்டமைப்பின் பேச்சாள ருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.**

கொழும்பு பான்ஸ் பிளேசில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கல ந்து கொண்டு கருத்துத் தெரிவிக் கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரி விக்கையில்,

குறித்த சட்டமூலத்தின்படி வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங் கள் எதிர்காலத்தில் தாங்கள் விரும் பினாலும் கூட அல்லது அதற்கான பிரேரணையை நிறைவேற்றினாலும் கூட ஒருபோதும் இணையமுடி யாத நிலை உருவாகும்.

மாகாண சபைகளால் சட்ட மூலம் ஒன்று கொண்டுவரப்பட வேண்டு மானால் அதற்கு சகல மாகாண சபைகளினதும் அங்கீகாரம் பெறப் படவேண்டும். ஆனால், தற்போது கொண்டுவரப்படவுள்ள சட்ட மூலத் தின்படி பெரும்பான்மையான மாகாணங்கள் ஒப்புதல் அளித்தால் குறித்த சட்டமூலத்தை நிறை வேற்ற முடியும்.

காணி மற்றும் பொலிஸ் அதி காரங்களுடன் தற்போது வட மாகா ண சபைத் தேர்தலை நடத்தினாலும் தேர்தல் முடிவடைந்தவுடன் மாகாண சபைகளின் பெரும்பான்மையை வைத்து அதனை பாராளுமன் றத்தில் நிறைவேற்றி அவ்வதிகாரங் களை இல்லாமல் செய்வதற்கு அரசு தீர்மானித்தே அதனை மேற்கொள் கின்றது.

இதனை தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு கடுமையாக எதிர்ப்பதுடன் கண்டனத்தையும் தெரிவிக்கின்றது.

இந்திய-இலங்கை ஒப்பந் தத் தில் குறிப்பிட்டதன்படி வடக்கு-கிழக்கு என்பது தமிழ் மக்களின் இணைந்த வரலாறு பூர்வமான நிலம் என்ற அடிப்படையில் அது 18 வருடங்கள் இணைந்தே இருந்தது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# கப்பல் கட்டுதல் மற்றும் திருத்தல்; இரண்டாவது நிலையம் காலியில்

## ஆயிரத்து 500 பேருக்கு வேலைவாய்ப்பு

(கொழும்பு)

கப்பல் கட்டுதல் மற்றும் திருத்து தல் தொடர்பான இலங்கையின் இரண்டாவது நிலையம் சவுதிஅரே பிய முதலீட்டுடன் காலி துறைமுகத் தில் நிர்மாணிக்கப்படவிருக்கிறது.

இது தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கை கொழும்பில் கைச் சாத்தானது என கிழக்கு மாகாண விவசாய, மீன்பிடி, சுற்றாடல், கால் நடைவளர்ப்பு, கிராமிய கைத்தொழில் துறை அமைச்சர் ஹாபிஸ் நஜீர் அஹமட் தெரிவித்தார்.

முதற்கட்டமாக 44 மில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீட்டுடன் ஆரம்பிக்கப்படவுள்ள இவ்வேலைத் திட்டத்தில் ஆயிரத்து 500 நேரடி வேலை வாய்ப்புக்கள் உருவாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.


இலங்கையின் கப்பல் கட்டுதல் மற்றும் திருத்துதல் தொடர்பான செய்தியாளர் சந்திப்பு கிராண்ட் ஹோட்டலில் நடைபெற்ற போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட் டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், இலங்கைக்கும், சவுதி அரேபி யாவுக்குமிடையில் நீண்ட காலமாக நட்புறவுள்ளது. இலங்கை,சவுதி அரேபியாவின் சிநேக நாடு என் றாலும், இவ்வாறான பாரிய முத லீடு இலங்கைக்கு வருவது இதுவே முதல் தடவையாகும்.

இந்த முதலீட்டுக்கான புரிந்து ணர்வு உடன்படிக்கையில் இல ங்கை துறைமுக அதிகாரசபையும், ஹமாம் நிறுவன தலைவரும் கைச் சாத்திடவுள்ளனர்.

இத் திட்டத்தின் முதற்கட்டமாக 44மில்லியன் அமெரிக்க டொலர் கள் முதலிடப்படும். இதன் மூலம் ஆயிரத்து 500 நேரடி வேலை வாய்ப்புக்கள் உருவாகும். இரண் டாம் கட்டத்தின் போது 110 மில்லி யன் அமெரிக்க டொலர்களை முத லிட இந்நிறுவனம் எதிர்பார்த்துள் ளது. இதன்மூலம் 5ஆயிரம் நேரடி வேலைவாய்ப்புக்கள் உருவாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை மற்றும் மாலைதீவின் கப்பல் கட்டுதல் மற்றும் திருத்தும் நடவடிக்கைகளை இலக்காகக் கொண்டே இம் முதலீடு மேற்கொள் ளப்படுகின்றது என்றார். (அ-2)



யாழ்.பல்கலைக்கழக கலைத்துறை மாணவர் சண்முக ராஜா தவராஜாவினால் உருவாக்கப்பட்ட பிள்ளையார் பாடல் இறுவெட்டின் வெளியீட்டுவிழா அண்மையில் வில்லூன்றி விநாயகர் ஆலயத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கலாநிதி நா.தனேந்திரம் முதல் இறுவெட்டை பெற்றுக் கொள்வதைப் படத்தில் காண லாம்.

# சந்திரிகா மீதான தற்கொலை தாக்குதல் வழக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் வலது கண் முழுமையாக செயலி ழந்திருந்த போதிலும், அவருடைய மூளை எவ்விதத்திலும் பாதிக்கப்பட் டிருக்கவில்லை என்று கண் வைத் திய நிபுணர் சரித் பொன்சேகா சாட்சி யமளித்தார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மீது கொழும்பு மாநகரசபை மண்டப வளாகத்தில் 1999 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத்தாக்குதல் தொடர்பிலான வழக்கு கொழும்பு மேல் நீதிமன் றத்தில் நேற்றுமுன்தினம் விசார ணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே அவர் மேற்கண்டவாறு சாட் சியமளித்தார்.

மேல் நீதிமன்ற நீதிபதி விமல் நம்புவாசம் முன்னிலையிலேயே வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. வழக்கில் மூவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இந்த மூவருக்கும் எதிராக 190 குற்றச் சாட்டுக்களின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது கொழும்பு தேசிய கண் வைத்தியசாலையில் கண் வைத்திய நிபுணராக கடமை யாற்றிய சரித்பொன்சேகா சாட்சி யமளித்தார்.

இதனையடுத்து வழக்கு விசா ரணையை எதிர்வரும் 19 ஆம் திகதி க்கு நீதிபதி ஒத்துவைத்தார்.

1999 இல் இடம்பெற்ற ஜனா திபதி தேர்தலுக்காக கொழும்பு மாந கர சபைத்திடலில் டிசெம்பர் 18 ஆம் திகதி நடைபெற்ற இறுதி பிரசாரக் கூட்டத்தின் போது மேற்கொள்ளப் பட்ட தற்கொலைக் குண்டுத்தாக்கு தலில் முன்னாள் ஜனாதிபதி சந்தி ரிகா உட்பட 110 பேர் காயமடைந்தது டன் 31 பேர் பலியாகியுமுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# வள்ளுவர் அக்கடமியின் கட்டடத் திறப்பு விழா

உரும்பிராய் வள்ளுவர் அக்க டமி கல்வி நிறுவனத்தின் புதிய கட் டட திறப்பு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10.04 மணிக்கு அக்கடமியின் அதிபர் ஆ.ஜெயபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வின் பிரதம விருந்தின ராக கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் கலந்து கொள்ளவுள் ளதுடன், விசேட விருந்தினர்களாக வைத்திய கலாநிதி லயன்வை.தியாக ராஜா, கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலை அதிபர் வே.கணபதிப் பிள்ளை, கொக்குவில்தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் ந.யோகராஜன், பலாலி ஆசிரிய பயிற்சி கலாசாலை ஓய்வுநிலை அதிபர் கு.சதாசிவமூர் த்தி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி கோப்பாய் அமைப்பாளர் ஐங் கரன், வலம்புரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ள னர். (அ)

# கஞ்சாசெடிகளுக்கு தீ வைத்து அழிப்பு

(லுணுகம்)

லுணுகம்வெஹர பிரதேசத்தில் இரகசியமாக நடத்திவந்த கஞ்சாத் தோட்டம் இரண்டை பொலிஸார் முற்றுகையிட்டதுடன் சந்தேகநபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

பொலிஸ் அதிகாரிகள் திட்ட மிட்டபடி கடந்த திங்கட்கிழமை இரவு முதல் செவ்வாய்க்கிழமை நண்ப கல் வரை பதுங்கியிருந்து மேற்படி கஞ்சாத் தோட்டத்தை சுற்றிவளை த்து முற்றுகையிட்டதாக பொலிஸ் பேச்சாளர் கூறினார்.

இதன்போது ஒவ்வொன்றும் சுமார் 4 அடி உயரமான 15 ஆயிரம் கஞ்சாச் செடிகள் தீ வைத்து அழிக் கப்பட்டன.

மேலும் பிரதான சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ள தோடு, மற்றைய சந்தேகநபரை தேடி விசாரணை மேற்கொள்ளப்படுகின் றனர். (அ-2)

# மனைவிக்கு தீ வைத்து கொன்ற கணவருக்கு மரண தண்டனை

(ஏறாவூர்)

மட்டு.ஏறாவூர் பொலிஸ் பிரிவில் தலவாய் கிராமத்தில், மனைவிக்கு தீ வைத்து கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ள அவரது கண வனுக்கு மட்டக்களப்பு மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப் பளித்துள்ளது.

தலவாய்க் கிராமத்தைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தை ஒருவருக்கே இவ்வாறு நேற்றுமுன்தினம் மரண தண்டனை விதிக் கப்பட்டது.

மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி கே.சிவபாதசுந்தரம் முன்னி லையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே நீதிபதி மேற்கண்டவாறு தீர்ப்பளித்தார்.

ஏறாவூர் தலவாய்க் கிராமத்தைச் சேர்ந்த மேற்படி நபருக்கும் மனை விக்கும் இடையில் 2007ஆம் ஆண்டு ஜுலை மாதம் 15 ஆம் திகதி குடும்பப் பிரச்சினை ஏற்பட்டது.

இவ்வேளையில் ஆத்திரமடைந்த குறித்த நபரின் மனைவி, தான் தற்கொலை செய்யப்போவதாக கணவனை அச்சுறுத்தி தனக்குத் தானே மண்ணெண்ணெய் ஊற்றியுள்ளார்.

இதனை சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட அவரது கணவன் மனைவிக்கு தீ மூட்டியுள்ளார் என்று அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டி ருந்தது.

இந்நிலையிலேயே மேற்படி வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவரை குற்றவாளியாக இனங்கண்ட நீதிபதி குறித்த நபருக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தார். (அ-2)

# மன்னார் கடற்பரப்பில் 24 இந்திய மீனவர்கள் கைது

(மன்னார்)

இலங்கை கடற்பரப்பினுள் அத்து மீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட மீனவர்கள் 24 பேர் மன்னாரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் தலை மன்னார் பொலிஸார் தெரிவிக் கையில்,

இராமேஸ்வரத்தை சேர்ந்த 24 மீனவர்களே இவ்வாறு நேற்று முன் தினம் மாலை மன்னார் கடற்பரப் பில் வைத்து கைது செய்யப்பட்டுள் ளனர்.

இந்த 24 மீனவர்களும் 6 இழு வைப் படகுகளில் தலைமன்னார் கடற்பரப்பினுள் மீன்பிடியில் ஈடு பட்டுக் கொண்டிருந்த போது இவர் களை கடற்படையினர் கைது செய் தனர்.

கைது செய்யப்பட்டுள்ள 24 மீனவர்களும் எம்மிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து கைப்பற்றப் பட்டுள்ள 6 இழுவைப் படகுகளும் தலைமன்னார் கடற்படை முகாமில் வைக்கப்பட்டுள்ளன.

இவர்கள் அனைவரையும் மன் னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்து வதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுவருவதாக பொலி ஸார் மேலும் தெரிவித்தனர். (அ-2)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# தலைமைத்துவமும் முகாமைத்துவமும்

(கடந்த வாரத் தொடர்ச்சி...)

இன்றைய கல்வி முறையின் தேவைகள் மற்றும் ஆசிரியர்கள் தமது தொழில் முன்னேற்றம் தொடர்பாகக் கொண்டுள்ள அபிலாசைகள் என்பவற்றை அறிந்தால்தான் அதற்கேற்றவாறு தொடருறு ஆசிரிய கல்வி நிகழ்ச்சித் திட்டத்தை வடிவமைக்கமுடியும். ஒவ்வொரு ஆசிரியரும் ஏதாவதொரு துறையில் அதாவது தனக்குப் பிடித்தமான துறையில் தொடர்ந்து முன்னேற விரும்புவர்.

அதற்கேற்றவாறு தொடருறு ஆசிரிய கல்வி நிகழ்ச்சித் திட்டத்தை வடிவமைத்தால்தான் அவ்வாசிரியரை திருப்திப்படுத்துவதுடன், அவரிடமிருந்து பூரணமான பலனை அடையமுடியும். எனவே, தொடருறு ஆசிரிய கல்வி நிகழ்ச்சித் திட்டத்தை வடிவமைக்கமுன் ஆசிரியர்களின் எதிர்பார்ப்புக்கள் எவையென அறியப்பட வேண்டும்.

தமது பாடசாலைகள் மற்றும் பணியாற்றும் பிரதேசங்களிலுள்ள பிரச்சினைகளைக் கையாள ஆசிரியர்களுக்கு உதவக்கூடிய அறிவையும் ஆற்றலையும் வழங்க வேண்டிய தேவை தொடருறு ஆசிரிய கல்வி நிகழ்ச்சித் திட்டத்துக்கு இருப்பதனால் பொதுவாக பாடசாலைகளில் எழக்கூடிய பிரச்சினைகள் அடையாளங்காணப்பட்டு அவற்றை தீர்க்கக்கூடிய திறன்களை வழங்கக்கூடியதாக தொடருறு ஆசிரிய கல்வி நிகழ்ச்சித் திட்டம் வடிவமைக்கப்பட வேண்டும்.

அத்துடன் பிரதேச வாரியாக எழக்கூடிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கூடியதாக ஆசிரியர்களை உருவாக்க அவ்வப் பிரதேசங்களிலுள்ள ஆசிரியர் நிலையங்களின் (Teacher Centres) துணையுடன் தொடருறு ஆசிரிய கல்வி நிகழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும். இவற்றைச் செம்மையாக நிறைவேற்ற வேண்டுமாயின் பாடசாலையிலும் அதனைச் சார்ந்த சூழலிலும் எழும் பிரச்சினைகள் முதலில் இனங்காணப்பட வேண்டும்.

தொடருறு ஆசிரிய கல்வி நிகழ்ச்சித் திட்டத்தை வடிவமைப்பதற்கு, தமது அறிவை விருத்திசெய்துகொள்ள விரும்பும் ஆசிரியர்களின் விபரமும் அவர்கள் விருத்திசெய்துகொள்ள விரும்பும் துறையும் தொகுக்கப்பட வேண்டும். இவற்றை சரிவர அறிந்தால்தான் தேவைக்கேற்றவாறு தொடருறு ஆசிரிய கல்வி நிகழ்ச்சித் திட்டத்தை வடிவமைத்து அத்திட்டத்தை, தமது அறிவை மேம்படுத்திக்கொள்ள விரும்பும் ஆசிரியர்களுக்கு உயர் தகைமையினைப் பெறக்கூடிய வகையில் பல்கலைக்கழகங்களாலும் தேசிய கல்வி நிறுவகத்தாலும் வழங்கமுடியும்.

தொடக்கநிலை மற்றும் தொடருறு ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் அனைத்தும் பயிற்சி மற்றும் கல்வி எனும் எண்ணக்கருவுக்கு அப்பால் சென்று ஆசிரியர் அபிவிருத்தியை மையமாகக் கொள்ள வேண்டும்.

ஆசிரியர்கள் என்னென்ன துறைகளில் முன்னேற்றமடையச் செய்யப்பட வேண்டும் என அறிந்துகொண்டால்தான் அதற்கேற்றால் போல் திட்டமிடமுடியும். எனவே ஆசிரியர்கள் முன்னேற்றப்பட வேண்டிய துறைகள் தெளிவாக இனங்காணப்பட வேண்டும். அவ்வாறு இனங்கண்டபின்னர் அதற்கான அபிவிருத்தித் திட்டங்களை தொடருறு ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் வாயிலாக முன்னெடுக்கலாம். இதன்மூலம்தான் கல்வியின் இலக்குகளை எட்டமுடியும்.

தொடருறு ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித் திட்டத்தை திறம்படக் கொண்டுநடாத்த மிக முக்கிய மூலாதாரமாகத் தேவைப்படுவது நல்ல தராதரமுள்ள விரிவுரையாளர்களாகும். ஒவ்வொரு நிறுவனங்களாலும் நடத்தப்படும் ஆசிரியர் கல்வியின் தரம், விரிவுரையாளர்களின் தரத்தில் தங்கியுள்ளது.

எனவே கிடைக்கக்கூடிய தராதரமுள்ள விரிவுரையாளர்கள் பற்றிய விபரம் முதலில் திரட்டப்படல் வேண்டும். விரிவுரையாளர்களின் தரத்தினை மேம்படுத்தக்கூடிய திட்டங்களும் தொடருறு ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித் திட்டத்துக்கு சமாந்தரமாக முன்னெடுக்கப்பட வேண்டும். இதற்கு மேலதிகமாக தொடருறு ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித் திட்டத்தை கொண்டுநடத்தத் தேவையான பணவசதி, இடவசதி, ஆளணி வசதி என்பன பற்றிய தகவல்களும் திரட்டப்படல் வேண்டும். போதிய நிதி ஒதுக்கீடு இன்றி தொடருறு ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித் திட்டத்தை திறம்பட நடத்த முடியாது. எனவே, நிதி ஒதுக்கீடு கிடைக்கக்கூடிய வழிகள் பற்றியும் சிந்தித்தாக வேண்டிய தேவையுள்ளது.

அ.குகன்
ஆசிரிய கல்வியியலாளர்,
யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி.

தொடருறு ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித் திட்டத்தை வடிவமைக்கத் தேவையான தகவல்களைத் தொகுத்து நோக்குமிடத்து முக்கியமாக பின்வரும் விடயங்கள் உண்டா என அறியப்படல் வேண்டும். அவ்வாறு இருப்பினும் அவை எவ்வளவு தூரம் உள்ளன எனவும் அறியப்படல் வேண்டும்.

தொடரும்......

## வாரத்திற்கு ஒரு புதிர்! 85

ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 5 ஆம் திகதி ஒவ்வொரு தொனிப்பொருளில் உலக சுற்றுச் சூழல் தினம் (World Environment Day) கொண்டாடப்பட்டு வருகின்றது. அந்த வகையில் 2013 ஆம் ஆண்டு ஜூன் 5 ஆம் திகதி கொண்டாடப்பட்ட உலக சுற்றுச் சூழல் தினத்தொனிப்பொருள் என்ன?

புதிர் 85 இற்கான விடைகளை 17.06 .2013 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

**திரு.அ.குகன்**
ஆசிரியர் பிரிவு -A,
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்,
ஆசிரிய கல்வியியலாளர்,
யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி,
கோப்பாய்.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**

இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட விலங்கியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.ஈஸ்வரமோகனிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்.

**புதிர் 84 க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

வீரசிங்கம் மயூரன்
வரணி வடக்கு
வரணி.

**புதிர் 84 இற்கான கேள்வி , பதில்:**

வீடொன்றை கட்டி முடிக்க 12 மனிதர்களுக்கு 14 நாட்கள் எடுக்கும். வேலையை ஆரம்பித்து 3 நாட்களின் பின்னர் மூவர் சுகவீனம் அடைகின்றனர். 5 நாட்களின் பின்னர் சுகவீனம் அடைந்தவர்களில் இருவர் மீண்டும் அவ்வேலையில் இணைந்து கொள்கி றார்கள். 8 நாட்களின் பின்னர் வேறு இருவர் சுகவீனம் அடைகின்றனர். அவ்வீட்டைக் கட்டி முடிக்க மேலதிகமாக எத்தனை நாட்கள் தேவை?

3 நாட்கள்

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
## புதிர் இல. 85

சரியான விடை:-..............................................................
முழுப்பெயர்:-................................................................
முகவரி:-........................................................................
தொ.பே. இல:..................................................................
கையொப்பம்:..................................................................

# பல்கலை அனுமதி கிடைக்காத மாணவர்களுக்கு வரப்பிரசாதம்

(கொழும்பு)

க.பொ.த உயர்தரப்பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகங்களில் அனுமதி கிடைக்காத மாணவர்களுக்கு கடன் உதவி அல்லது புலமைப்பரிசில் வழங்கி மருத்துவ மற்றும் பொறியியல் பீடங்களில் அனுமதிக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உத்தேசித்துள்ளது.

இவர்களுக்காக பிரத்தியேக மருத்துவ மற்றும் பொறியியல் பீடங்கள் ஸ்தாபிக்கப்படவுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் ஷனிக்கா ஹிரிம்புரேகம தெரிவித்துள்ளார்.

நாட்டிலுள்ள போட்டித் தன்மையைக் கருத்திற்கொண்டு இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர் ஏனைய வழமையான மருத்துவ மற்றும் பொறியியல் பீடங்களைப் போன்றே உரிய தரத்துடன் அவை பேணப்படும் எனவும் தெரிவித்தார்.

மிகவும் குறைந்தளவிலான புள்ளிகள் வித்தியாசத்தில் மருத்துவ மற்றும் பொறியியல் பீடங்களில் அனுமதி பெறத்தவறும் மாணவர்களுக்காக இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

பல்கலைக்கழக பீடங்களுக்குப் பொறுப்பாகவுள்ள அதிகாரிகள் அடங்கிய குழுவொன்றின் ஊடாக மாணவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

(அ-2)

# வாக்காளர் பதிவு விசேட ஏற்பாடுகள் சட்டமூலம் அரசியலமைப்புக்குட்பட்டது

(கொழும்பு)

வாக்காளர்களைப் பதிவு செய்வதற்கான விசேட ஏற்பாடுகள் சட்டமூலம் அரசியல் அமைப்புக்கு உட்பட்டதென உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளதாக சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை நேற்று முன்தினம் பாராளுமன்றில் அறிவித்த போதே சபாநாயகர் இவ்வாறு கூறியுள்ளார்.

வடக்கில் இடம்பெயர்ந்த மக்களுக்கு அவர்கள் முன்னர் இருந்த இடங்களில் வாக்காளர்களாக பதிவு செய்தல் சரியா? தவறா? என்பது குறித்து உயர்நீதிமன்றில் பரிசீலிக்கப்பட்டு வந்தது.

பிரதம நீதியரசர் மொஹறான் பீரிஸ், நீதியரசர் சத்தியா ஹெட்டிகே, ரோஹினி மாரசிங்க ஆகிய மூவர் அடங்கிய நீதிபதிகள் குழு இந்த பரிசீலனையை மேற்கொண்டுள்ளது.

இடம்பெயர்ந்தவர்கள் முன்னர் இருந்த இடங்களிலேயே வாக்காளர்களாக பதிவு செய்யப்படுவதோடு இரண்டு இடங்களில் வாக்காளர்களாக பதிவு செய்யப்பட்டவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுத்தல் தொடர்பில் புதிய சட்டமூலத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

இந்த புதிய சட்டமூலம் சர்வஜன வாக்குரிமையை உறுதிப்படுத்தும் ஒன்று என கபே இயக்கம் அறிக்கை ஒன்றை வெளியிட்டு சுட்டிக்காட்டியுள்ளது.

(அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "எனது கேள்விகளுக்கு சித்தர் அளித்த பதில்கள்"



ஆன்மீகம் 27

அப்போது ஞானத்தை அடைய உடலுக்கு வலிமை தேவை என்ற ஞானத்தை உணர்ந்து உடனே உண்ணா நோன்பை நிறுத்தி உண்ணலாயினார்! இதைக் கண்டதும் அவரைச் சூழ்ந்திருந்த சீடர்கள் நம்பிக்கையை இழந்து அவரை விட்டு நீங்கினர். அதன்பிறகுதான் புத்தரின் கால்கள் கயாவை நோக்கி பயணிக்கத் தொடங்கின. அதனால் பொருளைத் தேட உடல்வலிமை முக்கியம் என்று நிரூபிக்கப்படுகிறதல்லவா? அதனால் ஆண்டவன் கொடுத்த உலக வாழ்வில் மாயையில் மயங்கி ஆண்டவனை மறப்பதால்தான் பொருள் எல்லோருக்கும் கிட்டுவதில்லை!

அடியேன்:- ஆணுக்குப் பெண் என ஆண்டவன்தானே படைத்தான். அப்படியிருக்க அதை ஏன் சித்தர்கள், முனிவர்கள் வெறுக்கிறார்கள்? குறிப்பாக பட்டினத்தார் பாடல்களில் இது அதிகமாக காணப்படுகிறது. அது ஏன்?

சித்தர்:- ராஜா! இது அருமையான கேள்வி! என்னிடமிருந்து விடயங்களைத் தெரிந்து அறிந்து கொள்ளும் உன் ஞானதாகத்தை நான் பாராட்டுகிறேன்! உனையன்றி யாரும் என்னிடம் இப்படி நெருங்கியதுமில்லை. என்னை கேள்விகள் கேட்டதுமில்லை! யாருக்கும் அந்த அளவுக்கு துணிச்சல் கிடையாது. ஆனால், நீ இப்படி எல்லாம் கேட்கிறாய் என்றால் அது பல பிறவிகளில் நீ என்னிடம் பெற்ற உரிமை. நீ பட்டினத்தார் வரலாறு படித்திருக்கிறாய் அல்லவா?



புனித மலைகளில் சாதுக்களுக்கு அன்னதானம்

அடியேன்:- படித்திருக்கிறேன் சாமி!

சித்தர்:- சித்தர் பட்டினத்தார் துறவி ஆவதற்கு முன் இல்லறத்தை நல்லறமாகக் கொண்டு வாழ்ந்தார்! மகனால் ஞானக்கதவு திறக்கப்பட்டவர்! அவர் மனைவி மகாபதிவிரதை! அப்படிப் பட்டவர். பெண்களை வெறுத்துப் பாடினார் என்றால், அதன்நோக்கம் உலக நன்மை ஒன்றேயாகும்! இது சாதாரண மனிதர்களை நல்வழிகாட்ட அவர் பயமுறுத்துகிறார். பெண்ணாய் வந்ததொரு மாயப்பிசாசு என்றெல்லாம் சாடுகிறார்! அவர் தாயும் பெண்தானே! தாயின் மரண நரம் அறிந்து மயானம் சென்று தாய்க்கு ஈமச் சடங்குகள் செய்தவர் அவர்! துறவிகளுக்கு எல்லாவற்றையும் துறக்க முடியும். ஆனால், தாய் மட்டும் விதிவில க்கு! தொப்புள்கொடி பந்தமல்லவா? அதனால் தா்னே இறைவியைக் கூட, தாயே, அன்னையே, லோக மாதா என்றெல்லாம் அழைக்கிறார்கள். முற்காலத்தில் வாழ்ந்த சப்தரிஷிகள், அ்கஸ்தியர், போன்ற முனிவர்கள் எல்லாம் இல்லறம் மேற்கொண்ட மகான்கள்தானே! தர்மத்தை தர்மத்திற்காகவே செய்ய வேண்டும்.

பலனை எதிர்பார்த்துச் செய்தால் பலனிருக்காது. அதேபோல்தான் அவர்கள் வாழ்ந்த இல்லற வாழ்க்கையும் இல்லற தர்மத்திற்காகவே நடத்தப்பட்டதாகும்! அவர்கள் பத்தினியை வெறுக்கச் சொல்லவில்லை! பரத்தையரைத்தான் ஒதுக்கச் சொல்கிறார்! அதனால் பிசாசாம், கண்ணால் வெட்டி, கடுமுனையால் மயக்கி, என் போதைப்பொருள் பறித்தென்னைக் கொல்லாமல் கொல்லுது ஏன் என்று புலம்பி இருக்கிறார். அதனால்தான்

**அன்னை சித்தர்**
**இராஜ்குமார் குருஜி**

மனிதனின் மனதை படம்பிடித்து காட்டுவதைப்போல் சதா பிறந்த இடத்தை நாடுதே கண் என்று வேதனைப் படுகிறாய்! இதெல்லாம் முற்றும் துறந்த அவர்களுடைய வேதனையா? இல்லை! மனிதன் இதை சிந்தித்துப் பார்த்து அப்பெரியயோர்கள் வார்த்தை மீறி நடப்பதற்கு அஞ்சவேண்டும் என்றே அப்படியே எழுதியிருக்கிறார்.

தொடரும்

---

# மத்தலவை இயங்கவைக்க கட்டுநாயக்காவுக்கு கட்டாய ஓய்வு...?

உலகில் எங்கும் இல்லாத விசித்திர விமானப் பயணம்!

விலங்குகள் விமான நிலையப் பகுதிக்குள் வருவதைத் தடுக்க அருகிலுள்ள நீர் நிலைகளை மூடி விடும்படி மேலிடத்தில் இருந்து உத்தரவு வழங்கப்பட்டது போன்று குரங்குகளுக்கு நஞ்சு வைத்துக் கொல்லும்படி உத்தரவு வழங்கப்படலாம் என்றும், விமான நிலைய அதிகாரிகள் தரப்பு தகவல் வெளியிட்டுள்ளது. இந்நிலையில் விமான நிலையத்தின் சுற்றுவட்டாரத்தில் அமைந்துள்ள பறவைகள் தங்குமிடங்களை அழிக்கும் நடவடிக்கையில் விமானசேவைகள் அமைச்சின்கீழ் உள்ள சிவில் விமானசேவைகள் அதிகாரசபை ஈடுபட்டு வருகின்றது என்றும் குறித்த விமான நிலைய சுற்றுவட்டாரத்தில் உள்ள பறவைகளின் வாழுமிடங்கள் மற்றும் விலங்குகள் உணவாக உட்கொள்ளும் தாவர வகைகளையும் அழிப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் எச்.எம்.சீ.நிமல்சிறி ஒத்துக் கொண்டிருக்கின்றார்.

நிலைமை இவ்வாறிருக்க இத்தனை ஆபத்துக்களுக்கு மத்தியிலும் விமானங்களை எவ்வாறு மத்தலவிற்கு திருப்பலாம் என்பதிலேயே மஹிந்த தரப்பு திட்டங்களை வகுத்துக்கொண்டிருப்பதாக தகவல்கள் கசிந்துள்ளன. இதற்காக புதிய திட்டம் ஒன்றைக் கையிலெடுத்துள்ளனர். இதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்தை நாளொன்றுக்கு சுமார் எட்டு மணி நேரங்கள் மூடுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. கட்டுநாயக்காவை மூடினால் விமானங்கள் மத்தலவில் தரையிறங்குவதைத் தவிர வேறு வழியில்லை.


எனவே, புனரமைப்பு வேலைகளைக் காரணமாக்கி 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை தினமும் 8 மணிநேரம் மூட தீர்மானிக்கப் பட்டுள்ளதாக அறியவந்துள்ளது. கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஓடுதளத்தில் புனரமைப்பு பணிகளை மேற்கொள்வதாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இந்த 8 மணி நேரத்தில் இலங்கை வரும் விமானங்கள் ஹம்பாந்தோட்டை மத்தல விமான நிலையத்திற்கு திருப்பிவிடப்படும் எனக் கூறப்படுகிறது.

தற்போது கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஓடுதளங்கள் பராமரிப்பு பணிகளுக்காக ஒருமணி நேரம் மூடப் பட்டு வருகின்றது. ஆனால், சர்வதேச விமானங்கள் அந்தநேரத்தைத் தவிர்த்து இலங்கை [illegible] 8 மணிநேரம் [illegible] பட்டுள்ளது. மஹிந்த அரசின் இந்தத் திட்டம் மத்தலவிற்கு விடிவை ஏற்படுத்துமா?

ஏற்கனவே மிஹின் விமான நிறுவனம் பலகோடி டொலர் நட்டத்தில் பறந்து வருகின்றது. இதன் தலைவராக சமல் ராஜபக்ச இருந்து வருகின்றார். இந்நிலையில் கடந்தவாரமும் இயந்திரக் கோளாறு காரணமாக மிஹின்லங்கா விமானமானது தனது பயணத்தை இரண்டு தடவைகள் இரத்துச் செய்த சம்பவம் கட்டுநாயக்க விமானநிலையத்தில் இடம்பெற்றுள்ளது. அதுவும் அண்மையில் புதிதாகக் கொள்வனவு செய்த விமானம் இயந்திரக் கோளாறில் சிக்குண்டுள்ளது. மிஹின் லங்காவுக்கு சொந்தமான [illegible] என்ற ரக விமானம் காலை [illegible] மதுரை நோக்கி பயணமாக தயாராகியிருந்துள்ளது. இதன்போது 173 பயணிகளும் 15 பணியாளர்களும் விமானத்தில் இருந்துள்ளனர்.

எனினும் இயந்திரக் கோளாறு காரணமாக அப்பயணத்தை இரத்துச் செய்தனர். இயந்திரம் திருத்தப்பட்டு மாலை 6 மணிக்கு அவ்விமானம் தனது பயணத்தை மீண்டும் ஆரம்பிக்க இருந்தவேளை மீண்டும் இயந்திரத்தில் கோளாறு ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து அப்பயணமும் இரத்து செய்யப்பட்டதுடன் 173 பயணிகளில் 150 பயணிகள் பின்னர் இலங்கை எயாருக்கு சொந்தமான விமானம் மூலம் நள்ளிரவு 12 மணிக்கு மதுரைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

ஏனையவர்கள் மறுநாள் காலை வரை விமானமின்றி விமான நிலையத்தில் தங்கியிருந்துள்ளார். இதனால் மிஹின் லங்காவிற்கு மேலும் நட்டம் ஏற்பட்டுள்ளது. இவ்வாறு மஹிந்த விமானசேவையும், விமானநிலையமும் நட்டத்தில் படுகுழிக்குள் விழுந்து ஜனாதிபதியின் பறக்கும் கனவுகளை சிதைத்துக் கொண்டிருக்கின்றன. ஆனாலும் அவர் அதற்காக அச்சம் கொள்ளவில்லை. ஏனென்றால் இழக்கப்படுவது மக்களின் பணம் அல்லவா...!




-இணையம்-

முற்றும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

478

# தகுதி



அவ்வூரில் உள்ள பாரதி வித்யாபவன் பள்ளியில் ஆசிரியர் வேலைக்கான நேர்முகத்தேர்விற்கு வரும்படி வந்த தபாலைப் படித்த சிதம்பரம் எப்படியாவது தனக்கு அந்த வேலை கிடைக்கவேண்டும் என்று ஆசைப்பட்டான். நேராகத் தன் உறவினர் பொன்முத்து வீட்டிற்குச் சென்றான். அவரிடம் செய்தியைச் சொன்னான். மேலும், "ஐயா, அப்பள்ளியின் காசாளரை உங்களுக்குத் தெரியும். எவ்வளவு பணம் கேட்டாலும் நான் எப்படியாவது கொடுத்து விடுகிறேன். தயவுசெய்து அந்த வேலையை எனக்கு வாங்கிக் கொடுங்கள்" என்றான். அதற்கு அவர், இந்தக் காலத்தில் லஞ்சம் கொடுத்தால் எதையும் சாதித்து விடலாம். நான் உனக்குக் கட்டாயம் அந்த வேலையை வாங்கித் தருகிறேன். பணத்தைத் தயாராக வைத்திருக்க ஏற்பாடு செய்" என்று சொன்னார்.

சொன்னபடி பொன்முத்து காசாளரையும், தலைமை ஆசிரியரையும் நேரில் பார்த்து, சிகாமணிக்கு வேலைபோட்டுத் தரும்படியும், அதற்கு கேட்கும் பணம் கொடுக்கப்படும் என்றும் கூறிவிட்டு வந்தார்.

சொன்ன தேதிக்கு சிகாமணி நேர்முகத்தேர்விற்குச் சென்றான். இன்னும் சிலரும் வந்திருந்தனர். அவர்களும் லஞ்சம் கொடுக்கத் தயாராக இருந்தனர். காசாளரும் தலைமை ஆசிரியரும் தேர்வை முன்னின்று நடத்தினர். வந்து இருந்தவர்களில் அரவிந்தன் என்ற இளைஞன்தான் தேர்ந்து எடுக்கப்பட்டான்.

அந்தச் செய்தியை அறிந்த பொன்முத்துவிற்கு பெரிதும் ஏமாற்றம். மறுநாளே பாரதி வித்யாபவனுக்கு சென்று காசாளரையும், தலைமை ஆசிரியரையும் பார்த்து, "ஒரு லட்சம் ரூபாய் லஞ்சம் கேட்பீர்கள் என்று நினைத்தேன். சிகாமணியும் கொடுக்கத் தயாராக இருந்தான். அவனுக்குத் தாராமல் லஞ்சமே வாங்காமல் அரவிந்தனுக்கு ஏன் வேலை கொடுத்தீர்கள்?' என்று சத்தம் போட்டார்கள்.

அதற்கு தலைமை ஆசிரியர், "படிக்க வேண்டும் என்ற விழிப்புணர்ச்சி இப்பொழுதும் அதிகமாக இருக்கிறது. மாணவர்களின் ஆற்றலையும், திறமையையும் வெளிக்கொண்டு வருவது தான் ஒரு சிறந்த ஆசிரியரின் கடமை. இதற்கு அவரின் உழைப்பும், கற்பிக்கும் திறமையும் தான் முக்கியம். இந்தத் தகுதியை பணம் கொடுத்துப் பெறமுடியாது. லஞ்சம் பெற்றுக் கொண்டு வேலைக்கு எடுத்துக்கொண்ட ஆசிரியரிடம் நேர்மையைப் பற்றி, பேசமுடியாது. நீங்கள் நேர்மையான முறையில் வேலை கொடுத்தீர்களா? என்று அவர் திருப்பி எங்களைக் கேட்டால் என்ன பதில் சொல்லுவது? தன்னை நம்பி ஒப்படைக்கப்பட்டிருக்கும் சிறார்களைத் தன் குழந்தை போல் எண்ணி, அர்ப்பணிப்பு உணர்வோடு பணியாற்ற வேண்டும். இந்த பண்பை பணம் கொடுத்தாலும் வாங்க முடியாது. லஞ்சம் கொடுத்தவன் பாடம் சொல்லிக் கொடுப்பதைவிட, தான் கொடுத்த பணத்தை எப்படி சம்பாதிப்பது என்று தான் யோசிப்பான். அதனால் இந்த புனிதமான ஆசிரியர் பணிக்கு கீழ்த்தரமான முறையில் லஞ்சம் பெற்றுத் தகுதியற்றவனை நியமிக்க எங்களுக்கு விருப்பமில்லை. தகுதியும், பண்பும் உள்ளவனை மட்டுமே நாங்கள் தேடினோம். மிக நல்ல ஆசிரியருக்கான தகுதியும், பண்பும் அரவிந்தனிடம் காணப்பட்டதால் தான் வேலை கிடைத்தது" என்றார் பொன்முத்துவுக்கும் உண்மை புரிந்தது.



## அம்புலிமாமா கதைகள்

# அன்புக்கு அடிமை




ஒரு நாள் ரங்கா தன் மாமாவுடன் பீச்சுக்குச் சென்றான். அங்கு அவன் மாமாவுக்கு அரட்டையடிக்க அவர் நண்பர்களில் ஒருவர் கிடைக்க, ரங்கா தனித்து விடப்பட்டான்.

சற்றுத் தொலைவில் பீச் மணலில் ஓர் ஆமை நகர்ந்து செல்வதைப் பார்த்த ரங்கா உடனே அதன் அருகே சென்றான். அவனை மிக அருகில் பார்த்ததும் ஆமை தன் தலையை ஓட்டுக்குள் இழுத்துக்கொண்டு அசையாமல் நின்றது. ஆமை நகருவதைப் பார்க்க ஆவலுடனிருந்த ரங்காவுக்கு ஏமாற்றம் உண்டாக, அவன் ஒரு குச்சியினால் குத்திப் பார்த்தான். ஆமை அசையவே இல்லை. அதற்குள் தொலைவிலிருந்து அவன் செய்வதைக் கவனித்த மாமா, அவனருகே வந்து, "டேய்! என்ன காரியம் செய்கிறாய்? ஆமையைப் பார்க்கவேண்டும் என்பதால், அதைக் குச்சியினால் அடித்து துன்புறுத்தலாமா? நீ செய்வது தவறு " என்று சொல்லி,ஆமையை அணைத்து எடுத்துக்கொண்டு வீட்டுக்குச் சென்றார். பிறகு அதை, கதகதப்பான இடத்தில் சற்று நேரம் வைக்க ஆமை மெதுவாகத் தலையை நீட்டியது. "ஆகா ஆமை எட்டிப் பார்க்கிறது ! "என்று மகிழ்ச்சியுடன் ரங்கா கூறினான். அதற்கு மாமா "ரங்கா! ஒரு விடயத்தை நன்றாகப் புரிந்துகொள்! மனிதர்களுக்கு மட்டும் தான் அன்பு, பாசம் என்று நினைக்காதே! உலகிலுள்ள எல்லா ஜீவராசிகளுக்கும் நம்மைப்போலவே உணர்ச்சிகள் உண்டு. நீ அவற்றைத் துன்புறுத்தாமல் அன்பு செலுத்தினால், அவையும் நம்முடன் பிரியத்துடன் பழகும்! " என்று அவர் கூறும்போதே, ஆமை மெதுவாக நகரத் தொடங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் எல்லைக் கிராமங்களை பாதுகாக்க வேண்டியது கட்டாய கடமை

## அரியம் எம்.பி.தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

**வடக்குக்கிழக்கில் உள்ள தமிழர்களின் எல்லைக் கிராமங்களைப் பாதுகாப்பதற்கான வேலைத்திட்டங்களை தமிழ் அமைப்புக்கள் முன்னெடுக்க வேண்டுமென மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பின் எல்லைக் கிராமங்களான தாந்தாமலை, நாப்பதுவெட்டை, மக்களுடன்கலந்துரையாடிய வேளை களைப் பார்வையிட்டு அங்குள்ள மக்களுடன்கலந்துரையாடியவேளை கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், வடகிழக்கு தமிழர்களின் எல்லைக் கிராமங்களை அபகரிக்கும் திட்டமிட்ட வேலைத்திட்டங்களை அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது.

குறிப்பாக எல்லைக் கிராமங்களில் சிங்கள மக்களை குடியேற்றுவதுடன் பௌத்த விகாரைகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றனர். ஆனால், தமிழ் எல்லைக் கிராமங்களுக்கான அடிப்படைத் தேவைகளையோ பாதுகாப்பையோ அரசாங்கம் வழங்குவதற்கு தயக்கம் காட்டி வருகின்றது.

வட கிழக்கு தாயக நிலங்களைப் பாதுகாக்க வேண்டியது அனைத்து தமிழர்களதும் கட்டாய கடமையாகும். நிலத்தை இழந்துவிட்டு உரிமைகளைக் கோருவதில் அர்த்தமில்லை. முதலில் நிலங்களைப் பாதுகாக்கவேண்டும். நிலம்இருந்தால்தான் உரிமைகளைக் கேட்கமுடியும்.

எனவே, தமிழர்களின் நிலங்களைப் பாதுகாப்பதற்கு உலகத்தமிழர்கள் அனைவரும் உதவ வேண்டும். எல்லையில் உள்ள தமிழ் கிராமங்களில் வாழும் மக்களுக்கான அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து அவர்களுக்கான வாழ்வாதார அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதனூடாக இங்குள்ள மக்களின் உதவியுடன் எல்லைக் கிராமங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

எனவே, புலம்பெயர் தேசத்தில் உள்ளவர்கள் எல்லைக் கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கான உதவிகளை செய்வதற்கு முன்வர வேண்டுமென இங்குள்ள மக்களின் சார்பாக நான் கோரிக்கை விடுக்கின்றேன் என்றார். (அ-2)

# ஐ.நா. பேரவை அமர்வுகளின் போது பெலாரசை ஆதரித்தது இலங்கை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் பெலாரசிற்கு இலங்கை ஆதரவளித்துள்ளது. ஐக்கிய நாடுகளின் விசேட பிரதிநிதியொருவர் பெலாரசிற்கு எதிராக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவையின் 23 ஆவது அமர்வில் அறிக்கை ஒன்றை சமர்ப்பித்து இருந்தார்.

அந்த அறிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் இது அரசியல் நோக்கில் தயாரிக்கப்பட்டது எனவும் இலங்கைப் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மெய்யாகவே இந்த அறிக்கை தயாரிக்கப்படவில்லை எனவும் பெலாரஸ் அரசாங்கத்தின் கருத்துக்கள் கோரப்படவில்லை எனவும் இலங்கை குற்றம் சுமத்தியுள்ளது.

பெலாரஸ் அரசாங்கத்தின் மனித உரிமை நிலைமைகள் மோசமாகக் காணப்படுவதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அவசர அவசரமாக மனித உரிமை நிலைமைகள் குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் எதுவும் கிடையாது எனவும் சுட்டிக்காட்டியுள்ளது. (அ-2)

# போதைப்பொருளுடன் பெண்ணொருவர் கைது

(கொழும்பு)

வெள்ளவத்தை-வேலுவனாராம வீதியில் ஹெரோயின் போதைப் பொருளுடன் பெண் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

தமக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல் ஒன்றை அடுத்து குறித்த பெண் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டதாக வெள்ளவத்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பெண்ணிடம் இருந்து 2 கிராம் 400 மில்லிகிராம் (86 ஹெரோயின்) பைக்கெற் கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேக நபர் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். (அ-2)

# இரணைமடு நீர்ப்பாசன அபிவிருத்தி திட்டம் ஆரம்பம்

(கிளிநொச்சி)

இரணைமடு விவசாய நீர்ப்பாசன அபிவிருத்தித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசன திணைக்கள திட்டப்பணிப்பாளர் என்.சுதாகரன் தெரிவித்துள்ளார்.

கடந்த 30 வருடங்களாக நீர்ப்பாசன அபிவிருத்தி மற்றும் நீர் முகாமைத்துவத்தை பேண முடியாத நிலைமை காணப்பட்டது.

3 தசாப்த காலமாக பாதிப்படைந்திருந்த கால்வாய்கள்,கழிவு வாய்க் கால்களைப் புனரமைக்கும் நோக்கிலேயே இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி இரணைமடுக்குளத்தின் நீளமான கால்வாய்கள், கழிவு வாய்க்கால்கள் மற்றும் வீதி என்பனவே இத்திட்டத்தின் கீழ் புனரமைப்பு செய்யப்படவுள்ளன.

மேலும் 5 வருட அபிவிருத்தித் திட்டத்திற்காக 29.23 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், இத்திட்டம் பூர்த்தியடைந்த பின்னர் சிறந்த முறையில் நீர்ப்பாசனத்தை வழங்கமுடியும் என்பதுடன் உரிய முறையில் விவசாயிகள் பயனடையக் கூடிய வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படுமெனவும் அவர்மேலும் தெரிவித்துள்ளார். (அ-5)

# வாக்காளர் பதிவு சட்டமூலம் அரசியலமைப்புக்கு முரணானதல்ல

## பிரதி சபாநாயகர் தெரிவிப்பு

வாக்காளர் பதிவு விசேட ஏற்பாடுகள் சட்ட மூலத்தின் எந்தவொரு சரத்தும், அரசியலமைப்பிற்கு முரணானதல்ல என உச்ச நீதிமன்றம் பாராளுமன்றத்துக்கு அறிவித்துள்ளதாக பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் அறிவித்துள்ளார்.

மேற்படி வாக்காளர் பதிவு தொடர்பான சட்டமூலம் ஜனாதிபதியினால் உச்ச நீதிமன்றத்துக்கு அனுப்பப்பட்டிருந்ததுடன், அதனைப் பரிசீலித்த பின்னரே மேற்படி சட்டமூலம் எந்தவொரு சரத்தும் அரசியலமைப்புக்கு முரணானதாக அமையவில்லையென்றும் உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

பாராளுமன்றம் நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு மணிக்கு கூடிய போது பாராளுமன்ற நடவடிக்கைகளின் ஆரம்பத்தில் சபாநாயகரின் அறிவித்தல்களின் போது மேற்படி வாக்காளர் பதிவு சட்டமூலம் தொடர்பில் பிரதி சபாநாயகரினால் அறிவிக்கப்பட்டது. (அ-2)

# கல்வி கற்காத சிறுவர்களை பாடசாலைக்கு அனுப்பும் திட்டம்

(கொழும்பு)

பாடசாலை செல்லாத மாணவர்களை கட்டாயம் பாடசாலைக்கு அனுப்பி வைக்கும் திட்டமொன்றை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை ஆரம்பித்துள்ளது.

அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றுடன் இணைந்து இத்திட்டம் முன்னெடுக்கப்படுவதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை அறிவித்துள்ளது.

அத்துடன் வடக்கு, கிழக்கு பகுதிகளிலுள்ள தந்தை அல்லது தாயை இழந்த சிறுவர்களுக்கென ஆரம்பிக்கப்பட்டுள்ள வேலைத்திட்டமும் விரிவுபடுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

14 தொடக்கம் 18 வயதுடைய சிறுவர்களை சிறுவர் இல்லத்தில் இணைக்காது அவர்களுக்கு கல்வி புகட்டும் திட்டமொன்றை செயற்படுத்தவுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது. (அ-2)




❖1099 -முதலாவது சிலுவைப் போர்: ஜெருசலேம் மீதான தாக்குதல் ஆரம்பமானது.

❖1494 -ஸ்பெயினும் போர்த்துக்கல்லும் தாம் கண்டுபிடித்த புதிய உலகத்தை தமக்கிடையே பகிர்ந்து கொள்ளும் உடன்பாட்டை எட்டினர்.

❖1654 -பதினான்காம் லூயி பிரான்சின் மன்னனாக முடிசூடினான்.

❖1692 -ஜமெய்க்காவில் மூன்றே நிமிடங்கள் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் ஆயிரத்து 600 பேர் பலியாகினர்.

❖1832 -கனடாவில் கியூபெக்கில் ஐரிய குடியேறிகளால் கொண்டு வரப்பட்ட கொள்ளை நோய் காரணமாக 6 ஆயிரம் பேர் வரையில் உயிரிழந்தனர்.

❖1863 -மெக்சிக்கோ நகரம் பிரெஞ்சுப் படையினரால் கைப்பற்றப்பட்டது.

❖1893 - மகாத்மா காந்தி தனது முதலாவது ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்தார்.

❖1905-நோர்வே சுவீடனுடனான தொடர்புகளைத் துண்டித்தது.

❖1917 - முதலாம் உலகப் போர்: பெல்ஜியத்தில் மெசைன் என்ற இடத்தில் 10 ஆயிரம் ஜேர்மனியப் படையினர் உயிரிழந்தனர்.

❖1944 - இரண்டாம் உலகப் போர்: நோமண்டி சண்டையில் 23 கனேடிய போர்க்கைதிகளை நாசிப் படைகள் கொன்றன.

❖1967 - இஸ்ரேலியப் படைகள் ஜெருசலேம் நகரினுள் நுழைந்தன.

❖1981 - இஸ்ரேலிய வானூர்திகள் ஈராக்கின் ஒசிராக் அணுக்கரு உலை மீது குண்டு வீசித் தாக்கி அழித்தன.

❖1989 - சுரினாமில் விமானம் ஒன்று வீழ்ந்ததில் 168 பேர் இறந்தனர்.

❖1991 - பிலிப்பைன்சில் பினடுபோ எரிமலை வெடித்து 7 கி.மீ. உயரத்துக்கு அதன் தூசிகள் பறந்தன.

❖2000-கொழும்பில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் அமைச்சர் சி. வி. குணரத்ன மற்றும் தெகிவளை மாநகர உதவி மேயர் ஆகியோர் உயிரிழந்தனர்.

❖2006 -மட்டக்களப்பு மாவட்டத்தில் நெடுங்கல் கிராமத்தில் இடம்பெற்ற கண்ணிவெடியில் சிக்கி 6 மாதக் குழந்தை உட்பட 10 பேர் உயிரிழந்தனர்.

❖2007 -கொழும்பு விடுதிகளில் இருந்து தமிழர் கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர்.

பிறப்புகள்

❖1974 - மகேஷ் பூபதி, இந்திய டென்னிஸ் ஆட்டக்காரர்

❖1975 - ஏலன் ஐவர்சன், அமெரிக்காவின் கூடைப்பந்து ஆட்டக்காரர்

இறப்புகள்

❖1906-பொன்னம்பலம் குமாரசுவாமி, இலங்கையின் சட்டசபை உறுப்பினர் (பி. 1849)

❖1964 - ஆறுமுகம் ஆச்சாரியார், யாழ்ப்பாணம் திருநெல்வேலியைச் சேர்ந்த சிற்பாசிரியர் (பி. 1890)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனமயமாகும் இலங்கையின் பொருளாதாரம்



மாற்றுச் சிந்தனைகளையும் அதற்கான செயற்பாட்டு வழிமுறைகளையும் இலங்கை அரசு ஏராளமாக வைத்துள்ளது. விடுதலைப் புலிகளுடனான யுத்தம் முடிவடையும் வரை பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்கின்ற அமெரிக்கப் பொதுமொழி ஊடாக எல்லா நாடுகளையும், முரண்பாடுகளின்றி தன் பின்னால் அணிதிரள வைத்தது அது.

யுத்தம் முடிவடைந்தவுடன் பிரச்சினைகள் ஆரம்பமாகின. அமெரிக்கத் தீர்மானம் சீபா ஒப்பந்தச்சிக்கல் என்று பல கோணங்களில் இன்று பிரச்சினைகளை இலங்கை எதிர்கொள்கிறது.

இலங்கையில் அதிகரிக்கும், சீனாவின் முதலீடே, இப்பிரச்சினைக்களுக்கான முக்கிய காரணியென நம்பப்படுகிறது. இது கலப்படமற்ற, புனைவுகளற்ற யதார்த்தம். தம்மீது அழுத்தங்களைக் கொடுக்க வரும் யானைகளின் மணியோசை கேட்டவுடன், சீனாவிற்கு ஓடும் வழக்கத்தை தற்போதைய இலங்கை ஆட்சியாளர்கள் கொண்டிருப்பதை, கடந்த நான்கு ஆண்டுகளில் பல தடவைகள் கண்டுள்ளோம்.

2011 ஆகஸ்டிலும் நான்கு நாள் விஜயம்; இந்த மாதமும் சீனாவிற்கான நான்கு நாள் பயணத்தை மேற்கொண்டுள்ளார் அரச ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ; ஒவ்வொரு தடவையும் பற்பல ஒப்பந்தங்கள்.

இதனால், சீனாவிலும் கொழும்பிலும் மந்திரிகள், அரச அதிகாரிகள் நேர்காணல்களில் தீவிரமாகிவிட்டனர். மக்களுக்கும் சில செய்திகள் உண்டு- வேலைவாய்ப்பு அதிகரிக்கும், பயணங்களின் காலம் குறுகும், பாதைகள் அந்த மாதிரி இருக்கும் போன்ற வாக்கு வங்கி, வாக்குறுதிகள் மக்களுக்குச் சொல்லப்படும்.

அதேவேளை இந்தியாவிற்கும், அமெரிக்காவுக்கும் கூட செய்தி உண்டு. மக்களுக்கு புரியாதவாறு அச்செய்தி சொல்லப்படும்.

அதன் நுட்பமான பக்கங்கள் இங்கே இப்பத்தியில் முன்வைக்கப்படுகிறது:

இம்முறை என்ன கொண்டுவந்தார் ஜனாதிபதி என்று பார்த்தால், உடன்பட்ட கடனின் அளவு சற்றுத் தூக்கலாகத்தான் இருக்கிறது.

உட்கட்டுமான அபிவிருத்தித் திட்டங்கள், சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பாக, 2.2 பில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவி வழங்க சீனாவின் புதிய ஜனாதிபதி சி ஜின்பிங் உடன்பட்டுள்ளார்.

இதனால், எந்தவொரு நாட்டிற்கும் ஆபத்தில்லையென்று வெளிநாட்டமைச்சர் ஜி.எல்.பீரிசும், வியாபாரத்தைத் தவிர, வேறொன்றுமில்லை என்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் எவ்வளவுதான் தன்னிலை விளக்கங்களை அளித்தாலும், இந்தியாவைப் பொறுத்தவரை இந்த ஒப்பந்தங்கள் எரிச்சலூட்டும் விடயங்கள்தான்.

இந்தியாவைச் சுற்றி சீனா முத்துமாலை கட்டும் நாடுகளில், நிதி உதவி என்பது ஆதிக்கம் செலுத்தும் கருவியாகவே பார்க்கப்படுகிறது. ஆனால், சீனாவின் அளவிற்கு இந்தியாவால் நிதி முதலீடு செய்ய முடியவில்லையா? அல்லது அதனை வேண்டுமென்றே இலங்கை தவிர்க்கிறதா என்கிற சர்ச்சையும் உண்டு.

ஆனாலும், போருக்குப் பின்னான காலத்தில், ஏறத்தாள 6 பில்லியன் அமெரிக்க டொலர்களை பல உட்கட்டுமான அபிவிருத்தித் திட்டங்களில் இந்தியாவும் சீனாவும் கடனடிப்படையில் உதவி புரிந்ததைக் குறிப்பிட வேண்டும்.

சீனாவின் வர்த்தக உறவில் குறித்த வரலாற்றுப் பின்புலத்தைப் பார்த்தால், 1952 ஆம் ஆண்டு, றப்பர்- அரிசி ஒப்பந்தம் மூலம் ஆரம்பமாகிறது இலங்கை-சீன வர்த்தகம். தற்போது அதன் வளர்ச்சி 3.17 பில்லியன் டொலர்களாக உயர்ந்துள்ளது.

அதேவேளை, உல்லாசப் பயணத்துறையை ஊக்குவிப்பதற்குரிய முதலீடுகளை செய்யவும் சீனா முன்வருகிறது. அத்தோடு சீன உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கையை இந்த வருட இறுதிக்குள் 60 ஆயிரமாக அதிகரிக்க வேண்டுமென்கிற திட்டத்தோடு இலங்கை உல்லாசப் பயணத்துறை சார்ந்தோர், சீன நகரங்களில் புதிய விளம்பர உத்திகளை பிரயோகிக்க ஆரம்பித்துள்ளனர்.

இம்மாதம் சீனாவிற்கு மேற்கொண்ட பயணத்தில், பாதுகாப்பு தொடர்பான பயிற்சிகள், கடல்சார் பாதுகாப்பு, சுதந்திர வர்த்தகம் தொடர்பான கொள்கைரீதியான உடன்பாடு, பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்தல், தொடரூந்து பாதை நிர்மாணம், தென்பகுதி நெடுஞ்சாலை மற்றும் கொழும்பு முறைமுக அபிவிருத்தி போன்ற விடயங்கள் குறித்துப் பேசப்பட்டது.

பாரிய சீனச் சந்தையில், இலங்கையின் உற்பத்திப் பொருட்களுக்கான வாய்ப்பினை பெறும் வகையில், சுதந்திர வர்த்தக உடன்பாடுகளை உருவாக்குவதற்கு, குழுக்களை அமைக்க இச்சந்திப்பில் இணக்கம் காணப்பட்டது.

சீனப் பிரதமர் லி கெகியாங் உடனான சந்திப்பின் போது, வர்த்தக சமநிலையற்ற போக்கு குறித்து சுட்டிக்காட்டப்பட்டது. அதனை நேர்த்தியான முறையில் அணுகுவதாகக் கூறிய சீனப்பிரதமர், இருதரப்பு பொருளாதார ஒத்துழைப்புத் திட்டம் பற்றியதான உரையாடலில் அதிக கவனம் செலுத்தியதாகக் கூறப்படுகிறது. அது இந்தியாவின் சீபா ஒப்பந்தக் கனவினை நினைவூட்டியதாக சில அரசியல் நோக்கர்கள் சொல்கின்றார்கள்.

உரையாடலின் போது, அம்பாந்தோட்டையில் கைத்தொழில் வலயமொன்றினை நிறுவும் விருப்பத்தையும் சீனப்பிரதமா குறிப்பிட்டுள்ளார். அத்தோடு செய்மதி தொடர்பாடல், விண்வெளி தொழில் நுட்பம், மற்றும் கடற்றொழில் மேம்பாடு போன்ற துறைகளில் இலங்கைக்கு உதவிடத் தயார், என்கிற உறுதி மொழியையும் அவர் வழங்கியுள்ளார்.

முக்கியமாக எட்டப்பட்ட உடன்பாடுகள் எவை என்று நோக்கினால், அத்தனகல, மினுவாங்கொட, குருநாகல் நீர்வழங்கல் திட்டம், கண்டியில் சர்வதேச மாநாட்டு மண்டபம் மற்றும் அனுராதபுரத்தில் ஒரு நுண்கலை அரங்கம் என்பவற்றை குறிப்பிட்டுச் சொல்லலாம்.

இவைதவிர, நவம்பரில் நடைபெறவிருக்கும் பொதுநலவாய நாடுகளின் கூட்டத் தொடரில் பிரத்தியோகமாக கூட்டப்படும் வணிக மாநாட்டில் சீன வர்த்தகக் குழுவினரை பங்குபற்றுமாறு அரசால் அழைப்பு விடுக்கப்பட்ட செய்தியும் கவனிக்கத்தக்கது.

இரு நாடுகளுக்குமிடையே மூலோபாய- இருதரப்பு உறவினை வலுப்படுத்த, சீனப்பிரதமரையும், ஜனாதிபதியையும் இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு அழைப்பும் விடுக்கப்பட்டது.

அதேவேளை கடன்பொறிக்குள் வீழ்ந்த இலங்கை அரசானது, உட்கட்டுமான அபிவிருத்தித் திட்டங்களுக்கு சீனாவிடமிருந்து பாரியளவில் கடனுதவிகளைப் பெற்றாலும், 9 பில்லியன் டொலர் வர்த்தகப் பற்றாக்குறையால் ஏற்படும் நிதி நெருக்கடிக்குள் இருந்து விடுபட முடியாதென நிதியியல் ஆய்வாளரும், ஐ.தே.க. வின் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய ஏரன் விக்கிரமரட்ண எச்சரிக்கின்றார்.



வெளிநாட்டில் பணிபுவோரின் 6 பில்லியன் டொலர் வருவாய் மற்றும் உல்லாசப் பயணத்துறையால் கிடைக்கும் 1.5 பில்லியன் வருவாய் என்பற்றைச் சேர்த்தாலும் 2 பில்லியன்களுக்கு மேல் பற்றாக்குறை ஏற்படுகிறது.

இதைவிட கடனாகப் பெறும் வெளிநாட்டு நாணயங்களுக்கான வட்டியைச் செலுத்துவதற்கு மேலதிகமாக 1.5 பில்லியன் டொலர்கள் தேவைப்படுகிறது. ஆகவே, இவற்றைச் சீர்செய்ய, வெளிநாட்டு நேரடி முதலீடு அதிகரிக்கப்பட வேண்டும் என்பதுதான் இதற்கான மாற்றுவழி என்று அரசு கணிப்பிடுகிறது.

சீன அபிவிருத்தி வங்கி கூட்டுத்தாபனத்திடமிருந்து 580 மில்லியன் டொலரைக் கடனாகப்பெறும் வகையில், நிதி திட்டமிடல் அமைச்சுக்கும் இந்த வங்கிக்குமிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று உருவாகலாமென்று செய்திகள் தெரிவிக்கின்றன.

அதவேளை கடந்த 7 வருடங்களில், 37 அபிவிருத்தித் திட்டங்களுக்கு கடன் வழங்கிய சீன அரசின் எக்ஸ்சிம் வங்கித் தலைவர் லி ரோகு அவர்களோடு விரிவான உரையாடலில் இலங்கை ஜனதாதிபதி ஈடுபட்டுள்ளார்.

இந்த எக்ஸ்சிம் வங்கிதான், நுரைச்சோலை அனல் மின்நிலைய நிர்மாணத்திற்கு முதற்கட்டமாக 455 மில்லியன் டொலர்களையும், கொழும்பு- கட்டுநாயக்க துரித நெடுஞ்சாலைக்கு 310 மில்லியன் டொலர்களையும், மத்தல சர்வதேச விமான நிலய கட்டுமானப் பணிக்கு 190 மில்லியன் டொலர்களையும் இலங்கைக்கு வழங்கியது.

ஆனாலும் சினாவிடமிருந்து பாரியளவு தொகையை கடனாகப் பெற்றாலும், அதிலிருந்து கிடைக்கும் வருமானம், கடனிற்கான வட்டியைச் செலுத்தக்கூட போதுமானதாக இல்லை என்பதுதான் அரசின் பெருங்கவலை.

மொத்த உள்ளூருற்பத்தியில் ஏற்றுமதியின் சதவீதம் தேய்ந்துகொண்டே போகிறது. ஐரோப்பாவில் நிலவும் பொருளாதார சிக்கல், மத்தியகிழக்கில் நீடிக்கும் அமைதியற்ற சூழல் மற்றும் ஈரான் மீதான அமெரிக்காவின் பொருளாதாரத் தடை என்கின்ற காரணிகள் இணைந்து இலங்கையின் ஏற்றுமதியில் என்றுமில்லாத அளவிற்கு தாக்கங்களை ஏற்படுத்துகிறது.

கடந்த வருடம் இலங்கையின் மொத்த உள்ளூர் உற்பத்தி 6.4 சதவீதமாக இறங்கியுள்ளது. 2013 இல் இதைவிட மேலும் இறங்கிச் செல்லுமென பொருளியல் ஆய்வாளர்கள் கணிப்பிடுகின்றார்கள்.

இதைவிடச் சுவாரசியமான இன்னொரு விடயமும் உண்டு. சீன அரசின் கடன், அதன் மொத்தண உள்ளூர் உற்பத்தியின 50 சதவீதத்தை எட்டியுள்ளதாம். 2011 இல் மொத்த உள்ளூருற்பத்தி இன் 37.8 வீதமாக இருந்த அரசின் கடனளவு, 2012 இல் 40 சதவீதத்தை எட்டியது.


இப்போ சீனாவிற்கு விஜயம் செய்துள்ள அனைத்துலக நாணய நிதியத்தின் உயர்நிலை அதிகாரிகளே, இந்த 50 வீத கணிப்பு பற்றி கூறுகின்றார்கள். சீனாவும் அதனை மறுக்கவில்லை.

ஆகவே சீனாவின் இலங்கைக்கான நிதியுத்வி எத்தனை காலத்திற்கு நீடிக்குமென்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

-இதயச்சந்திரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய வசதிகளுடன் சுப்ப பைக்



அமெரிக்காவை சேர்ந்த மிஷன் மோட்டார்சைக்கிள் நிறுவனம் எலக்ட்ரிக் சுப்பர் பைக் தயாரிப்பில் சிறந்த பெயர் பெற்றது. இந்த நிறுவனம் மிஷன் ஆர்எஸ் என்ற பெயரில் சிறப்பு பதிப்பு எலக்ட்ரிக் சுப்பர் பைக் ஒன்றை விற்பனைக்கு கொண்டு வந்திருக்கிறது.

இதுதவிர, மிஷன் ஆர் என்ற பெயரில் சாதாரண மொடலையும் அறிமுகம் செய்துள்ளது. இந்த புதிய எலக்ட்ரிக் சுப்பர் பைக்கின் வேகம், செயற்றிறன் ஆகிய அனைத்தும், சாதாரண சுப்பர் பைக்குகளுக்கு சற்றும் சளைத்ததல்ல என்பதை காட்டுவதாக இருக்கின்றன. ஓட்டப் பந்தயத்தில் ஓட்டுவதற்கான அம்சங்கள் கொண்ட இந்த பைக்கை சாதாரண வீதிகளிலும் செலுத்தலாம்.

- ✔ இந்த சுப்பர் பைக்கில் 17 kwh பற்றரி பொருத்தப்பட்டிருக்கிறது.
- ✔ மிஷன் ஆர்எஸ் சுப்பர் பைக்கின் எலக்ட்ரிக் மோட்டார் 160 எச்பி ஆற்றலை வெளிப்படுத்தும் திறன் கொண்டது.
- ✔ 0-100 கிமீ வேகத்தை 3 விநாடிகளில் எட்டிவிடும்.
- ✔ சோதனை நிலைகளில் இந்த சுப்பர் பைக் மணிக்கு 241 கிமீ வேகம் வரை எட்டிப் பிடிக்கும். ஆனால், சாதாரண சாலைகளில் இந்த பைக்கில் 225 கிமீ வேகம் வரை செல்லலாம் என மிஷன் தெரிவித்துள்ளது.
- ✔ ஒருமுறை சார்ஜ் செய்தால் 320 கிமீ தூரம் வரை செல்ல முடியும் என மிஷன் தெரிவித்துள்ளது.
- ✔ கார்களில் உள்ளது போன்ற டிஸ்ப்ளே யூனிட் ஒன்று பொருத்தப்பட்டுள்ளது. இந்த டிஸ்ப்ளே யூனிட்டில் 4 ஜி இணைப்பை கொடுத்து கூகுள் மேப் வசதியை பெறலாம். இதுதவிர, ஸ்மார்ட்போன்களையும் புளுடூத் மூலம் இணைக்க முடியும்.
- ✔ பைக்கின் முன்புறம் உயர்தர துல்லியம் கொண்ட கமரா ஒன்றும் பொருத்தப்பட்டுள்ளது.
- ✔ இந்த பைக்கில் கார் போன்றே ரிவர்ஸ் எடுக்க முடியும். தள்ள வேண்டிய அவசியம் இருக்காது.
- ✔ கார்பன் ஃபைபரான் ஆன சக்கரங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

## மடிக் கணனியின் பற்றரியைப் பாதுகாக்க....

மேசைக் கணனிகளைக் காட்டிலும், மடிக் கணனிகளின் எண்ணிக்கை இப்போது நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றன.


இந்நிலையில் மடிக் கணனி ஒன்றின் பற்றரி, அதன் செயற்பாட்டில் முக்கிய இடம் வகிக்கிறது. இதனைப் பயன்படுத்தும் வழிகளைச் செம்மைப் படுத்தும் சில குறிப்புகளை இங்கு காணலாம்.

நீங்கள் பற்றரியின் சேமிப்பு சக்தியில் மடிக் கணனியைப் பயன்படுத்துவதாக இருந்தால், எந்த அளவுக் கணனியின் processor அதிகம் பயன்படுத்தப்படுகிறதோ, அந்த அளவிற்கு, பற்றரியின் மின் சக்தி விரைவில் தீர்ந்துவிடும். அதற்காக, நாம் மேற்கொள்ளும் பணிகளைக் குறைத்துக் கொள்ள முடியாது. இந்நிலையில், நாம் வின்டோஸ் சிஸ்டத்திடம், processor இன் செயறபாடடின் தீவிரத்தினை எந்த அளவிற்கு அனுமதிக்கலாம் என்பதனை செட் செய்திடலாம். இது கணனியின் செயற்பாட்டின் வேகத்தினைச் சற்றுக் குறைக்கலாம். எனவே, முதலில் சோதனை அடிப்படையில், இதனை முதலில் பார்க்கலாம்.

முதலில், மடிக் கணனியை மின்சார இணைப்பிலிருந்து நீக்கவும். ஸ்டார்ட் பட்டன் கிளிக் செய்து, power options என டைப் செய்திடவும். அடுத்து எண்டர் செய்திடவும். தொடர்ந்து கிடைக்கும் வின்டோவில், current plan அடுத்து, 'Change plan settings' என்பதில் கிளிக் செய்திடவும். அடுத்து 'Change advanced power settings' என்பதில் கிளிக் செய்திடவும். கிடைக்கும் வின்டோவில், 'Processor power management என்பது வரை கீழாகச் செல்லவும். இந்த ஒப்ஷனை விரித்து, Maximum processor state' என்ற ஒப்ஷனைத் தேடிக் காணவும். இங்கு எப்போதும் 100% என்ற நிலையில் இருக்கும். இதனைக் குறைத்து அமைக்கவும். பின் ஓகே கிளிக் செய்து வெளியேறவும். நீங்கள் அமைத்தது சரியாக வரவில்லை என்றால், அதன் அடிப்படையில் விண்டோஸ் இயக்கம் முழுமையாக இல்லை எனில், பவர் ஒப்ஷன்ஸ் வின்டோவுக்கு மீண்டும் சென்று, மாறா நிலைக்கு மாற்றும்படி தேர்ந்தெடுத்து அமைக்கவும்.

## மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் அதிரடி படைப்பு

மைக்ரோசொப்ட் நிறுவனம் தான் புதிதாக வடிவமைத்த மவுஸில்; விண்டோஸ் கீக்கான பட்டன் ஒன்றைத் தந்துள்ளது. இந்த மவுஸ் வகை Sculpt Comfort Mouse மற்றும்




Sculpt Mobile Mouse என அழைக்கப்படுகின்றன.

Sculpt Mobile Mouse அனைத்து விண்டோஸ் 8 சாதனங்களுடன் வயர் இணைப்பின்றி இயங்குகிறது. இதற்கான சிறிய ட்ரைவினை, இதன் உள்ளேயே வைத்து எடுத்துச் செல்லலாம். இதில் தரப்பட்டுள்ள ஸ்பெஷல் பட்டனை ஒருமுறை தட்டுவதன் மூலம், உடனடியாக ஸ்டார்ட் ஸ்கிரீனைப் பெறலாம். இரண்டாவது முறை தட்டுகையில், இறுதியாகப் பயன்படுத்திய புரோகிராம் கிடைக்கிறது.

Sculpt Mobile Mouse முந்தையதைக் காட்டிலும் சற்றுப் பெரியதாக, எடை கூடுதலாக உள்ளது. புளுடூத் மூலம் சிஸ்டத்துடன் இதற்கு இணைப்பு கொடுக்கலாம். தொடுதலை உணர்ந்து செயற்படும் நீல வண்ண ஸ்ட்ரிப் ஒன்று இணைக்கப்பட்டுள்ளது. இது மைக்ரோசொப்ட் விண்டோஸ் ரச் ரப் ("Windows touch tab") என அழைக்கிறது. இதன் மூலம் ஸ்டார்ட் ஸ்கிரீன் பெறுவதோடு, விரலை மவுஸ் மீது நகர்த்துவதன் மூலம், சில புரோகிராம்களில் பல செயற்பாடுகளை மேற்கொள்ள இயலும்.

## இயந்திரக் கைகளுடன் டபுள் டெக்கர்




செக் குடியரசைச் சேர்ந்த பிரபல சிற்பி டேவிட் செர்னி. சர்ச்சைக்குரிய இவர் பழைய டபுள் டெக்கர் பஸ்சுக்கு இயந்திர கைகளை பொருத்தி வியக்க வைத்துள்ளார். 1957ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட அந்த டபுள் டெக்கர் பஸ்சில் இரண்டு கைகள் பொருத்தப்பட்டுள்ளன. அந்த கைகளை வைத்து அந்த பஸ் மேலும், கீழும் நகர்வது, எழுந்து நடந்து வருவது போன்று இருப்பதால் பார்வையாளர்களை பரவசப்படுத்தியது. லண்டன், இஸ்லிங்டன் நகரில் ஒலிம்பிக் போட்டிகளின்போது இது காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது.

## இதுவும் புதுசு

வாகன பெருக்கத்தால் அதிகரித்து வரும் போக்குவரத்து நெரிசலால் இருசக்கர வாகனத்தில் செல்வதில் பல பிரச்சினைகள் (தரிப்பிட வசதி, சுற்றுச்சூழல் பிரச்சினை, பாதுகாப்பு...) இருக்கின்றன. எனவே, மேற்கண்ட குறைகளை போக்கும் விதத்தில் ஒரு இருசக்கர வாகனத்தை உருவாக்கியிருக்கிறார் பிரபல டிசைனர் கிறிஸ்டோபர் குஹ். சிட்டிசெய்லர் என்று பெயரிடப்பட்டிருக்கும் இந்த ஸ்கூட்டர் எதிர்கால போக்குவரத்துக்கு தீர்வு காணும் விதத்தில் அனைத்து அம்சங்களுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இது ஐதரசன் எரிபொருளில் இயங்கும் என்பதால் சுற்றுச்சூழலுக்கு எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்தாது. பின்புற சக்கரத்தில் மோட்டார் பொருத்தப்பட்டிருக்கும். இந்த ஸ்கூட்டரில் முன்புறம் மேற்கூரை இருப்பதால் மழை பெய்தாலும் செல்லலாம். தூசி உள்ளிட்ட பிரச்சினைகளால் கண்கள் பாதிக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு நோய் விரைவாக பரவும் அபாயமுள்ளது

## மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

**மழையுடன் கூடிய காலநிலை காரணமாக எதிர்வரும் இரு மாதங்களில் டெங்கு நோய் வேகமாக பரவும் அபாயம் காணப்படுவதாக டெங்கு நோய் தொடர்பான நிபுணத்துவ மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர்.**




பொதுமக்களும் சகல அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களும் வழங்கி வரும் ஒத்துழைப்பு காரணமாகவே டெங்கு நோய் பரவுவதாக குற்றஞ்சாட்டியுள்ள சுகாதார அமைச்சு பல்வேறு நிறுவனங்களினதும் ஒத்துழைப்புடன் டெங்கு நோய் பரவுவதைத் தடுக்க பாரிய திட்டமொன்று விரைவில் முன்னெடுக்கப்படவுள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

டெங்கு நோய் வேகமாக பரவுவதைத் தடுப்பது குறித்து ஆராயும் விசேட கூட்டமொன்று சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் நிஹால் ஜெயதிலகவின் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

கொழும்புநகரிலும்அதனை அண்டிய பகுதிகளிலும் பாரிய டெங்கு ஒழிப்பு திட்டமொன்றை முன்னெடுக்க உள்ளதாகவும் இதற்கு சுகாதார அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, கொழும்பு மாநகரசபை,மேல்மாகாண சபை, இராணுவம், பொலிஸ், பொதுசுகாதார பரிசோதகர் அடங்கலான சகல தரப்பினரதும் ஒத்துழைப்பை பெறவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

கடந்த 5 மாதத்தில் 13 ஆயிரத்து 500 இற்கும் அதிகமான டெங்கு நோயாளர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளனர்.

அத்துடன் பாடசாலைகளை சுற்றியுள்ள 150 மீற்றர் பிரதேசத்திலிருந்து நுளம்பு பெருகும் இடங்கள் சுத்திகரிக்கப்பட வேண்டும் என்று கூறியுள்ள சுகாதார அமைச்சின் செயலாளர் நிஹால் ஜெயதிலக, இதற்காக உள்ளூராட்சி சபைகள் ,பொலிஸ், சுற்றாடல் பிரிவு என்பவற்றின் ஒத்துழைப்பை வழங்க முடியும் என்றும் குறிப்பிட்டார்.சகல அரச தனியார் நிறுவனங்களிலும் டெங்கு ஒழிப்பு குழுக்களை அமைக்குமாறு விசேட சுற்று நிருபம் மூலம் அறிவித்துள்ளபோதும் பல அரசநிறுவனங்கள் டெங்கு ஒழிப்பு குழுக்களை அமைக்கவில்லை என்பதை சுட்டிக்காட்டிய அவர், இந்த வார இறுதிக்குள் டெங்கு ஒழிப்பு குழுக்களை நியமிக்காவிடின் கடும் நடவடிக்கை எடுக்கவிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ-2)



தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை வளாகத்தில் அமைந்துள்ள தூய வேளாங்கண்ணி ஆலயம் யுத்த பாதிப்புக்குள்ளாகியிருந்த நிலையில் 18 வருடங்களின் பின்னர் புனருத்தாரணம் செய்யப்பட்டு அண்மையில் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. புனருத்தாரணம் செய்யப்பட்ட குறித்த தூய அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தை ஆசீர்வதித்த யாழ். மறை மாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை திருப்பலி ஒப்புக்கொடுப்பதை படத்தில் காணலாம்

# புதுடில்லியில் நடைபெறவிருந்த தமிழ்க் கட்சிகளின் கூட்டம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

புதுடில்லியில் நடைபெறவிருந்த தமிழ்க்கட்சிகளின் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எட்டுதமிழ்க் கட்சிகள் இந்த கூட்டத்தில் கலந்து கொள்ள விருந்தன.தமிழக காங்கிரஸ் கட்சி உறுப்பினர் சுதர்சன நாச்சியப்பன் இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார்.

இலங்கை- இந்திய ஒப்பந்தத்திற்கு மீளவும் வலுச் சேர்க்கும் நோக்கில் இந்தக் கூட்டம் நடத்தப்படவிருந்தது.

இந்தக் கூட்டத்தில் பங்கேற்குமாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இதே வேளை இம்மாத இறுதியில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு உறுப்பினர்கள் இந்தியாவிற்கு விஜயம் செய்யவுள்ளனர்.

புதுடில்லியில் மத்திய அரசாங்கத்தின் முக்கிய பிரமுகர்களை சந்தித்து தமிழ்க் கட்சிகள் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளன. (அ-2)

# இலங்கைக்கு பாரிய கடன் வழங்குவதில் சீனா முன்னிலை

கடந்த ஆண்டிலும் இலங்கைக்கு பாரிய கடன் வழங்குநராக சீனா இருந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடத்தில் மாத்திரம் சீனா ஆயிரத்து 56 மில்லியன் ரூபாய்களை கடனாக வழங்கியுள்ளதாக ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை கடந்த ஆண்டில் இலங்கைக்கு அதிக மானியங்களைவழங்கியநாடுகளில் இந்தியா முன்னிலையிலுள்ளது.

இந்தியாவினால் இலங்கைக்கு கடந்த வருடம் 257. 28 மில்லியன் ரூபாய்கள் மானியமாக வழங்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. எவ்வாறாயினும் கடந்த வருடம் சீனா 26மில்லியன் ரூபாய்களை யே மானியமாக வழங்கி இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# இந்திய தூதரகத்தை இலங்கையிலிருந்து நீக்குவது குறித்த வழக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

இலங்கையிலிருந்து இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலகத்தை நீக்குவது தொடர்பில் சென்னை மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான தீர்ப்பு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

சென்னையில்உள்ள இந்து மக்கள் கட்சியின் தலைவர் எம். சோலைக்கண்ணுவால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இலங்கையில் இடம்பெறுகின்ற மனிதவுரிமை விடயங்கள் மற்றும் மனிதாபிமானத்துக்கு எதிரான வன்முறைகளைக் கருத்திற்கொண்டு அங்குள்ள இலங்கை தூதரகத்தை நீக்க வேண்டும் என்று சோலைக்கண்ணு ஏற்கனவே மனுத்தாக்கல் செய்திருந்தார்.

எனினும் அந்த மனு கடந்த மார்ச் மாதம் நிராகரிக்கப்பட்டது.

இந்நிலையில்இந்தத்தடையை ஏற்படுத்த முடியாமைக்கான காரணத்தை ஆராய்வதற்கான மனு ஒன்றை மீண்டும் அவர் தாக்கல் செய்திருந்தார்.

குறிப்பாக தமிழக மீனவர்கள் தொடர்ந்தும் கைது செய்யப்பட்டு வருகின்ற நிலையில் இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலகத்தை 'இலங்கையில் இருந்து நீக்க முடியாது ஏன்? என்பது பற்றி மீளாய்வு செய்ய வேண்டும் என்று அவர் கோரி இருந்தார்.

மனுவைவிசாரணை செய்த நீதிபதிகள் இது தொடர்பான தீர்மானத்தை காலவரையறையின்றி ஒத்தி வைத்தனர். (அ-2)

# சமஸ்கிருத பயிற்சி வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினரால் நடத்தப்படவுள்ள சமஸ்கிருத வகுப்புக்களின் ஆரம்பவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆனைப்பந்தி குருகுல இந்து குருமார் ஒன்றியத்தில் இந்து அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி மா. அனந்தலட்சுமி தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதமவிருந்தினராக யாழ்.மாவட்ட பிரதேச செயலர் திருமதி எஸ். தெய்வேந்திரன், நல்லூர் பிரதேச செயலர் பி.செந்தில்நந்தனன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

பயிற்சி நெறி மூன்று மாத காலம் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை நடைபெறவுள்ளது.

ஆர்வமுள்ள அனைவரும் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு பதிவுகளை மேற்கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (அ)

# எருமைகளை கடத்திய நபர்களுக்கு சிறை

அம்பாறை பிரதேசத்தில் சட்டவிரோதமாக எருமை மாடுகளை கொண்டு சென்ற இருவருக்கு ஒருவருட கடூழிய சிறைத்தண்டனையும் 10 வருடம் ஒத்திவைக்கப்பட்ட தண்டனையும் ஒரு இலட்சத்து 3 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் செலுத்துமாறு அம்பாறை நீதவான் நீதிமன்ற நீதிபதி செல்வி எம்.எஸ் பிரிங்கி தீர்ப்பளித்தார்.

கடந்த 2010 ஆம் ஆண்டு இருவர் அம்பாறை இக்கல் ஓயா பிரதேசத்தில் இருந்து வரிப்பத்தான் சேனை பிரதேசத்திற்கு 43 எருமை மாடுகளை சட்டவிரோதமாக கால்நடையாக அழைத்துச் சென்றபோது பொலிஸார் இருவரையும் கைது செய்ததுடன் மாடுகளையும் மீட்டனர். இவ்வழக்கின் இறுதித் தீர்ப்பு நேற்று முன்தினம் அம்பாறை நீதவான் நீதிமன்றத்தில் வழங்கப்பட்டது. (அ-2)

## அங்குரார்ப்பண நிகழ்வு

சமாதானத்திற்கான சமயங்களின் இலங்கைப் பேரவையின் அங்குரார்ப்பண நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9மணிக்கு முல்லைத்தீவில் இடம்பெறவுள்ளது.

இதற்கான ஒழுங்குபடுத்தல்களை முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் மேற்கொண்டுள்ளார். (அ)

◆◆◆◆◆◆◆

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் பட்ட மேற்கல்வி டிப்ளோமா 2013-14புதிய கல்வியாண்டுக்கு பதிவு செய்த ஆசிரிய மாணவர்களுக்கான அங்குரார்ப்பண நிகழ்வு நாளை சனிக்கிழமை முற்பகல்9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக இடைநிலை மூன்றாம் நிலைக்கல்வித்துறைத் தலைவர் ரஞ்சன் கொன்சல் கோரல கலந்து கொள்ள வுள்ளார். மேற்படி நிகழ்வில் அனைத்து ஆசிரிய மாணவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு பிரதேச நிலையத்தின் இணைப்பாளர் அறிவித்துள்ளார். (அ-5)

# வைத்தியர் லோஷினியின் ஆத்மா அஞ்சலி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வைத்தியர்திருமதிலோஷினி லக்ஷ்மணனின் நினைவாக ஆத்மாஞ்சலி நிகழ்வும் நூல் வெளியீடும் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அஞ்சலி உரைகளை கலாநிதி ஆறு. திருமுருகன்,மன்னார் ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை, சின் மயா மிஷன் வதிவிட ஆச்சாரி யார் பிரம்மச்சாரி ஜாக்ரத் சைதன்யா ஆகியோர் நிகழ்த்துவ ள்ளனர்.

அத்துடன் நூலின் வெளியீட்டு உரையை பேராசிரியர் தயா சோமசுந்தரமும் நினைவு படுத்தலுக்கான உரிமை எனும் தொனிப்பொருளில் சிறப்புரையை சட்டத்தரணி கு. குருபரனும் ஆற்றவுள்ளனர். (அ)

# இந்த அரசாங்கத்தின் ஆட்சியில் 22 ஊடகவியலாளர்கள் படுகொலை

## கருஜயசூரிய எம்.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டை ஆளும் அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதன் பின்னர் 22 ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற விவாதங்களில் கலந்துகொண்டு பேசுகையில்,

இந்தக் கொலைகளுடன் தொடர்புடைய எவரும் சட்டத்தின் முன்நிறுத்தப்படவில்லை.

நாட்டில்சுதந்திரமான ஊடக முறைமை காண படவேண்டும் என்பதே எமது விருப்பம்.

அரசியல் அழுத்தங்களுக்கு எதிராக ஊடகவியலாளர்களால் குரல் கொடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.அரச ஊடகங்கள் பக்கசார்பான அடிப்படையில் செயற்பட்டு வருகின்றன.



வடக்கு- தெற்கு என்ற பேதமின்றி ஊடகவியலாளர்கள் ஒடுக்கப்படுகின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஊடகங்கள் மீதான தாக்குதல்களை அரசாங்கமே நடத்துகின்றது

## சுமந்திரன் எம்.பி. குற்றச்சாட்டு



(கொழும்பு)

ஊடக நிறுவனங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள் மற்றும் படுகொலைகள் ஆகியவற்றின் பின்னணியில் அரசாங்கமே செயற்பட்டுள்ளது. அதனாலேயே இதுவரையிலான விசாரணைகள் முற்றுப் பெறாமலும் குற்றவாளிகள் இனங்காணப்படாமலும் உள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.யான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பத்திரிகை பேரவை சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதி மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

ஊடக நிறுவனங்கள் ஊடகவியலாளர்கள் தாக்குதல்களுக்கு இலக்காகின்ற அதேவேளை அச்சுறுத்தல்களும் விடுக்கப்பட்டு வருகின்றன. அதுமாத்திரமன்றி ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுமுள்ளனர்.

இந்த குற்றச் செயல்களின் பின்னணி தொடர்பில் இதுவரையில் இடம்பெற்று வருகின்ற விசாரணைகளில் முடிபுகளும் எட்டப்படவில்லை. அதேபோன்று குற்றவாளிகளும் இனங்காணப்படவில்லை. ஏனெனில் அரசாங்கமே இதன் பின்னணியில் இருந்து செயற்பட்டு வருகின்றது.

அரசாங்கம் இதனை செய்து வருவதாலேயே இந்த பிரச்சினைக்கு முடிவுகாண முடியாதுள்ளது என்றார். (அ-2)

## தமிழ்த்தினப்போட்டி முடிபுகள்

மன்னார் வெள்ளாங்குளம் மூன்றாம்பிட்டி அ.த.க பாடசாலையின் தமிழ்த்தினப் போட்டியின் மாவட்டமட்ட முடிவுகள் அதிபர் எல்.அமலனன் குமாரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அவை வருமாறு , கு.மிதுனன் (பிரிவு-1) கதைகூறல் முதலாமிடம், அ.நிலாமதி (பிரிவு-2) பாவோதல் இரண்டாமிடம் , அ.ஒனிசன் அன்ரனி (பிரிவு-2)பேச்சு இரண்டாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.சமூக நாடகம் திறந்த போட்டியில் இப்பாடசாலை இரண்டாமிடத்தைப் பெற்றுள்ளது. மாகாண மட்டப் போட்டியில் கு.மிதுனன் (பிரிவு-1) கதைகூறலில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார். (அ)

# கொழும்புத் துறைமுக தீ விபத்து திட்டமிட்ட நாசவேலை

கொழும்புத் துறைமுக களஞ்சிய சாலையில் ஏற்பட்ட தீ விபத்து 4 சீசி ரீவி கமராக்களில் மட்டுமே பதிவாகியுள்ளதாக கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

கொழும்புத் துறைமுக களஞ்சியசாலையில் 32 சீசி ரீவி கமராக்கள் இருக்கின்றபோதும் அவற்றில் நான்கில் மட்டுமே தீ விபத்து சம்பவம் பதிவாகியுள்ளது.

இவற்றில் ஏற்பட்ட கோளாறு காரணமாகவே தெளிவான முறையில் காட்சிகள் பதிவாகவில்லை என குற்றத்தடுப்பு பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த 23 ஆம் திகதி இரவு கொழும்புத் துறைமுக களஞ்சியசாலையில் தீ விபத்து ஏற்பட்டமை தொடர்பில் மின்சார தொழில் நுட்பவியலாளர்கள் சாட்சியமளிக்கையில்,தீ பரவிய நேரம் நள்ளிரவு 12.36 என தெரிவிக்கப்பட்டபோதும் மின்சார தொழில்நுட்பவியலாளர்கள் அதிகாலை 1.02 மணியளவிலேயே தீ பரவியதாக குறிப்பிட்டுள்ளனர்.

இத் தீ விபத்திற்கான காரணம் குழு ஒன்றோ அல்லது தனி ஒருவரது சதியாகவோ இருக்கக்கூடும் என பொலிஸார் நீதிமன்றில் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

இந்த தீ விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு கொழும்பு மேலதிக நீதவான் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினருக்கு உத்தரவிட்டுள்ளார்.(அ-2)

# கதிர்காமத் திருவிழா

கதிர்காம உற்சவம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 7 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக இந்து சமய இந்து கலாசார திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் தெரிவித்துள்ளார்.

கதிர்காமத் திருவிழா எதிர்வரும் ஓகஸ்ட் 7 ஆம் திகதி ஆரம்பமாகி 21 ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவுபெறும் என்றும் அவர் தெரிவித்தார்.தீர்த்தோற்சவத்திற்கு முதல் நாள் கதிர்காம ரந்தோலி பெரஹறாவும் நடைபெறும். (அ-2)


# இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை

## (இ.கை.அ.ச)

## (பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு

### தொழிற்சாலைகளை அமைப்பதற்கான கட்டடங்களை கட்டக்கூடிய வசதிகளைக் கொண்ட விருத்தி செய்யப்பட்ட காணித்துண்டுகள்

### கைத்தொழில் பேட்டை, அச்சுவேலி

அச்சுவேலி கைத்தொழில் பேட்டையிலுள்ள அபிவிருத்தி செய்யப்பட்ட காணித்துண்டுகளை பகிர்ந்தளிப்பதற்கு வட மாகாணத்தில் கைத்தொழிலை உருவாக்க விரும்பும் புதிய மற்றும் தற்போதுள்ள கைத்தொழிலாளர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**காணப்படும் வசதிகள்**

தார் போடப்பட்ட உள்ளக வீதிகள், நீர் வடிகாலமைப்பு, மூன்றுநிலை மின்சாரம், குழாய்நீர் மூலமான நீர் வசதி, தீயணைப்பு வசதி, கழிவகற்றல் வசதி, உள்ளக பாதுகாப்பு சேவைகள் மற்றும் ஏனைய சேவைகள்

| குத்தகைக்கு பெற்றுக்கொள்ளக்கூடிய காணித்துண்டுகளின் அளவுகள் (பேர்ச்) |
|---|
| 160 |
| 80 |
| 40 |

விண்ணப்பப்படிவங்களை www.idb.gov.lk எனும் இணையத்தளத்தில் தரவிறக்கம் செய்து பெற்றுக் கொள்ளலாம். அல்லது இ.கை.அ.ச தலைமைக்காரியாலயத்தில் அல்லது மாவட்ட / மாகாண காரியாலயங்களில் பெற்றுக் கொள்ள முடியும்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் இ.கை.அ.ச இன் மாதிரி கருத்திட்ட மும்மொழிவு படிவத்தில் பூரணப்படுத்தப்பட்ட கருத்திட்ட மும்மொழிவினை 21.06.2013 அன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியவாறு கீழ்க் காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது நேரடியாக அனுப்பி வைக்க வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு:
பணிப்பாளர்,
கைத்தொழில் பேட்டைகள் பிரிவு,
இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை,
**# 615,** காலி வீதி, கட்டுபெத்தை,
மொரட்டுவ.

தொலைபேசி: **0112632157**
தொலைநகல்: **0112632157**
மின்னஞ்சல்: **idbestate@gmail.com**

பிரதி பணிப்பாளர்
மாவட்ட காரியாலயம் (வட மாகாணம்)
இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை
**NHDA** கட்டடம், சுண்டிக்குழி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி/தொலைநகல் 0212222421

தலைவர்,
இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை

(சி/3507)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவாஷ் ஷெரீப் பதவியேற்பு



(இஸ்லாமாபாத்)

**பாகிஸ்தான் பிரதமராக மூன்றாவது முறையாக நவாஸ் ஷெரீப் (வயது 63) பதவியேற்றார். இதன்போது மக்களின் நம்பிக்கையை நிறைவேற்றப் போவதாக அவர் வாக்குறுதியளித்தார்.**

**பிரதமர் தேர்தல்**

பாகிஸ்தானில் கடந்த மாதம் 11 ஆம் திகதி பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. இந்த தேர்தலில் நவாஸ் ஷெரீப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சி தனிப்பெரும் கட்சியாக வந்தது. சிறிய கட்சிகள் மற்றும் சுயேச்சைகள் ஆதரவுடன் நவாஸ் ஷெரீப் கட்சி பெரும்பான்மை பலம் பெற்றது.

இதையடுத்து புதிய பிரதமரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் பாகிஸ்தான் பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

**நவாஸ் ஷெரீப் வெற்றி**

ஆனால், பெரும்பான்மை எம்.பிக்களின் ஆதரவை பெற்று விட்டதால் எதிர்பார்த்தபடியே நவாஸ் ஷெரீப் அமோக வெற்றி பெற்றார்.

இந்த வெற்றியின் மூலம் 13 ஆண்டுகால இடைவெளிக்கு பின்னர் பாகிஸ்தான் பிரதமராக நவாஸ் ஷெரீப் 3 ஆவது முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டதை நாடாளுமன்ற அவைத் தலைவர் அயாஸ் சாதிக் அறிவித்தார்.

**வாக்குறுதி**

தொடர்ந்து நாடாளுமன்றத்தில் ஷெரீப் உரையாற்றுகையில்,

பாகிஸ்தான் இப்போது தீவிரமான பிரச்சினைகளைச் சந்தித்து வருகிறது. இவற்றை எந்த ஒரு தனி அரசியல் கட்சியாலும் தீர்த்துவிட முடியாது. இந்தச் சவால்களைச் சமாளிக்க ஆளுங்கட்சி, எதிர்க்கட்சிகள், ஏனைய அரசியல் கட்சிகள் என்று அனைத்துத் தரப்பினரும் ஓரணியில் நிற்க வேண்டும்.



நாட்டின் பொருளாதார நிலை மிகவும் மோசமடைந்துள்ளது. எனினும் நான் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் சும்மா இருக்க மாட்டேன். எனது குழுவினரும் அவ்வாறு இருக்க அனுமதிக்கமாட்டேன்.

எந்தவிதமான ஊழலையும் நாங்கள் சகித்துக் கொள்ள மாட்டோம். பொறுப்புடமை நிலைநாட்டப்படும்.

இளைஞர்களிடையே காணப்படும் அதிருப்தி, ஊழல், பயங்கரவாதம், சட்டம்-ஒழுங்கு சீர்குலைவு, உலக அளவில் பாகிஸ்தானின் நற்பெயர் சரிவு போன்ற பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கு நல்லாட்சி வழங்குவதில் எங்கள் கட்சி கவனம் செலுத்தும்.

பாகிஸ்தான் ஏனைய நாடுகளின் பிரச்சினைகளை கவனத்தில் கொள்ளும். அதேநேரத்தில் அந்த நாடுகளும் பாகிஸ்தானின் இறையாண்மையை மதித்து நடக்க வேண்டும். பாகிஸ்தானில் அமெரிக்கா நடத்தி வரும் ஆளில்லா உளவு விமானத் தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும் என்றார்.


> “ ஆளில்லா விமான தாக்குதலை அமெரிக்கா நிறுத்த வேண்டும்

**பதவி ஏற்பு**

இஸ்லாமாபாத்தில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் மாலை வேளை இடம்பெற்ற விழாவில் புதிய பிரதமராக நவாஸ் ஷெரீப் பதவியேற்றார். அவருக்கு ஜனாதிபதி ஆசீப் அலி சர்தாரி பதவிப் பிரமாணமும் இரகசிய காப்புப் பிரமாணமும் செய்துவைத்தார். அவரைத் தொடர்ந்து புதிய அமைச்சர்கள் பதவி ஏற்றனர்.

இவ்விழாவில் பி.எம்.எல்.என் கட்சியின் மூத்த தலைவர்கள், பாகிஸ்தான் மக்கள் கட்சியைச் சேர்ந்த முன்னாள் பிரதமர்களான யூசுப் ரசா கிலானி, ராஜா பர்வேஸ் அஷ்ரப், இந்தியத் தூதர் சரத் சபர்வால் உட்பட பல நாட்டுத் தூதுவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்நாட்டின் 27 ஆவது பிரதமராக இவர் பதவியேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)



கௌதமாலாவுக்கு முதன்முறையாக விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோன் கெர்ரி கௌதமாலா நகரில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் அந்நாட்டு ஜனாதிபதி ஓட்டோ பெரிஸ் மொலினாவை சந்தித்தபோது...

## பாக்.கில் கடும் மோதல்; ஐவர் உயிரிழந்தனர்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் பாதுகாப்பு படையினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையில் இடம்பெற்ற கடும் மோதலில் 5 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். ஒரு அதிகாரி உட்பட பாதுகாப்புப் படையினர் 16 பேர் காயம் அடைந்துள்ளனர்.

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணம் கரோதாபாத் பகுதியில் தீவிரவாதிகள் நடமாட்டம் இருப்பதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து அப்பகுதியில் நேற்று அதிகாலை தீவிரவாத தடுப்புப் பிரிவு படை மற்றும் எல்லைப் பாதுகாப்பு படையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

அப்போது பாதுகாப்பு படையினர் மீது தீவிரவாதிகள் வெடிகுண்டுகளை வீசியதுடன் துப்பாக்கிச் சூடும் நடத்தினர்.

பாதுகாப்பு படை யினரும் சுற்றிவளைத்து தாக்கினர். இந்த சண்டையில் 5 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். ஒரு அதிகாரி உட்பட பாதுகாப்பு படையினர் 16 பேர் காயம் அடைந்தனர். (அ-2)

# முஷாரப்பின் வீட்டை சிறையாக மாற்றுக

## பாக்.நீதிமன்றம் உத்தரவு



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி முஷாரப்பின் பண்ணை வீட்டை தற்காலிக சிறையாக மாற்ற நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அத்துடன் அவரது வீட்டுக்கு விசாரணைக்காக செல்லும் நீதிபதிக்கு குண்டு துளைக்காத கார் ஒன்று வழங்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி முஷாரப் மீது பல்வேறு வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. தேர்தலில் போட்டியிட நாடு திரும்பிய அவர் கைது செய்யப்பட்டு தற்போது வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.


அவர் மீதான வழக்கு விசாரணையை பாதுகாப்பு காரணங்களுக்காக வீட்டிலேயே நடத்த அனுமதிக்க வேண்டும் என்று பாகிஸ்தான் நீதிமன்றில் அனுமதி கேட்டு மனுதாக்கல் செய்யப்பட்டது.

இதற்கு இஸ்லாமாபாத் உயர் நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது. முஷாரப் மீதான நீதிபதிகள் சிறை வைக்கப்பட்ட வழக்கு உள்ளிட்டவற்றை தீவிரவாத எதிர்ப்பு நீதிபதி கவுகர் அப்பாஸ் ஜைடி விசாரித்து வருகிறார்.

பாதுகாப்பு காரணங்களுக்காக நீதிபதி முஷாரப் வீட்டுக்கே சென்று வழக்கு விசாரணையை தொடங்குவதற்கு பண்ணை வீட்டை தற்காலிக சிறையாக மாற்ற நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ-2)

# லண்டனில் மாளிகை வீடு வைத்திருந்த யாசகர்





லண்டனில் தினசரி யாசகம் எடுத்து வாழும் ஒரு யாசகருக்கு சொந்தமான மாளிகை போன்ற வீடு ஒன்று இருப்பதை அறிந்த நீதிமன்றம் அவருக்கு யாசகம் எடுக்க தடை விதித்தது.

லண்டனில் வங்கி ஒன்றின் முன் தினசரி 37 வயதான ஒருவர் வங்கிக்கு வருவோரிடம் யாசகம் எடுத்து கொண்டிருந்தார்.

இதன்மூலம் அவருக்கு தினசரி 300 பவுண்டுகள் வரை வருமானம் கிடைத்தது.

மாலை 6 மணியுடன் அந்த இடத்தை காலிசெய்து விட்டு தனது மாளிகை போன்ற வீட்டுக்கு சென்று விடுகிறார். அவருடைய வீட்டின் மதிப்பு சுமார் 300 ஆயிரம் பவுண்டுகளாகும்.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் அவர் யாசகம் செய்து கொண்டிருக்கும்போது இவருக்கு மாளிகை வீடு இருப்பதை அறிந்த ஒருவர் லண்டன் நீதிமன்றத்தில் அவருக்கெதிராக வழக்கு தொடுத்தார்.

மிகவும் வசதியாக இருந்து கொண்டு பொதுமக்களிடம் பொய் கூறி யாசகமெடுக்கும் இவரை உடனே அவ்விடத்தை விட்டு அப்புறப்படுத்த வேண்டும் என வழக்கு தொடுக்கப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிபதி குறித்த யாசகருக்கு யாசகம் பெறுவதற்கு தடை விதித்து உத்தரவிட்டுள்ளார். (அ-2)

# புகுஷிமா அணுமின் நிலையத்திலிருந்து கதிரியக்க நீர் வெளியேற்றம்

## ஜப்பான் மக்கள் அதிர்ச்சி



(டோக்கியோ)

பூகம்பத்தால் தாக்கப்பட்டு செயல் இழந்துள்ள புகுஷிமா அணுமின் நிலையத்திலிருந்து ஆபத்தான கதிரியக்க நீர் கசிவதாக வெளியான தகவலால் ஜப்பான் மக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

அணுமின் நிலையத்திலிருந்து கதிரியக்க நீர் கசிவதால் புகுஷிமா அணுமின் நிலைய இடிபாடுகளைச் சுத்தப்படுத்தும் பணிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து அணுமின் நிலையத்திற்கு பொறுப்பு வகிக்கும் டோக்கியோ மின் சக்தி கழகம், கதிரியக்க கழிவு நீரை கடலில் சேர்க்க அரசிடம் அனுமதி கோரியுள்ளது. இது ஜப்பானில் பலத்த சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 2011ஆம் ஆண்டு ஏற்பட்ட டோக்கோஹு நிலநடுக்கத்தால் புகுஷிமா அணுமின் நிலைய உலைகள் முற்றாக சேதம் அடைந்தன. இந்நிலையில் சேதம் அடைந்த உலைகளைக் குளிர்விப்பதற்காக தினமும் 400தொன் நிலத்தடி நீர் செலுத்தப்பட்டு வருகிறது. கதிரியக்க கசிவு நீர் இந்த நீருடன் கலந்து கடலுக்குள் செலுத்தப்படுவதால் ஜப்பான் மற்றும் பசுபிக் கடற்பகுதி நாடுகளில் அணு ஆபத்து ஏற்படும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் புகுஷிமா அணுமின் நிலையத்தில் கதிரியக்க கசிவு நீர் வெளியேறுவதாக வந்துள்ள தகவல் ஜப்பான் அரசின் அணுமின் தொழில்நுட்ப ஏற்றுமதி திட்டங்களுக்கு பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

இதனையடுத்து புகுஷிமா அணுமின் நிலையத்தில் உள்ள 4 உலைகளைச் சுற்றி பாதுகாப்பு கட்டுமானப் பணிகளைப் பலப்படுத்துமாறு ஜப்பான் மின் சக்தி கழகத்திற்கு அந்நாட்டு பிரதமர் ஷின்சோ அபே உத்தரவிட்டுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரலோகத்தில் இருக்கின்ற பிதாவே!
என்பொருட்டு இவர்களை மன்னியுங்கள்.
-யேசு பிரான்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## இந்து ஆலயங்கள் மீது தாக்குதல் தேவலோகத்தில் அவசர மாநாடு

மட்டக்களப்பில் இந்து ஆலயங்கள் தாக்கப்பட்டமை தொடர்பில் தேவலோகத்தில் விசேடமாக கூட்டப்பட்ட சர்வமத மாநாட்டில் யேசுபிரான் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்தார்.

அத்தீர்மானம் மதமாற்றத்தை தடுத்து நிறுத்த வேண்டும் என்பதாக இருந்தது. தனது தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் என வலியுறுத்திய மீட்பர் அதற்காக ஆதாரங்களையும் முன்வைத்தார்.

மதமாற்றம் என்ற பெயரில் மனிதர்கள் தங்கள் அருமந்த உழைப்பை வீணடிப்பதுடன்,மதங்களுக்கு இடையிலான நல்லுறவையும் பாதிக்கச் செய்கின்றனர்.

அவரவர் தத்தம் சமயங்கள் கூறுகின்ற நடைமுறைகளை பின்பற்றினால் அது போதும்.

தான்பிறந்த சமயத்தை– தனது பெற்றோர்களின் சமயத்தை– தனது மூதாதைகள் தொன்று தொட்டு கடைப்பிடித்து வந்த சமயத்தை தூக்கியெறிந்து விட்டு இன்னொரு சமயத்திற்கு மாறுகின்றவர்கள்,

நாளைக்கு இதையும் விடுத்து வேறொரு சமயத்திற்கு மாறமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

உண்பதன் பொருட்டு உணவுப் பண்டங்களை சமைப்பது போல–மனிதர்கள் மனிதர்களாக வாழும் பொருட்டு அவர்களை சமயங்கள் பண்படுத்துகின்றன.

எனவே சமயம் என்பது மனிதர்களை பண்படுத்துவதற்கானது அன்றி உன்சமயம் பெரிதன்றோ, என்சமயம் பெரிதன்றோ விவாதம் புரிவதற்கானது அல்ல.

சிலர் வீடு வீடாகச் சென்று மதமாற்றப் பிரசாரத்தில் ஈடுபடுகின்றனர்.

நான் மற்றவர்களின் பாவத்தை சுமந்து சிலுவையில் அறைபட்டபோது அடையாத துன்பத்தையும் வேதனையையும், மதமாற்றும் பிரகிருதிகளை பார்த்து கவலைப்படுவது உண்டு.

இவர்களிடம் நான் ஒன்றைக் கேட்ட விரும்புகின்றேன்.

நீங்கள் மதமாற்றத்தின் பொருட்டு இன்னொரு சமயத்தவர்களின் படலையை தட்டித்திறந்து போகிறீர்கள்.

வேதனத்திற்காக உங்களுக்குச் சொல்லிக் கொடுத்ததை அப்படியே ஒப்புவிக்கிறீர்கள். மற்றச் சமயத்தின் கடவுளர்களை சாத்தான் என்று கூறுகிறீர்கள்.

ஒன்றை நினைத்துப் பாருங்கள். நீங்கள் யாருடன் கதைக்கிறீர்களோ அவர்கள் உங்கள் மீது தாக்குதல் நடத்தினால், அல்லது தங்கள் வீட்டுக்குள் நீங்கள் அத்துமீறி நுழைந்ததாக பொலிஸில் முறைப்பாடு செய்தால் நிலைமை எப்படி இருக்கும்?

அதை அவர்கள் செய்யவில்லை என்றால், அவர்களின் சமயம் அவர்களை எந்தளவு தூரம் பண்படுத்தி இருக்கிறது; நயத்தகு பண்பாட்டை கற்றுக் கொடுத்து இருக்கிறது என்பதை உங்கள் சிற்றறிவால் உணர முடிகிறதா?

இவ்வாறாக யேசுபிரான் ஆக்ரோசமாக உரையாற்ற சர்வமத மாநாட்டில் கரகோசத்திற்கு குறைவே இல்லை.

தொடர்ந்தும் பிதாமகன் உரையாற்றினார்.

(தொடரும்)

# வாக்காளர் பதிவுகளை புனிதமான பணியாக கருதுக

## வடக்கின் முன்னாள் பிரதம செயலாளர்

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கில் வாக்காளர் பதிவுகளை உரிய முறையில் பதிவு செய்வதில் அக்கறையின்மை காணப்படுவதாக வடமாகாண சபையின் முன்னாள் பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜன் தெரிவித்தார்.

அதனால் வாக்காளர் பதிவுகளை மேற்கொள்வதற்கு முன்னுரிமை கொடுத்து கடமைகளை நிறைவேற்ற கிராம அலுவலர்களும் பிரதேச செயலாளர்களும் முன்வர வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

வாக்காளர் விழிப்புணர்வு வாரத்தையொட்டி யாழ்.மாவட்ட செயலகத்தில் கடந்த 4ஆம் திகதி பகல் விழிப்புணர்வுக் கருத்தரங்கொன்று நடைபெற்றது.

இந்தக் கருத்தரங்கில் வளவாளராக கலந்துகொண்ட அவர் மேலும் தெரிவிக்கையில்,

சமூக மட்டத்தில் அபிவிருத்தியைக் கொண்டு வரும் கடமையும் பொறுப்பும் அரசஅலுவலர்களுக்குஉரியதாகும்.

வாக்காளர் பதிவுகளை உரிய முறையில் பதிவு செய்வதற்கு வேண்டிய கடமைகளை கிராம அலுவலர்களும் பிரதேச செயலாளர்களும் முன்னுரிமை கொடுத்து மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

தென்னிலங்கையைப் பொறுத்தவரையில் இந்தப் பணியை புனிதமான பணியாக மேற்கொள்கிறார்கள். பிரதேச செயலாளர்களும் கிராம அலுவலர்களும் முன்னுரிமை கொடுத்து இப்பணியை மேற்கொள்வதுடன் பொதுமக்களும் ஆர்வத்துடன் செயற்படுகின்றார்கள்.

வடக்கு கிழக்கைப் பொறுத்தவரையில் இந்த விடயத்தில் அக்கறை காட்டுபவர்களின் எண்ணிக்கை குறைவாகவே காணப்படுகின்றது. இதனை ஊக்குவிக்கவேண்டியது அரச அலுவலர்களின் கடமையாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# சிகிச்சை பலனின்றி மாற்றுத்திறனாளி மரணம்

(யாழ்ப்பாணம்)

பேருந்திலிருந்து இறங்கும்போது தடுக்கி விழுந்த ஒரு கால் ஊனமான மாற்றுத்திறனாளி ஒருவர் சிகிச்சை பலனின்றி யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் மதியம் உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்துச் சம்பவம் கடந்த மாதம் 24ஆம் திகதி சாவகச்சேரி மிருசுவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் சுன்னாகத்தைச் சேர்ந்த நா. மதீஸ்ரன் (வயது 30) என்ற குடும்பஸ்தரே சிகிச்சை பலனின்றி உயிரிழந்தவராவார்.

தலையில் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

பின்பு இவரது உடல் நிலை குணமடைந்து வந்ததையடுத்து யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார். இந்நிலையில் ஒரு காலை இழந்த மேற்படி குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் யாழ். போதனா வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

இவரது மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணையதிகாரி ந.பிறேம் குமார் விசாரணைகளை மேற்கொண்டார்.

பிரேத பரிசோதனையின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (அ-6)

# ஆங்கிலதின வாய்மொழிப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

தீவகக் கல்வி வலயத்தின் ஆங்கில தின வாய்மொழிப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணி முதல் யா/ வேலணை மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் கோட்டமட்டப் போட்டிகளில் முதல் இரு இடங்களைப் பெற்ற காரைநகர், ஊர்காவற்றுறை, வேலணை, நெடுந்தீவு பிரதேச பாடசாலை மாணவர்கள் பங்குபற்றவுள்ளனர். (அ)

# வானொலியில் நேரடி அஞ்சல்

சிட்டிவேரம் அருள்மிகு கண்ணகை அம்மன் வருடாந்த மகோற்சவ சிறப்பு உற்சவங்கள் இன்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது. சப்பரத உற்சவம் நாளை சனிக்கிழமையும் மறுநாள் தேர்த்திருவிழாவும் நடைபெறும்.

இந்நிகழ்வுகளை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன யாழ்.எவ்.எம். வானொலி நேரடியாக அஞ்சல் செய்யவுள்ளது.

நேரடி அஞ்சல் நேர்முக வர்ணனையை வர்ணனைக் கலாநிதி மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன் தொகுத்து வழங்கவுள்ளார். (அ)




தவறு செய்தவருக்கு அவர்களுடைய தவறை மன்னித்துத் தேவையான போது உதவி செய்பவர் வெகுசிலரே. மன்னிப்பவனே மனிதன் நஞ்சைக் கொடுத்தாலும் அதை உண்பவர் நயக்கத்தக்க நாகரிகம் வேண்டுபவரென வள்ளுவரும் கூறியுள்ளார். மணிவாசகர் தான்செய்த தவறுகளை இறைவனிடம் விரிவாக எடுத்துக்கூறும் போது இக்கருத்தையே நம்பிக்கையாகக் கொள்கிறார். நஞ்சு அமுது செய்த கருணாகரனே! என இறைவனைப் பரிவோடு விளிக்கிறார்.

அமுதம் பெற விரும்பி வானவரும் தானவரும் திருப்பாற்கடலைக் கடைந்த போது எழுந்தது கொடியவிடம். அதைக் கண்டு விண்ணுலகத்தவரும் மண்ணுலகத்தவரும் அஞ்சிக் கலக்கமடைந்தனர். இறைவன் அவர்களுடைய கலக்கத்தை நீக்கும் பொருட்டு பாற்கடலிலே தோன்றிய நஞ்சை அமுதுசெய்து அருளினார். இறைவன் அதை உண்டு எல்லோருடைய துன்பத்தையும் நீக்கிய அருட்செயல் மணிவாசகருக்கும் மன உறுதி தருகிறது.

கருணையின் இருப்பிடமான இறைவனைத்தன்னுடைய மரபான தொழுகுலமாக்கித் தன் துன்பத்தை எடுத்துரைக்கின்றார். நான் உலகத்துத் துன்பங்களால் பெரிதும் வாடுகின்றேன். அதற்கு ஐம்புலன்களே காரணம். புலன்கள் என்னைத் திகைப்பிக்க நானும் திகைத்து நிலையற்ற ஒரு பொய்யான வழியிலே செல்கின்றேன். நீ என்னைக் கைவிட்டுவிடாதே. அழிவில்லாத இன்பந்தரும் சிவநெறிக்கண் செல்லாது அழியும் இன்பந்தரும் உலகியல் நெறிப்பட்டு நிற்பதைக் குறிப்பிடுகிறார். மனிதனுடைய அறிவைத் திகைக்க வைக்கும் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற புலன்கள் வழிச்செல்லும் தவ்றை அவர் ஒப்புக்கொள்கிறார்.

புலன்கள் திகைப்பிக்க யானும் திகைத்தமையால் பொய்யான வாழ்க்கையை மேற்கொள்ள நேர்ந்தது என மணிவாசகர் கூறுவது நோக்குதற்குரியது. அறிவுடையவர்கள் ஐம்புலன்களின் செயற்பாட்டையெல்லாம் நன்கு அறிந்தவர்கள். எனவே அவற்றைக் கண்டு திகைக்கமாட்டார்கள். ஆனால் மந்திரியாகச் செயற்பட்ட அவர் திகைப்பதற்கு என்ன காரணம்? பொய் நெறியில் செல்ல நேர்ந்ததையே கூறுகிறார். உண்மையான வாழ்வியல் நெறியிலிருந்து விலகித் தவறான நெறியில் சென்றமையால் இறையருளை மீண்டும் வேண்டுகிறார்.

முந்நீரில் தோன்றிய நஞ்சுக்கு ஒப்பாகத் தான் பொய்நெறிச் சென்றதைக் கூறுகிறார். முந்நீர் என்பது ஆற்றுநீர், ஊற்று நீர், மழைநீர் என்ற மூவகையான நீரையும் கொண்டிருக்கும் கடலாகும். இன்னும் முச்செய்கையுடைய நீர் என்னும் பொருள். மண்ணைப்படைத்தலும் மண்ணையழித்தலும் மண்ணைக் காத்தலும் எனச் சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் குறிப்பிடுவார்.

எனவே, முந்நீர் என்பதற்குக் கடல் என்று கூறமுடியாது. மூன்றுவகையான நீரைக்கொண்ட நீர்ப்பரப்பு என்றே பொருள் கூறலாம். இன்னும் இறைவனை மணிவாசகர் 'என் தொழு குவமே' என்றழைக்கின்றார். தொழுதல் என்பது ஒருவரையே முதல்வராக வழிபட்டு நிற்றல்.சிவனையே முழுமுதற் கடவுளாகக் கொண்டு வாழும் மரபினனாகத் தானிருப்பதை எடுத்துரைக்கின்றார். தலைமுறை தலைமுறையாக ஒரு வழிபாட்டு மரபிலே நம்பிக்கையுடைய குலத்தைத் தான் சார்ந்திருந்ததைக் குறிப்பிடுகிறார். எனவே முறைமை யான வழிபாட்டு மரபிலே வாழ்ந்த போதும் அதை மறக்கப் புலன்கள் தடை யாக அமையும் என மணிவாசகர் எமக்கு உணர்த்தியுள்ளார்.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

புலன்கள் திகைப்பிக்க யானுந் திகைத்திங்
கொர் பொய்ந் நெறிக்கே
விலங்குகின்றேனை விடுதி கண்டாய்
விண்ணும் மண்ணுமெல்லாம்
கலங்கு முந்நீர் நஞ்சமுது
செய்தாய் கருணாகரனே
துலங்குகின் றேனடியேனுடை
யாய்யென் தொழுகுவமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர் நியூசிலாந்து வசம்

இங்கிலாந்திற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணிக்கும், இங்கிலாந்து அணிக்குமிடையிலான மூன்றாவதும் இறுதியுமான ஒரு நாள் சர்வதேசப் போட்டியில் இங்கிலாந்து அணி 34 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

3 போட்டிகள் கொண்ட இத் தொடரின் முதலிரு போட்டிகளையும வெற்றிகொண்ட நியூசிலாந்து அணி, இத்தொடரை 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது.

ட்ரென்ட் ப்ரிட்ஜ் இல் இடம் பெற்ற 3 ஆவது போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 50 ஓவர களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 287 ஓட்டங்களைப் பெற்றது.

முதலாவது விக்கெட்டை 3 ஓட்டங்களுக்கே இழந்த அவ்வணி, அதன் பின்னர் பொறுமையான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தியிருந்தது. எனினும் இறுதி நேரத்தில் அதிரடியை வெளிப்படுத்திய அவ்வணி, இறுதி 4 ஓவர்களில் 47 ஓட்டங்களைக் குவித்திருந்தது.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக இயன் பெல் 96 பந்துகளில் 82 ஓட்டங்களையும், ஓய்ன் மோர்கன் 40 பந்துகளில் 49 ஓட்டங்களையும், ஜொஸ் பட்லர் 16 பந்துகளில் ஆட்டமிழக்கா மல் 47 ஓட்டங்களையும், ஜொனதன ட்ரொட் 53 பந்துகளில் 37 ஓட்டங்களையும், ஜோ றூட் 50 பந்துகளில் 33 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் நியூசிலாந்து அணி சார்பாக மிற்சல் மக்லநகன் 3 விக்கெட்டுக்களையும், கேன் வில்லியமஸன் ஒரு விக்கெட்டையும் கைப்பற் ·றினர்.

288 ஓட்டங்களை வெற்றி இலக காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 46.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 253 ஓட்டங்களைப் பெற்று 34 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் நியூசிலாந்து அணி சார்பாக றொஸ் டெய்லர் 84 பந்துகளில் 71 ஓட்டங்களையும், மார்ட்டின் கப்ரில் 36 பந்துகளில் 38 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ஜேம்ஸ் ட்ரெட்வெல் 3 விக்கெட்டுக்களையும், ஸ்டீவன் ஃபின், ஸ்ருவேர்ட் ப்ரோட், ரிம் பிரெஸ்னன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், ஜோ றூட் ஒரு விக்கெட்டையும் கைப் பற்றினர்.

இப்போட்டியின் நாயகனாக ஜொஸ் பட்லரும், இத்தொடரின் நாயகனாக் மார்ட்டின் கப்ரிலும் தெரிவாகினர்.

# உலகக் கிண்ண காற்பந்து போட்டிக்கு ஜப்பான் தகுதி

அடுத்த ஆண்டு பிரேசிலில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண காற்பந்து போட்டியில் விளையாட ஜப்பான் அணி தகுதி பெற்றுள்ளது.


ஜப்பான் தலைநகர் டோக்கியோவை அடுத்த சாய்டமா வில் நடைபெற்ற ஆசிய 'பி' தகுதிச்சுற்று ஆட்டத்தில் அவுஸ்திரேலியாவுடன் சமநிலை (1-1) செய்ததன் மூலம் உலகக் கிண்ணப் போட்டியில் விளையாடுவதை உறுதி செய்தது ஜப்பான்.

1998ஆம் ஆண்டு முதன்முறையாக உலகக் கிண்ண காற்பந்து போட்டியில் விளையாடும் வாய்ப்பைப் பெற்ற ஜப்பான், இப்போது தொடர்ந்து 5ஆவது முறையாக உலகக் கிண்ண பிரதான சுற்றுக்குள் நுழைந்துள்ளது.

போட்டியை நடத்தும் பிரேசிலுக்கு அடுத்தபடியாக உலகக் கிண்ணத்துள் விளையாட தகுதிபெற்ற 2ஆவது அணி ஜப்பானாகும்.

# சம்பியன்ஸ் லீக்கில் சச்சின்?

ஐ.பி.எல். கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்த மும்பை இந்தியன்ஸ் வீரர் சச்சின் டெண்டுல்கர், இந்தியாவில் செப்ரெம்பர் 17ஆம் திகதி முதல் ஒக்டோபர் 6ஆம் திகதி வரை



நடைபெறும் சம்பியன்ஸ் லீக் 20 ஓவர் கிரிக்கெட்டில் விளையாட வாய்ப்பு உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

"சம்பியன்ஸ் லீக் கிரிக்கெட் இந்தமுறை இந்தியாவில் நடக்கிறது. அதனால் குறைந் தது இந்த ஒரு போட்டியிலாவது விளையாடுவது குறித்து பரிசீலிக்கும்படி டெண்டுல்கரிடம் மும்பை அணி நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளது. அவருக்கு மிகப்பெரிய ரசிகர்கள் பட்டாளம் உள்ளது. எனவே அவர் விளையாடினால், அது மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்று ஐ.பி. எல். மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# மீண்டும் இலங்கை தோல்வி

சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகளுக்கான பயிற்சிப் போட்டிகளில் இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றிபெற்றது.

பேர்மிங்காமில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்திருந்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 297 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக டெரன் பிராவோ 96 பந்துகளில் 71 ஓட்டங்களையும், ஜோன்சன் சார்ள்ஸ் 50 பந்துகளில் 58 ஓட்டங்களையும், ராம்நரேஷ் சர்வான் 64 பந்துகளில் 55 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக திஸர பெரேரா, ஷமின்ட எரங்க இருவரும் தலா 2 விக்கெட்டுக்களையும், லசித் மலிங்க, திலகரட்ண டில்ஷான் இருவரும் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

298 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 47 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களை இழந்து 280 ஓட்டங்களைப் பெற்று 17 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பாக குமார் சங்கக்கார 62 பந்துகளில் 56 ஓட்டங்களையும், டில்ஹார லொக்குஹெட்டிகே 29 பந்துகளில் 42 ஓட்டங்களையும், நுவான் குலசேகர 47 பந்துகளில் 40 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக டுவைன் பிராவோ 3 விக்கெட்டுக்களையும், சுனில் நரைன், ரவி ராம்போல் இருவரும் தலா 2 விக்கெட்டுக்களையும், கேமர் றோச், ரீனோ பெஸ்ற் இருவரும் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

ஏற்கனவே இந்தியாவுடன் இடம்பெற்ற பயிற்சிப் போட்டியின்போதும் இலங்கை அணி தோல்வியடைந்திருந்தது.



# அரையிறுதிக்கு அசரென்கா

பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் அரையிறுதியில் பெலாரஸின் விக்டோரியா அசரென்காவை சந்திக்கிறார் நடப்பு சம்பியனான ரஷ்யாவின் மரியா ஷரபோவா.

பிரான்ஸ் தலைநகர் பரிஸில் நடைபெற்று வரும் இப்போட்டியில் புதன்கிழமை. நடைபெற்ற மகளிர் ஒற்றையர் காலிறுதியில் ஷரபோவாவும், செர்பியாவின் ஜெலீனா ஜான்கோவிச்சும் மோதினர்.

இந்த ஆட்டத்தின் முதல் செட்டில் அபாரமாக ஆடிய ஜெலீனா, 6-0 என்ற கணக்கில் வெற்றிபெற்றார்.

இதன்பிறகு சுதாரித்துக் கொண்ட ஷரபோவா 2ஆவது செற்றில் வெற்றிப் பாதைக்குத் திரும்பினார்.

ஜெலீனா கடும் சவால் அளித்தபோதும், தொடர்ந்து போராடிய ஷரபோவா 6-4 என்ற கணக்கில் 2ஆவது செற்றை கைப்பற்றினார். இதன்பின நடைபெற்ற 3ஆவது செற் 6-3 என்ற கணக்கில் ஷரபோவா வசமாகவே, ஜெலீனா தோல்வி கண்டார்.

**அசரென்கா வெற்றி**

மற்றொரு காலிறுதியில் பெலாரஸின் விக்டோரியா அசரென்கா 7-6 (3), 6-2 என்ற நேர் செற்களில் ரஷ்யாவின் மரியா கிரி லென்கோவை தோற்கடித்தார்.

**ஃபெடரர் அதிர்ச்சி தோல்வி**

புதன்கிழமை இரவு நடைபெறற ஆடவர் ஒற்றையர் காலிறுதியில் உலகின் 3ஆம் நிலை வீரரான சுவிட்சர்லாந்தின் ரோஜர் ஃபெடரர் 5-7, 3-6, 3-6 என்ற நேர் செற்களில் உலகின் 6ஆம் நிலை வீரரான பிரான்ஸின் ஜோ வில்பிரைட் சோங்காவிடம் அதிர்ச்சி தோல்வி கண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பியன்ஸ் தொடர்

# 26 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்திய அணி முதல் வெற்றி

சம்பியன்ஸ் கிண்ணக் கிரிக்கெட்டில் முதல் லீக் போட்டி கார்டிபில் நேற்று நடைபெற்றது.. இதில இந்தியா - தென்னாபிரிக்க அணிகள் மோதின.

இங்கிலாந்தில், 7வது மற்றும் கடைசி சம்பியன்ஸ் டிராபி கிரிக்கெட் தொடர் நேற்று முதல் எதிர்வரும் 23-ம் தேதி வரை நடக்கிறது.

இதில் அவுஸ்திரேலியா உள்ளிட்ட 8 அணிகள் பங்கேற்கின்றன.

கார்டிப் நகரில் நேற்று நடந்த "பி" பிரிவு லீக் போட்டியில் இந்தியா- தென்னாபிரிக்க அணிகள் விளையாடின.

இதில் நாணயச்சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணித் தலைவர் டிவிலியர்ஸ் களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

இதையடுத்து இந்திய அணியின் ஆரம்ப வீரர்களாக தவான் மற்றும் சர்மா களமிறங்கினார்கள். இருவரும் நிதானமாக விளையாடினார்கள். ரோகித் சர்மா, ஷிகர் தவான் ஜோடி நல்ல ஆரம்பம் கொடுத்தது. டிசாட்சொபே பந்துவீச்சில் ரோகித் தலா ஒரு பவுண்டரி, சிக்சர் விளாசினார். மறுபுறம், பீட்டர்சன் ஓவரில் தவான் தொடர்ச்சியாக இரு பவுண்டரி அடித்தார். அரை சதம் கடந்த ரோகித் சர்மா 65 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். மறுமுனையில் கிளைன்வெல்ட் ஓவரில், ஹாட்ரிக் பவுண்டரி விளாசிய தவான் ஒரு நாள் அரங்கில் தனது முதல்





சதத்தை பதிவு செய்தார். ஒன்றிரண்டு ஓட்டங்களாகச் சேர்த்த ஹோலி 31

இந்திய அணி 50 ஓவரில் 7 விக்கெட்டுக்கு 331 ஓட்டங்களைக் குவித்தது.ஜடேஜா (47), புவனேஷ்வர் (0) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

332 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்கை நோக்கி விளையாடியது தென்னாபிரிக்கா.

தொடக்க வீரர்களாக அம்லா மற்றும் இக்ராம் களமிறங்கினர். இருவரும் வந்த உடனே அவுட் ஆகி வெளியேறினர். அடுத்து வந்த பீட்டர்சன் மற்றும் டிவில்லியர்ஸ் நிலைத்து ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர். புவனேஷ்வர் ஓவரில தொடர்ச்சியாக இரண்டு பவுண்டரி விளாசிய ரொபின் பீட்டர்சன் அரை சதம் கடந்தார். இவர் 68 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இஷாந்த் பந்துவீச்சில், டிவிலியர்ஸ் தொடர்ச்சியாக இரண்டு பவுண்டரி அடித்தார். இவரும் அரை சதம் கடக்க அணியின் ஸ்கோர் நல்ல முறையில் உயர்ந்தது. டுமினி (14) நீடிக்கவில்லை. இந்நிலையில் உமேசிடம் சிக்கிய டிவிலியர்ஸ் ( 70 ) ஓட்டங்களில் நடையைக்கட்ட, சிக்கல் ஆரம்பமானது. மில்லர் டக்-அவுட்டானார். டுபிளசி (30), கிளைன்வெல்ட் (4),



ஓட்டங்களில் பவிலியன் திரும்பினார்.

டுமினி பந்துவீச்சில் தவான் (114 ஓட்டங்கள்) ஆட்டமிழந்தார். பின் வந்த தினேஷ் கார்த்திக் (14), ரெய்னா (9) நிலைக்கவில்லை. மெக்லார்ன், டுமினி பந்துவீச்சில் தலா ஒரு பவுண்டரி விளாசிய தோனி 27 ஓட்டங்களில் நடையைக் கட்டினார். மறுமுனையில் கிளைன்வெல்ட் ஓவரில் ஜடேஜா இரண்டு பவுண்டரி அடித்தார். அஸ்வின் 10 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். டிசாட்சொபே (3) வெளியேறினர். கடைசி கட்டத்தில் மார்னே (8) பவிலியன் திரும்பினார். இறுதியில் தென்னாபிரிக்கா 50 ஓவர் முடிபில் 305 ஓட்டங்களை மட்டுமே எடுத்து அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

இதனால் இந்திய அணி 26 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

சிறப்பாக விளையாடிய தவான் ஆட்ட நாயகனாகத் தேர்வு செய்யப்பட்டார்.


## கிளிநொச்சி உருத்திரபுரீசுவரர் ஆலய அறங்காவல் சபையின் பொதுச் சபையைக் கூட்டுவதற்கான ஏற்பாடு

கிளிநொச்சி மாவட்டத்தில் பழம் பெருமை வாய்ந்த ஒரே சிவாலயம் இதுவாகும். நாற்சதுரவடிவமானஆவுடையார் கொண்ட சிவலிங்கம் அமைந்துள்ளமையே இதன் சரித்திரப் பெருமையை பழமையை எடுத்துக்காட்டும். திருக்கேதீச்சரத்தில் கண்டெடுக்கப்பட்டபழையசிவலிங்கம் கூட வட்ட ஆவுடைமயார் கொண்டது. உருத்திரபுரீசுவரர் ஆலயத்தில் கண்டெடுக்கப்பட்டு கோவில் தொண்டருளியுள்ளலிங்கம் நாற்சதுரவடிவுடைய ஆவுடையாருடன் கூடியலிங்கம். இது பழைமையான வரலாறு கொண்டது. வட்ட ஆவுடையார் கொண்ட சிவலிங்க வழிபாடு காலத்தால் பிந்தியது. இதுவே இதன் தொன்மைக்குச் சாட்சி. இத் தொன்மை வாய்ந்த உருத்திரபுரீசுவரர் ஆலயத்தின் அருளாட்சியை மாவட்டம் எங்கும் நிலவச் செய்யும் வகையில் பொதுச்சபைஅமைந்துள்ளது.

உருத்திரபுரீசுவரர் யாப்பின் உபபிரிவு 8-3ற்கு இணங்க கிளிநொச்சி மாவட்டத்தின் சகல பகுதிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஒவ்வொரு பிராந்தியத்திலிருந்தும் ஒன்பதுபேர்வீதம் தெரிவு செய்யப்படுவர். இவர்களே பொதுச்சபை உறுப்பினர்களாக இருந்து தலைவர்,செயலாளர்,பொருளாளர் உட்பட 21 பேர் கொண்டகுழுவைத் தெரிவுசெய்வார்கள். இந்த துணைத்தலைவர், துணைச் செயலாளர் உருத்திரபுரீசுவரர் ஆலய முகாமைத்துவத்துக்கு பொறுப்பாக இருப்பார்கள்.

*பிராந்தியங்கள் பின்வருமாறு*

உருத்திரபுரம் பகுதி

நான்கு கிராமசேவையாளர் பிரிவும் நான்கு பிராந்தியங்கள் 9 பிரதிநிதிகள் வீதம் 36 பேர் தெரிவு செய்யப்படுவர்.

| | |
|---|---|
| புளியம்பொக்கணை | 09 |
| முரசுமோட்டைபரந்தன் பகுதி | 09 |
| பூநகரிப்பகுதி | 09 |
| பல்லவராயன்கட்டுப்பகுதி | 09 |
| கரைச்சி கிழக்குப்பகுதி | 09 |
| கிளிநொச்சிநகரம், திருநகர், திருவையாறு, ஜெயந்திநகர் உட்பட | 09 |
| கனகபுரம் உட்பட உதயநகர் பாரதிபுரம் அம்பாள்குளம் உட் படசாலை வீதிக்கும் கண்டிவீதிக்கும் உட்பட்டபகுதி | 09 |
| அக்கராயன் ஸ்கந்தபுரம் வன்னேரிக்குளம் ஊற்றுப்புலம் அடங்கலாக அக்கராயன் ப.நோ.கூ.சங்கப் பிரதேசம் | 09 |
| பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் பிரிவு | 09 |

பதின்மூன்று பிராந்தியங்களினதும் உறுப்பினர்கள் தனித்தனிபிராந்தியப் பொதுச்சபை கூடப்பட்டு 9 பேராளர்களைத் தெரிவுசெய்து அனுப்புதல் வேண்டும். தெரிவுசெய்யப்பட்ட 13 x 9 =117 பேராளர்களும் கூடி தலைவர், செயலாளர், பொருளாளர் உட்பட 21 முகாமைக்குழு உறுப்பினரைத் தெரிவுசெய்வர். 13 பிராந்தியங்களிலிருந்தும் தனித்தனிகுறைந்தது ஒருவர் கட்டாயம் முகாமைக்குழுவிலே இடம்பெற வேண்டும்.

*தெரிவு இடம்பெறவேண்டியகால அட்டவணை*

பிராந்தியப் பொதுச்சபை கூடி தலா 9 பேராளர்களை 25.06.2013 க்கிடையில் தெரிவுசெய்து தலைவருக்கு அனுப்ப வேண்டும்.

மத்தியபொதுச்சபை 14.07.2013 காலை 11 மணிக்கு கோவில் முன்றலில் கூடி முகாமைக் குழு உறுப்பினர்களைத் தெரிவுசெய்வர்.சகலதெரிவுசெய்யப்பட்டமத்தியபொதுச்சபை உறுப்பினர்களும் தவறாது பங்குபற்றவேண்டும். மத்தியபொதுச்சபைக் கூட்டத்தில் இதுவரையான வரவுசெலவுகள் கொண்ட சகல கணக்கறிக்கைளும் சமர்ப்பிக்கப்படும்.

இது ஆரம்பப்பணிமட்டுமல்ல பாரியசமயப்பணியாக இருப்பதால் கடந்த காலங்கள் போலசகல பிரதேச செயலாளர்களும் அப்பகுதி கிராமசேவக உத்தியோகத்தர்களும் தொண்டு அடிப்படையில் அப்பகுதி கலாசார உத்தியோகத்தருடையஒத்துழைப்புடன் பிராந்திய சபை அமைக்க ஒத்துழைப்பு வழங்கி உதவுமாறுஅன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். இவர்கள் அவ்வவ்பகுதிகோவில் தலைவர்கள் உருத்திரபுரீசுவரர் அடியார்களைச் சந்தித்து உறுப்புரிமைகளை சேர்த்து பிராந்தியபொதுச்சபையை அமைப்பார்கள். ஒன்றுக்குமேற்பட்டகிராமசேவகபிரிவுகள்வருவதால் சகலரும் இணைந்து தமது பகுதிக்குள் செயற்பட்டு இத்தெரிவினைமேற்கொள்ளுமாறுஅன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

வருடச்சந்தா ரூபா 60/- ஆகும்

ஆயுட் சந்தா ரூபா 500/ - அல்லதுதிருப்பணிக்கு ரூபா 10000/ - க்குமேல் செலுத்தி இருப்பவர்கள் ஆயுட் சந்தாதாரர் ஆவர்.

எனவேசகல இம்மாவட்ட உருத்திரபுரீசுவரர் அடியார்களும் இச்சிவன் கோவிலின் பங்குதாரர்கள் ஆகுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

தற்போது உருத்திரபுரீசுவரர் கோயில் இருப்புக்குபாரியநெருக்கடியை எதிர் நோக்கியிருப்பதால் சகலரதும் பேராதரவும் தேவைப்படுகின்றது.

**இவ்வண்ணம்**
**தி.இராசநாயகம்**
**தலைவர்**
**உருத்திரபுரீசுவரர் ஆலய அறங்காவல் சபை**
**உருத்திரபுரீசுவரம், உருத்திர்புரம், கிளிநொச்சி**

(சி-3535)



## மரண அறிவித்தல்



### நடராசா வள்ளிமுத்து

மீசாலையைப் பிறப்பிடமாகவும், கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராசா வள்ளிமுத்து 06.06.2013 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா நடராசாவின் அன்பு மனைவியும், விஜயலட்சுமி, கமலநாதன், கமலாவதி, விஜயராணி, வசந்தராணி (சுவிஸ்), சோதிமலர், உதயமலர் ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக இன்று பிற்பகல் ஒரு மணிக்கு கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.32, 4ம் குறுக்குத்தெரு,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(2957)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டமைப்பு வெல்லட்டும்...

பாராளுமன்ற தெரிவுக்குழுவை மீண்டும் ஆரம்பிப்பதற்கு அரசாங்கத் தரப்பினரால் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இதில் கூட்டமைப்பு உட்பட எதிர்க் கட்சிகளுக்கு மீணடும் அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுவிக்க உள்ளதாகவும்,

அவர்களபங்குபற்றாது போனாலும் தெரிவுக் குழுவின் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு சில அமைச்சர்கள் ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

13வது அரசமைப்பு திருத்தச் சட்டத் திருத்தம், மற்றும் இனப்பிரச்சினைக்கான தீர்வு உள்ளிட்ட முக்கிய விடயங்கள் தொடர்பான சர்சைகள் எழுந்துள்ள நிலையிலேயே தெரிவுக்குழுவை மீண்டும் ஆரம்பிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதேவேளை 13 வது அரசமைப்பு திருத்த சட்டத்தை நீக்குவது தொடர்பான பிரேரணை ஒன்று அரசாங்க அமைச்சர்களால் கொண்டு வரப்படவுள்ளதாக செய்திகள் கசிந்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (எ-11)

## 13ஆவது திருத்த...

13-ம் திருத்தச் சட்டம் தொடர்பில் தீர்மானம் எடுக்க வேண்டிய நேரம் வந்து விட்டதாக அமைச்சர் ஹெகலிய குறிப்பிட்டுள்ளார். எவ்வாறெனினும் சகல அரசியல் கட்சிகளினதும் இணக்கப்பாட்டுடன் இறுதித் தீர்மானங்கள எடுக்கப்படும் என அவர் தெரி வித்துள்ளார்.

13-ம் திருத்தச் சட்டம் தொடர்பில் பாராளுமன்றத் தெரிவுக்குழு மூலம் தீர்மானம் எடுக்கப்பட வேண்டுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ யோசனை முன்வைத்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். நாட்டின் தலைவர் என்ற ரீதியில் பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ளத் தயார் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பா்ராளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கேற்காமையே, தீர்வுத் திட்டத்தை காண்பதில் தாமதமடைவதற்கான காரணமென அவர் குறிப்பிட்டுள்ளார்.(எ-11)

## மாகாண சபை...

அரசாங்கத்திடம் கோரியுள்ளது என சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாட்டு ஊடகவியலாளர்களுடன் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (எ-11)

## 11 ஆண்டுகளின்...

யாழ். பெருமாள் கோவில பகுதியைச் சேர்ந்த கு.கபிலன உள்ளிட்ட மூவரே கோப்பாய் பொலிஸாரினால் 2002 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 13ம் திகதி கைதுசெய்யப்பட்டு யாழ். நீதிவான் நீதி மன்றில் ஆஜர்ப் படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு யாழ்.சிறையில் தடுத்து வைக்கப்பட்டு இருந்தனர்

நண்பனை கொலை செய்த வழக்கில் முதலாம் சந்தேக நபரான கு.கபிலன் சார்பாக அவரது மனைவி கபிலன் தயானி யாழ். மேல் நீதிமன்றில் பிணை மனு தாக்கல் செய்திருந்தாீர்.

வழக்கு யாழ். மேல் நீதி மன்ற ஆணையாளர் ஜே.விஸவநாதன் முன்னிலையில் நேற்று வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

குறித்த சந்தேக நபரான கபிலனை 30 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும், ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு சரீர பிணைகளிலும் விடுவிக்கப்பட்டார்.(எ-11)

## கஞ்சா விற்ற...

எனவும் மற்றைய நபர் புத்தளத்தை சேர்ந்தவர் என விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இவர்கள் யாழின் சன நடமாற்றம் அற்ற பகுதி ஒன்றில் ஆட்டோ ஒன்றில் வைத்து கஞ்சா விற்பனையை மேற் கொண்டுள்ளதாகவும் இவர்களை சிவிலில் சென்ற பொலிஸார் விசாரித்த போது தப்பியோட முயற்சித்ததாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த இருவரும் தொடர்ந்தும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

## இலங்கை-சீன...

அவர் குறிப்பிட்டதுடன் 1962ம் ஆண்டு சீன - இந்தியப் போரின்போது இலங்கை. பர்மா. கானா. கம்போடியா. எகிப்து, இந்தோனேசியா ஆகிய அணிசேரா நாடுகளின் கூட்டத்தைக் கூட்டி, அப் போதைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க இருநாடுகளுக்கும் இடையிலான பிரச்சினையை தீர்த்து வைத்தார்.

அப்போது சிறிமாவோ பண்டாரநாயக்க நடவடிக்கை எடுக்காமல் போயிருந்தால் இந்தியாவின் ஒரு பகுதி அப்போதே சீனாவின் கட்டுப்பாட்டில் சென்றிருக்கும்.

உலகம் முழுவதிலும் உள்ள அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகளின் பொருளாதாரங்களில் சீனா முக்கியமான பங்கை வகிக்கிறது.

உலகின் 60 சதவீதமான முதலீட்டு நிதியும், மூலதன வளங்களும் சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ளன. நாம் விரும்பினாலும் சரி விரும்பாவிட்டாலும் அது தான் உண்மை.

இது ஒன்றும் பாதுகாப்பு சார்ந்த பிரச்சினையல்ல. இலங்கையின் முன்னேற்ற த்தைக் குழப்புவதற்கு வடக்கு மக்களைப் பயன் படுத்த இந்தியா முறபட்டால், நாமும் அதற்கெதிராக செயற்படுவோம் என அவர் எச்சரி க்கை விடுத்துள்ளார்.

இலங்கை, சீன உறவுகள் வலுப்படுத் தப்படுத்தப்பட்டுள்ளது இந்தியாவுக்கு கவலையை ஏற்படுத்தியுள்ளதாக கூறப்படுவது தொடர்பாக கருத்து வெளியிட்டபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (எ-11)


**ENGLISH THE EASY WAY**
Modern 5 Way Approach to English Language Learning
இலகுவழி ஆங்கில கற்கைநெறி
By: S.Muththulingam
சனி, ஞாயிறு காலை 9.00 - 11.00
செவ், வியா மாலை 3.00 - 5.00
இடம்: சிகரம் விரிவுரை மண்டபம்
153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
☎ 021 222 0011
முதல் வகுப்பு இலவசம்
(சி-3530)

**உலகில் எந்த மூலையிலும் உங்களுக்காக ஒரு தொழில்**
வழிகாட்டலும் உடனடி வாய்ப்புக்களும்
08-06-2013 சனிக்கிழமை காலை 9.00மணி
@ சிகரம் விரிவுரை மண்டபம்
பிரவேசம் இலவசம்
முற்பதிவுகளுக்கு 0773 616 798
சிகரம் கல்வி - தொழில் வழிகாட்டி
153. பலாலி வீதி. கந்தர்மடம். யாழ்ப்பாணம். (DAMROவுக்கு முன்னால்)
தொ.பே.: 021 222 00 11
மி.அ.:edusikaram@gmail.com web:www.sikaram.lk
(சி-3529)

வேலைவாய்ப்பு கூடிய....,சர்வதேச அங்கீகாரம் பெற்ற...,
குறைந்த செலவில்...., இலங்கையிலே.....,
விமானத்துறையில் பயிற்சியுடன் கூடிய கற்கைநெறிகள்...
✡ AIR CRAFT MAINTENANCE ENGINEERING ( 2 YEARS)
✡ FLIGHT ATTENDANT
✡ AIRLINE CATERING Affiliate with German EASA part 147
Male & Female
GCE ordinary level
18 years old
Fit and healthy
விசேட சந்திப்பு
8ம், 9ம் திகதிகளில் காலை 9am to 1pm
ACS, கோப்பாய்
Tel: 077-0071835 / 077-3967334
கோப்பாய் அரசினர் வைத்தியசாலை சந்தியில் இருந்து 100m தொலைவில்
(2954)

**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி**
க.பொ.த (உயர்தர) தொழில்நுட்பப் பாடங்களுக்கான
புதிய பிரிவு ஆரம்பம் - 15.07.2013
2013 - 2015 கல்வியாண்டில் தொழில்நுட்பப் பிரிவுக்கு அனுமதி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.
கல்வித் தகைமை: 2012 க.பொ.த. (சா/த) 1 ஆம் தடவை சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
விண்ணப்ப முடிவுத் திகதி: 19.06.2013
விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கவேண்டிய முகவரி:
அதிபர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்.
நேர்முகப் பரீட்சையின் மூலம் தகுதியான மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர்.
(சி-3519) - அதிபர்


## மரண அறிவித்தல்

## நாகலிங்கம் முத்துலிங்கம்



உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும், சுதுமலை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் முத்துலிங்கம் 04.06.2013 அன்று காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-பொன்னம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான அரியகுட்டி-லக்ஷ்சுமிபிள்ளை தம்பதியரின் மருமகனும், ஸ்ரீமதியம்மாவின் அன்புக் கணவரும்,

சிந்தாமணி, பூரணகாந்தி, அமரர் இந்திராணி, உலகேஸ்வரி, மனோன்மணி, கமலாதேவி, சோதிலிங்கம், அமரர் விஜயதாஸ் ஆகியோரின் சகோதரனும்,

லோகநாதன் (ஜேர்மனி), மோகனதாஸ் (கனடா), மதிவதனி( சுவிஸ்), குகநாதன்( பிரான்ஸ்), ஜெகநாதன்(பிரான்ஸ்), ரகுநாதன், சுதர்சினி, கஜானி ஆகியோரின் அன்புத் தந்தையும்,

சுதர்சினி(ஜேர்மனி), மதிவதனி(கனடா), ஞானதாஸ்(சுவிஸ்) ,பிரதா (பிரான்ஸ்), ஜெகன்(கயானி காலணியகம்-மானிப்பாய்), சிவரங்கன்( கனடா) ஆகியோரின் அன்பு மாமனும்,

ஓவியா, விதுஷன், அதிசயா, அக்ஷாட், அபினேஷ், அனோஜ், கிருஷான், அனுசன், யானுஜா, தன்ஷிகா, சயங்கன், சனுஜன், கஜீவ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 07.06.2013 இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

(2956)

## மருத்துவர் திருமதி லோஷனி லக்ஷ்மன் அவர்களின்

## 31 ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும்

- ✔ திருமதி லோஷனி லக்ஷ்மன் நோயுற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த வேளையில் அவருக்கு சிகிச்சையளித்த வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் பல வழிகளிலும் உதவி ஒத்தாசை புரிந்தவர்களுக்கும்
- ✔ மேலதிக சிகிச்சைக்காக வேலூர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்வதற்கு ஆலோசனை நல்கி உதவி புரிந்த மருத்துவ நண்பர்களுக்கும்
- ✔ ஏறக்குறைய ஆறுமாத காலம் சிகிச்சைக்காக இந்தியாவில் தங்கியிருந்த வேளை நேரடியாகப் பிரசன்னமாகியும் மற்றும் இங்கிருந்தும் உற்ற துணை புரிந்த அன்புள்ளங்களுக்கும்
- ✔ அவர் விரைவில் குணமடைய வேண்டுமென்று பிரார்த்தனை செய்த நல் உள்ளங்களுக்கும்
- ✔ இறுதியாக அவர் சிவபதம் அடைந்த பின்னர் பூதவுடலை இங்கு எடுத்துவர முழுமூச்சாக துணை நின்று உதவி நல்கியோருக்கும்
- ✔ இறுதி நிகழ்வின்போது பிரார்த்தனை செய்த சர்வமதப் பெரியோர்களுக்கும்
- ✔ அஞ்சலி உரைகள் ஆற்றியோருக்கும்
- ✔ பத்திரிகை வாயிலாக அஞ்சலி செலுத்தியோருக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டோருக்கும் அஞ்சலிப் பதாகைகள் வெளியிட்டோருக்கும் மலர்வளையம், மலர்கொத்து வழங்கியோருக்கும் மற்றும் தொலைபேசி, தந்தி, மின் அஞ்சல், குறுஞ்செய்தி, அஞ்சலி மடல்கள் மூலம் எம்துயரில் பங்குகொண்டோருக்கும்
- ✔ எல்லாவற்றிற்கும் மேலாக சகல வழிகளிலும் பூரண ஒத்துழைப்பு நல்கிய யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளருக்கும் நிர்வாகத்தினருக்கும்
- ✔ விசேடமாக எமது தேவைகளைப் பூர்த்தி செய்வதில் தோளோடு தோள்நின்று அனைத்து வழிகளிலும் அக்கறையுடன் உதவி நல்கிய யாழ்.போர்தனா வைத்தியசாலை உணர்வழியியல் துறையினருக்கும் இதய சிகிச்சைப் பிரிவினருக்கும்
- ✔ மற்றும் எம் துயரில் பங்குகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளம் கனிந்த நன்றியறிதலைச் சமர்ப்பிக்கின்றேன்.

(2950)

267, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

இங்ஙனம்
பூ.லக்ஷ்மன் குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.06.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.